தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு 120

தலைமலை கண்ட தேவர் இயற்றிய

# மருதூரந்தாதி

[பழைய உரையுடன்]

தஞ்சாவூர்

மஹாராஜா சரபோஜியின் ஸரஸ்வதி மஹால்

நூல் நிலையம்

※

சகம் 1890] விலை ரூ. 2-50 [கி. பி. 1968

தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு 120

தலைமலை கண்ட தேவர் இயற்றிய

# மருதூரந்தாதி

[பழைய உரையுடன்]

★

பதிப்பாசிரியர் :

வித்துவான் திரு. அடிகளாசிரியர்,

தமிழ்ப் பேராசிரியர்,

கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.



தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் குழுவிற்காக

கௌரவக் காரியதரிசி,

O. A. நாராயணஸ்வாமி, B. A., B. L.,

அவர்களால்

வெளியிடப்பட்டது.

★

சகம் 1890] விலை ரூ. 2-50 [கி. பி. 1968

# PREFACE

"Of what avail can all the learning be
if one adores not the feet of Omniscient God?"

So sang the immortal Saint-poet of Tamil Nad, Tiruvalluvar. It is the second stanza in his great and glorious work, Tirukkural, but second to none in the wealth of wisdom contained in it. The philosopher-poet of our own century, Dr. Rabindranath Tagore, has substantiated the dictum of Tiruvalluvar by setting up divine devotion as the goal of all his learning and he beseeches God thus in his Gitanjali:

"Let all my songs gather together their diverse
strains into a single current
And flow to a sea of silence in one salutation
to Thee."

Milton who has combined Earth and Heaven in his great poem, "Paradise Lost" set before himself as his poetic mission "to justify the ways of God to Man". By the consensus of the great poets of al nations and of all ages, who have survived the ravages of time, the true purpose of all poetry that lasts for ever, is to glorify the Lord.

**Thalaimalai Kanda Devar**, the author of *Marudur Andadi* comes of the heirarchy of such poets who

have laid their poetic achievements as an offering on the altar of the Omniscient Lord. His sweet Tamil Muse is as sacred as she is charming and she would not choose for her hero any one less than the Supreme Lord Siva, enshrined in Marudur. In one of his stanzas (St. 75), the poet says :

" Oh my Lord that abideth in luxuriant
Marudur !
Where the kine revel in feeding on the red
water lilies in the blooming ponds around !
I shall continue to extol Thee in songs of
purest Tamil,
till my very tongue gets fatigued "

Unlike many poets who set monetary benevolence of rich patrons, or public approbation and fame as the reward for their literary achievements, the illustrious author of this *Andadi* declares in one of the stanzas (St. 94) that the blissful approval of the God of his adoration is the only reward he expects for this poetic compostion :

Even like two ripe myrobolans, held in the palm
of my hand,
I shall keep before my vision, the well matched
pair of the feet of my Lord of Marudur.
I shall extol him with the stream of my flowing
song till it pleases Him to nod in sweet
approval
His head, adorned with the flowing stream of
Ganga.

The poet has set before himself the highest possible iiterary ideal and we leave it to the readers to

satisfy themselves how far the poet has achieved his end. We cannot know whether Siva nodded his head. We are sure we do so and we may well conclude that Siva might have done so too.

We have offered to our readers several *Andadi poems* already from out of our manuscripts. Here we add one more to the list. Unlike many other authors of *Andadi* who have chosen to give vent to their thoughts in spoantaneous and simple expression, Thalaimalai Kanda Devar has set before himself a highly literary and enbellished pattern of verse. *Madakku* is a literary technique in Tamil, consisting of the employment of pun and it is mingled here with the figure of sound called *Yamaka*. According to this technique, a word, simple or compound, is repeated with the symphony of alliteration, yielding at every repetition a different interpretation, either by panaromasia or by various syllabification of the expression. While yielding sweetness of assonance, it contributes to deepen the scholarship of the reader. The author has adopted this technique with remarkable success in this *Andadi*. His maintaining this style throughout, with uniform elegance, testifies not only to the poet's skill in versification but also to his profound mastery of the Tamil vocabulary. The sentiments are of a very high order and the allusions and references are both profuse and profound.

This publication is based on manuscripts No. M. 698 and M. 142, preserved in this Library. Although the work has been published before and elsewhere with or without commentaries, we are now giving our readers, for the first time an old and

unpublished commentary. The learned editor of the book, Thiru Adigalasiriyar, Professor of Tamil, in Karanthai Pulavar Kalloori is really, as his position implies, a teacher of teachers, and he has brought to bear on the work of editing this book a rare acumen and scholarship. We are indeed grateful to him for his service to the Library and, through the Library, to the world of students and scholars of Tamil everywhere.

Our thanks are due, in no small measure, to the State Government of Madras for their munificient grant for our publications, which has rendered it possible for us to bring out of obscurity many of the priceless gems like this contained in the mine of this Library.

Thanjavur,
30—3—1968.

*O. A. Narayanaswami,*
*Honorary Secretary,*
T. M. S. S. M. LIBRARY.

# முகவுரை.

'அந்தாதி' என்னுஞ் சொல் சமய உண்மைப் பொருளை அறிவித்து நிற்கும் ஓர் அழகான சொல்லாகும். இது எவ்வாறு சமய உண்மைப் பொருளை உணர்த்தி நிற்கின்றது என்பதைக் கீழே ஆராய்ந்து காண்போம். "காணப்பட்ட இவ்வுலகம் அழிவதுமில்லை; அழிந்து பின் தோன்றுவதுமில்லை; எப்பொழுதும் இருப்பாகிய ஒரு நிலையிலேயே இது இருக்கும்; இக் காரணத்தால் இவ்வுலகத்தை அழித்தற்கும் ஆக்குதற்கும் நிமித்த காரணனாகிய ஓர் கடவுள் இவ்வுலகிற்கு வேண்டப்படுவதில்லை" என்று சில சமயவாதிகள் கூறி வருகின்றனர்.

ஆனால், சைவ சமயத்தவரோ இக்கொள்கைக்கு மாறாக, "இவ்வுலகம் அவன் அவள் அது என்னும் அவயவப் பகுப்புள்ளதாகவே உள்ளது; இவ்வவயவப் பொருள்களெல்லாம் நாடோறும் அழிந்து போதலையும் உண்டாதலையும் நாம் கண்கூடாகவே பார்க்கிறோம்; எனவே, இவ்வவயவப் பொருள்கட்குண்டாகும் அழிவும் ஆக்கமும் இவற்றிற்கு முதலாகிய உலகத்திற்கும் ஒரு நாள் உண்டாகக்கூடும்; அவன் அவள் அது எனும் அவயவப் பொருள்கட்கும் இவற்றிற்கு முதலாகிய உலகத்திற்கும் அழிவையும் ஆக்கத்தையும் செய்வதற்கு நிமித்த காரணமாகிய பேரறிவுப் பொருளொன்று வேண்டப்படும்" என்று கூறுகின்றனர்.

மேலே கூறியவாறு இந்த உலகத்தை அந்தப்படுத்தியும் ஆதலாக்கியும் நிற்கும் கடவுட்கு 'அந்தாதி' என்ெறாரு பெயரிட்டு வழங்குகின்றனர் அறிஞர்.

**"எந்தாய் அருளென் ெறாரிளங் குமரன்**
**அந்தா தியையேத் தலும்வை துசினக்**
**கொந்தா ரழல்போல் வருகூற் றுவனை**
**அந்தாள் கொடுதைத் ததறிந் திலையோ"**

(காமதகனம்—27)

என்னும் **கந்த புராணப்** பாட்டுள் சிவபெருமான் **அந்தாதி** என்று கூறப்பட்டிருத்தலைக் காண்க. **மெய்கண்ட தேவ நாயனாரும்** இவ்வுலகத்திற்கு அந்தத்தைச் செய்பவனே ஆதலையும் செய்யும் ஆதியாவான் என்னுங் கருத்தால் **' அந்தம் ஆதி என்மனார் புலவர் '** (சிவ-போ-1) என்று கூறியுள்ளார்.

மேலே கூறியவற்றால் **'அந்தாதி'** என்னுஞ் சொல் சைவ சமய உண்மைப் பொருளை அறிவித்துக்கொண்டு, அக்காரணத்தால் அது கடவுட்கு ஒரு பெயராயும் அமைந்திருத்தல் நமக்குப் புலனாகின்றது.

இவ்வியல்பு வாய்ந்த அந்தாதி என்னும் இப்பெயர் கடவுட்குரிய பெயராக வழங்குவதுமன்றி, தமிழிலக்கிய வகையுள் ஓர் இலக்கியத்திற்கும் பெயராக அமைந்துள்ளது. ஒரு பாட்டின் அந்தம் அடுத்த பாட்டு ஆதலுக்கு ஆதியாக அமையும்படி, வெண்பா அல்லது கலித்துறையால் விரும்பிய பொருளை அமைத்து நூறு பாக்கள் அமையப் பாடினால் அது அந்தாதி என்னும் இலக்கியமாகும்.

**மருதூர் அந்தாதி** என்னும் இவ்விலக்கியம் **தலைமலை கண்ட தேவர்** என்னும் புலவர் பெருமானால் பாண்டிய

நாட்டிலே **நயினர் கோவில்** என இக்காலத்து வழங்கும் **மருதூரில்** கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் **சிவபெருமானைப்** பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கட்டளைக் கலித்துறை என்னும் பாட்டால் மடக்கு என்னும் சொல்லணி பொருந்தப் பாடப்பெற்ற ஓர் **யமக அந்தாதி** யாகும். இதனைப் பாடிய தலைமலை கண்ட தேவர் வரலாறும், மருதூரந்தாதியிற் காணப்படும் கதை முதலானவற்றின் வரலாறும் மற்றோரிடத்திற் காணலாம்.

## அகப்பொருட்டுறை

இவ்வந்தாதியுள் 2, 7, 8, 9, 13, 16, 18, 25, 27, 30, 37, 40, 44, 45, 52, 56, 68, 76, 77, 83, 85, 86, 92, 95, 96, என்னும் எண்ணுள்ள பாடல்களெல்லாம் அகப்பொருட்டுறையமைந்தனவாகும்.

## கதைகள்

இவ்வந்தாதியுள் சைவ புராணக் கதைகளிற் பல ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளன. விரிவஞ்சி அவற்றையெல்லாம் இங்கே குறிப்பிடவில்லை. சமயகுரவர் நால்வருள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்க வாசக சுவாமிகள் என்னும் இருவரின் வரலாற்றிற் சில செய்திகள் இவ்வந்தாதியுள் குறிக்கப்பட்டுள்ளன. இறைவன் அவையார் முன் ஆவணம் காட்டிச் சுந்தரரை ஆட்கொண்ட செய்தி 11ஆம் பாட்டிலும், பரவை நாச்சியாரின் ஊடலைத் தீர்ப்பதற்காக இறைவன் தூது போன நிகழ்ச்சி 61, 74ஆம் பாட்டிலும், மாணிக்க வாசகர்க்காக இறைவன் பரியின்மேலே வல்லையத்தை அசைத்துக் கொண்டு பாண்டியன் முன் வந்தது 86ஆம் பாட்டிலும்,

இறைவன் பாண்டியன் பிரம்படி கொண்டது 12 ஆம் பாட்டிலும் குறிக்கப்பட்டுள்ளன. இறைவன் மதுரையில் நிகழ்த்திய திருவிளையாடல்களுள் வளையல் விற்றது 13ஆம் பாட்டிலும் வலை வீசியது 15, 66, 78ஆம் பாட்டிலும் மதுரையிலிருந்து அரசாண்டது 90ஆம் பாட்டிலும் குறிக்கப்பட்டுள்ளன. இறைவன் மன்மதனை எரித்த கொறுக்கை வனத்தில் எழுந்தருளியிருக்கிறார் என்ற செய்தி 17ஆம் பாட்டில் கூறப்பட்டுள்ளது.

## சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

சிவ புண்ணியம் செய்யாதவர் இறைவன் திருவடியை அடையமாட்டார் என்ற செய்தி 57ஆம் பாட்டில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பதிப் பொருளாகிய சிவம், சூரியனும் பிரமனும் திங்களும் திருமாலும் நிலமும் நீரும் தீயும் காற்றும் ஆகாயமுமாகிய எல்லாமாய் அல்லதுமாய் விளங்கும் என்னும் இலக்கணம் 3ஆம் பாட்டுள் கூறப்படுகின்றது. — இக்கருத்து "அவையே தானேயாய்" என்னும் சிவஞான போத நூற்பாவின் கருத்தைத் தழுவியுள்ளது. ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களை 50, 91ஆம் பாட்டுகள் குறிப்பிடுகின்றன. சைவ காவியங்களைக் கற்றல் இறைவன் திருவடியடைதலுக்கு ஏதுவென்று 57ஆம் பாட்டு கூறுகிறது. குலம் முதலான பல பொருள்களைத் துறந்து இறைவனுக்கு ஆட்படவேண்டும் என்னும் செய்தி 59ஆம் பாட்டிலும், இறைவனுடைய திருவடியைச் சென்னிமேல் வைக்க வேண்டுதல் 21 பாட்டிலும், இறைவன் தன் தொண்டர்க்குக் கொடுக்கும் பதம் திருமால் பதத்திற்கு அப்பாற்பட்டது என்னும் செய்தி 26ஆம்

பாட்டிலும், இறைவன் திருவடியை வணங்கினவர்க்குக் கிடைக்கும் பேறு கடைசிப்பாட்டாகிய 100ஆம் பாட்டிலும் கூறப்பட்டுள்ளன.

## நால்வர்க்கு அருளியது

இறைவன் கல்லால மர நிழலிலிருந்து நான்மறை ஆறங்க முதல் கற்ற கேள்விவல்லாராகிய நால்வர்க்கு மறைப்பொருள் உணர்த்தினன் என்பர். அந்நால்வர் அகத்தியர் புலத்தியர் சநகர் சநற்குமாரர் என்பவராவார் என்றும் சநகாதி நால்வராவாரென்றும் இரண்டு வகையாக அறிஞர் கூறுவர். இவ்விரண்டு கருத்துள் முதற்கருத்திற்குச் சான்ருக அகத்தியர் முதலான நால்வரைக் கருதி "வண்டமிழ்க் கமண்டல முண்டமுனி முதல் நால்வர் வணங்கும் ஐயன்" என்று இந்நூல் குறிப்பிடுகின்றது.

## தமிழ்

அகத்திய முனிவர்க்கு ஆயமாக(உயிராக)இருப்பது தமிழ் என்னுஞ் செய்தி 79 ஆம் பாட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

## நூலாசிரியரைப்பற்றியன

"கங்குலிலே காவலாகிய மதிலைக் கன்னக்கோலால் அறுக்கும் கள்ளராயினும் மருதூரனைத் தொழுதால் அவர் மண்ணுலக வேந்தரும் விண்ணுலக வேந்தரும் ஆவர்" என்று 51ஆம் பாட்டு கூறுகின்றது. இப் பாடலைக் கூர்ந்து நோக்கின் இந்நூலாசிரியரின் மரபு இன்னதென்று நாம் அறிந்து கொள்ளுதல் கூடும்.

இந்நூலாசிரியர் இறைவனை நோக்கி "மருதூர் உறையும் ஈசனே! உன்னை அருந்தமிழால் துதிப்பேன்; கால தூதர் என்னிடத்து வருவதால் அவர்கட்குப் பயனில்லை" என்று 76ஆம் பாட்டில் கூறுகின்றார். மேலும் அவர் 94ஆம் பாட்டில் "என் கவிப்பாட்டை இறைவன் சிரம் அசைக்கும்படி பாடுவேன்" என்று கூறுகிறார்.

## தலைமலை கண்ட தேவர் வரலாறு.

**மருதூரந்தாதி** என்னும் சொற்றொடரிலக்கியத்தைப் பாடிய புலவர் **தலைமலை கண்ட தேவர்** என்னும் பெயரினையுடையவராவார். இவருடைய வரலாற்றைப் பலரும் பலவிதமாகக் கூறுவர். அவருள் **புலவர் புராணம்** பாடிய **முருகதாச சுவாமிகள்** கூறுவன கீழ்வருமாறு உள்ளன.

இவர் **சோழநாட்டிலோ, பாண்டியநாட்டிலோ** பிறந்திருக்கலாம்; இவர் பிறந்த ஊர் இன்னதென்று தெரியவில்லை. பெற்றோர் பெயரும் அறிவதற்கு வழி இல்லை. ஆனால் இவர் **மறவர்** குலத்திலே பிறந்தவர் என்பது மட்டும் தெரிகின்றது என்பர். தலைமலை கண்ட தேவர் மறவர்குலத்தில் பிறந்தவர் என்பதற்குத் தேவர் என்னும் பட்டப்பெயரும், தாம்பாடிய மருதூர் அந்தாதி 'காவலராவர்' என்னும் பாட்டில் "**கங்குலில் மதில் காவலை அராவுகின்ற கன்னக்கோல் ஏந்திய கள்ளராயினும் மருதூரன் திருவடியைப் பணிந்தால் அவர் இவ்வுலகத்திலே காவலராவர் மறுமையில் உம்பர்க்கு இறை ஆகுவர் 51)**" என்று கூறியிருத்தலும் சான்றாக உள்ளன.

இவருடைய வரலாற்றைப் பாடத் தொடங்கிய புலவர் புராணமுடையார்

"கல்வரைத்தோள் மறவர்குல திலகமெனப்
பிறந்துதமிழ்க் கவியா லீசன்
பல்வளஞ்சொற் றுயர்ந்ததலை மலைகண்ட
தேவனிசை பகர்கின் றேனே",

என்று தொடங்குகின்றார். இவர் இளமையிலேயே மறவர் குலப் பழக்கத்தை விட்டு, நல்லோருடைய பழக்கமும் தூய பண்பும் சிவ பக்தியும் உடையவராய் விளங்கிச், செந்தமிழ் பயிலும் நாவலனாதற்கே விருப் பங்கொண்டிருந்தனர். இதனை

பாலியந் தொட்டு நல்லோர்
பழக்கமுந் தூய பண்பும்
ஆலிலைத் துயின்றோன் காணா
அரவிந்தப் பதத்தி லன்பும்
நாலியல் புடைய பாவும்
நவின்றுநா வலனா மாசை
மேலிடுந் தகவுந் தோய்ந்தான்
வெஞ்சமர்த் தொழில்கற் றில்லான் (3)

வில்லெடுத் தொருபுள் ளேனும்
வீந்திடத் தெறித்தி லான்றோள்
மல்லெடுத் தெவனோ டேனு
மாநிலத் துருண்டி லான்வன்
கல்லெடுத் தனைய சிந்தைக்
கவிஞரு முருகு மின்பச்
சொல்லெடுத் தடுக்கிப் பாடும்
தோற்றமே கருதி நோற்றான் (4)

என்னும் புலவர் புராணப் பாட்டு இனிது விளக்கும்.

இவர்க்குத் திருமணப் பருவம் வந்தது. தமக்கு ஒத்த மறவர் குலத்திலே தக்க ஒரு பெண்ணை நாடி மணம் செய்து கொண்டனர். அவ்வம்மையார் நன்கு கற்ற தம் கணவனிடத்திலே பேரன்பு வைத்து அவரைத் தெய்வத்திலும் சிறந்தவராகக் கருதிப் போற்றியொழுகினர். கல்லாத மனைவியும் கற்ற கணவனுமாக இவ்விருவர் இருந்தாலும் இவ்விருவருடைய காதல் வாழ்க்கை மிகச் சிறந்திருந்தது.

இவ்வம்மையார்க்கு ஏழு தமையன்கள் இருந்தனர். இவ்வெழுவரும் சிறிதும் கல்வியறிவில்லாதவர்கள். தம் குலத்தொழிலாகிய களவுத் தொழிலில் நன்கு பயிற்சி பெற்று அதனால் பொருளீட்டி வாழ்ந்தனர். தலைமலை கண்ட தேவரோ அக்களவுத் தொழிலிற் சிறிதும் நாட்டமின்றிக் கல்வியிலேயே நாட்டமுடையவராய் எப்பொழுதும் ஏடும் கையுமாக இருந்துவருவாராயினர் இப் புலமைத் தொழிலில் மிகுதியான வருவாய் கிடைக்கவில்லை. அதனாலே குடும்பத்தில் வறுமை உண்டாகிவிட்டது. புலவரின் மனைவியார் ஈதலும் துய்த்தலும் நன்கு நிகழாமையினால் உடலும் உளமும் வாடி நின்றார். காதலியின் வாட்டத்தை உணர்ந்த கவிஞர் :' நீ வருந்தாதே; நம் பக்குவம் அறிந்து நம்மைப் பரமன் ஆண்டருள்வான்; அதன்பின் நமக்கு எல்லாச் சிறப்பும் எய்தும்; நம் குலத்தொழிலாகிய களவுத் தொழிலிலே ஈடுபட்டு ஈட்டுவது பொருளே அன்று! எவ்வளவு வறுமை உண்டானாலும் களவுத் தொழிலை ஒரு தொழிலாகக் கருதிச் செய்யேன் " என்று தம் 'இல்லக் கிழத்திக்கு' அடிக்கடி ஆறுதல் கூறி வந்தனர்.

ஆனால், கற்றறிவில்லாத அவ்வம்மையார் இவ்வாறுதல் மொழியைச் சிறிதும் ஏற்றுக் கொள்ளாமல் "தாங்கள் தனியாகக் களவாடச் செல்லாவிடினும் என் தமையன்மார்களுடன் ஒப்புக்காவது சென்று வாருங்கள்" என்று கண்ணீரொழுக வருந்திக் கூறினர். புலவர் அதற்குச் சிறிதும் இசைவின்றியே இருந்தனர்; குடும்பத்தை வறுமைத் தீ பல வழியிலும் வாட்டி வந்தது.

புலவரின் மனைவியார் கல்லாதவராயிருப்பினும் கற்பொழுக்கத்திலே மிகச் சிறந்தவராயிருந்தார். அதனால், அவர் தம் கணவனை உள்ளத்தால் வெறுக்காமல், தன்னுடன் பிறந்த தமையன்மார் மனைவியரெல்லாம் உண்டும் உடுத்தும் உளமகிழ்வுட னிருத்தலை உணர்ந்து தமக்கு அப்பேறில்லாமையினாலே நாணித், தமையன்மார் மனமிரங்கி அளிக்கும் சிறிது பொருளை வாங்கியும் பலரிடத்திலே கடன் வாங்கியும், புலவர் ஈட்டும் சிறிது பொருளைப் பெற்றும் ஒருவாறு இல்லறத்தை நடத்தி வந்தனர்.

மனைவி அடையும் வருத்தத்தைக் கண்டு புலவர் மிகவும் வருந்தினர் தம் வழிபடு கடவுளாகிய மருதூர்ச் சிவபெருமானைக் கருதித் தம் வறுமையைத் தீர்த்து வைக்கும்படி யமக அந்தாதி யொன்று பாடினார். இறைவனுக்கு இத்தகைய தொண்டுகளைச் செய்தும் இவர் வறுமை நீங்கவில்லை. வறுமையின் கொடுமையைப் பொறுக்க முடியாத புலவர் ஒருநாள் தம் மனைவியிடம் "நீ விரும்பியவாறு உன் தமையன்மார்களுடன் ஏகுதற்கு எண்ணினேன்." என்றார். இதனைக்கேட்ட அவ்வம்மையார் மிகவும் மகிழ்ந்து, இச்செய்தியைத் தம் தமையன்மார்கட்குத் தெரிவித்தார். அவர்களும் இவரைத் தாம்

செய்யும் களவிற்கு உடனழைத்துச் செல்ல உடன் பட்டனர். பின்னர் எழுவரும் புலவரை நேராகக் கண்டு அவர்தம் இசைவைப் பெற்றனர். பின்னர் அவருடன் களவுத்தொழிலைப்பற்றி ஏதேதோ கூறினர். அவற்றை யெல்லாம் கேட்ட புலவர் அவர் கூறிய ஒன்றையும் மறுத்துரையாமல் திருவைந் தெழுத்தை ஓதிச் சிவபெரு மானைக் கருதிக்கொண்டு எல்லாம் இறைவன் செயல் என்று வாளா யிருந்தார்.

திருப்பூவணத்திலே ஒருவன் பெருஞ் செல்வனுகவுள்ளா னென்றும் அவன் வீட்டிலே களவு செய்தால் பொன் னும் மணியும் பொருளும் மிகுதியாகக் கிடைக்குமென் றும் ஏழு மைத்துனரும் கேள்விப்பட்டனர். உடனே தக்க காலத்தை ஆராய்ந்துகொண்டு திங்கள் ஒளியில் லாத இரவிலே தம் மைத்துனப் புலவருடன் அப்பதி நோக்கிப் புறப்பட்டனர்.

மேலே குறிப்பிட்ட அச்செல்வன் மிகவும் தூய உள்ளம் படைத்தவன். திருப்பூவணத்திலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானிடத்தில் அளவற்ற அன்புடையவன். மேலும் நன்கு கற்றவன். பாடலியற்றும் ஆற்றல் படைத்தவன். அன்னேன் நாடோறும் ஒரு வெண்பாவினைத் திருப்பூவணநாதர் மேற்பாடிக் கைகுவித்து வணங்கிய பின்னரே உறங்கச் செல்வான். இவ்விரதத்தை அச்செல்வன் ஒரு பன்னி ரண்டு ஆண்டாகப் பின்பற்றியிருந்தான். ஒருநாள் வழக்கப்படித் திருப்பூவண நாதர் மீது பாட்டியற்றத் தொடங்கினன். அப்பாட்டு

**" தலையி லிரந்துண்பான் தன்னுடலிற் பாதி**
**மலைமகளுக் கீந்து மகிழ்வான் "**

என்று பாதிப் பாட்டளவே தோன்றி நின்றுவிட்டது. அதற்கு மேல் எவ்வளவு முயன்றும் மற்ற பாதிப் பாட்டுத் தோன்றவில்லை அச்செல்வன் மிகவும் வருந்தினன். உறங்காமல் அப்பாதிப் பாட்டினையே அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருந்தான். அவ்விரவும் போயிற்று. அடுத்த நாட்களும் ஒன்றன் பின்னொன்றாகக் கழிந்தது. ஒரு திங்களும் ஆகிவிட்டது செல்வனுக்குக் கவற்சி பெரிதாயிற்று நன்கு உண்ணவில்லை உறங்கவில்லை. அவனுக்குச் சீதபேதி என்னும் நோயும் உண்டாகி உடலை வாட்டிற்று. அதனால், ஆற்றலிழந்து படுக்கையிலே கிடந்துவிட்டான். அவ்வாறு அவன் கிடந்தாலும் பாடத் தொடங்கிய அரைப்பாட்டினை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதே அவன் வழக்கமாயிருந்தது.

தாம் கருதியவாறு களவு செய்தற்கு வந்த அவர் அச்செல்வனின் மனையுள் கன்னமிட்டுப் புகுந்து புறக்கடை வாயிலைத் திறந்துவைத்துவிட்டு மனையுள்ளிருந்த அளவற்ற சிறந்த பொருள்களை யெல்லாம் களவிட்டுத் தமக்கு ஏழும் தம் மைத்துனர்க்கு ஒன்றுமாக எட்டுச் சுமைகளைக் கட்டித் தம் மைத்துனப் புலவர்முன் கொண்டுவந்து வைத்தவுடனே பலபேர் தம்மை வளைத்துப்பிடிக்க வருவது போன்ற தோற்றம் இறைவன் திருவருளால் அவ்வெழுவர்க்கு மட்டும் தோன்றிற்று. அதனால், அஞ்சிய எழுவரும் தம் மைத்துனருடன் ஒன்றும் கூறாமல் மிக விரைந்து ஓடிவிட்டனர். அதனை அறிந்துகொள்ளாத புலவர் தம் மைத்துனர் எழுவரும் எதனைக் கருதியோ சென்றிருக்கின்றனரென்று கருதி, அவர் வருகைக்காகக் காத்துக்கொண்டு அம்மனையின் ஒருபுறத்திலே ஒளிந்திருந்தார். அப்பொழுது அவ்வீட்டிற்குரிய செல்வன் படுக்கையிற் கிடந்தவாறே தான்

பாடத்தொடங்கி முடிவு பெருத பாதிப்பாட்டினைக் கூறிக்கொண்டிருந்தான். இதனைக் கேட்ட புலவர் இவ் வீட்டிற்குரிய செல்வன் ஒரு பாவலன் போலும்; பாவம்! பாதிப்பாட்டினை இறைவன் மேல் பாடத்தொடங்கி, அது முடியாமல் மனங்கலங்குகின்ருன்; இதனை நாம் பாடு வோம் என்று கருதி,

" உலையில் இருப்புவண மேனியஞர் என்ருலோ "

என்று கூறினர். இதனைப் படுக்கையிலிருந்த செல்வன் கேட்டு மிகவும் பரவசமாகி எழுந்து

" ஆம் ஆம் திருப்புவண நாதன் றிறம் ',

என்று எஞ்சியவற்றைப் பாடி முடித்தான். அப்பாட்டு

தலையி லிரந்துண்பான் றன்னுடலிற் பாதி
மலைமகளுக் கீந்து மகிழ்வான் — உலையில்
இருப்புவண மேனியஞர் என்ருலோ ஆம் ஆம்
திருப்புவண நாதன் றிறம் "

என்று முழு வடிவம் பெற்று விளங்கிற்று.

உடனே அச் செல்வன் அவ்வோசை வந்த வழியே போய், அங்கிருந்த புலவரைத் தழுவிக்கொண்டு, என் ஆசையை முடித்து என் உயிரை உடம்பில் தங்கியிருக்கு மாறு செய்தாய்; இவ்வாறு செய்த நீ சிவனே? அல்லது அவன் அருள்வழி யொழுகும் தவனே? உண்மையை உரைக்க வேண்டும் என்ருன். இதனைக் கேட்ட புலவர் தம்மை இன்னுரென்றுரைத்தற்கு நாணி, " ஐய! உன் னிடத்திலே உதித்த அரைக் கவியும், யான் சொன்ன சொற்களும், அதன் பின் நீ கூறிய சொற்களும் சேர்ந்து ஒரு அழகான பாட்டாயிற்று. என்னை யார் என்று கேட்டாய்; நான் நன்றறி மூடர்களுள் ஒருவனுவேன் " என்று நவின்ருர். செல்வனும் ஏவலாளர்களைக் கூவி,

விளக்கினைக் கொண்டுவரச் செய்து, பார்த்த பொழுது, தன் வீட்டில் களவு செய்த பொருள்களையுடைய எட்டுச் சுமைகளையும், புறக்கடை வாயில் திறந்திருத்தலையும், புலவரின் சைவத் திருக்கோலத்தையும் கண்டு, வியப்புற்று நிகழ்ந்ததென்ன என்று வினவினான். புலவரும் நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கூறினார், இதனைக் கேட்ட செல்வன் இது இறைவன் திருவிளையாடலாயுள்ளது என்று கருதி, அச் சுமைகள் எட்டனையும் ஒரு பால் வைக்கச் செய்து புலவர்க்குச் செய்ய வேண்டிய உணவு முதலிய உபசாரங்களையெல்லாம் சிறந்த முறையிற் செய்த பின்னர் புலவர் வழங்கிய சிந்தைக் கினிய செவிக் கினிய பாவமிழ்தத்தைப் பருகிக் கொண்டிருந்தான். பின்னர் ஓடிய எழுவரையும் அழைப்பித்து உபசரித்து, அவர்கள் களவு செய்த அப் பொருள்களுடன் புலவரை அனுப்பிக்கக் கருதிய அச் செல்வன் "இங்கே புலவர் நலமாயுள்ளார்; தாங்கள் எழுவரும் இங்கு வந்து புலவரை அழைத்துச் செல்க" என்று முடங்கலொன்று எழுதி, அம்முடங்கலை அவர்கட்குத் தக்கார் வசம் அனுப்பினான்.

இந் நிகழ்ச்சி இவ்வாறு நிற்க, இரவிலே ஓடிய எழுவரும் ஓரிடத்தே கூடிக், களவு செய்து தப்பிக்கொள்ளும் வழியறியாத கற்றறி புலமை மைத்துனர், வளைந்தவர் கையுள் அகப்பட்டுக் கொண்டார் போலும்; அகப்பட்டுக் கொள்ளின் அவ்வருமைப் புலவரின் சிறப்பறியாமல் அவரைக் கொன்றுவிடுவார்களே; நம் தங்கைக்கு என்ன சொல்லப் போகின்றோம்; இன்று நன்றாகக் களவுப் பொருள் கிடைத்தது; அதனை தவறுமற் கொண்டு வந்து சேர்க்கும் வாய்ப்பினை இழந்தோமே; அப்பொருள் போனாற் போகட்டும்; நம் சிறந்த மைத்

துனரை இழந்தோமே; இத் தொழிலில் விருப்பமும் பழக்கமும் இல்லாத அவரை அழைத்துச் சென்றது நம் மடமையே யாகும்; என்றும் போல நாம் களவாடுவதில் சிறிது நம் தங்கைக்குக் கொடுத்திருக்கலாமே என்று, பலவாறு கருதிக் கொண்டு தம் வீடு வந்து சேர்ந்தனர் பொழுது விடிந்தது. தங்கையும் தமையன்மார்களை வினவிச், செய்தி உணர்ந்து, மிகவருந்தி, இனி யான் உயிர்வாழேன்; தண்ணீர் முதலிய எதனையும் அருந் தேன்; அவருக்கு உற்ற, நிலையை அறிந்து வாருங்கள் என்று கூறி மிகவும் அழுதாள்.

அப்பொழுது செல்வன் விட்ட முடங்கல் வந்து சேர்ந்தது. அதனைப் படித்துணர்ந்து எல்லோரும் மிக மகிழ்ந்தனர். தம் மைத்துனர் கற்ற கலைவலியினும் தம் வாள் வலி தாழ்ந்ததென்பதை எழுவரும் உணர்ந்தனர். ஆனால் அம்முடங்கலில் ஏழு மைத்துனர்களும் வந்து புலவரை அழைத்துச் செல்ல வேண்டும் என்று எழுதி யிருப்பதைப் பலமுறை ஓர்ந்து, அப்படி எழுதியிருப்பது எழுவரையும் அகப்படச் செய்யும் சூழ்ச்சியாக இருக் குமோ என்று எண்ணி, ஐயுற்றுச், சல்லடம் அணிந்து, கச்சை மேலிறுக்கித், தம்மரபின் முறைப்படி உருமாலை கட்டிக்கொண்டு, பலவகை அணிகளையும் அணிந்து கொண்டு, மஞ்சட் கலையுடுத்துச் செருப்பிட்டு வல்லியம் என்னும் படையைக் கையிற் கொண்டு போர்க்குச் செல் பவர் போன்றே அங்கு சென்றனர். வழியில் நல்ல சகுனம் நிகழ்ந்தது. அதனல் மனம் தேறி, எழுதிய முடங்கல் உண்மையாகவேயிருக்கலாம்; நமக்குத் தீமை எதுவும் நிகழாதென்று கருதிக்கொண்டு சென்று தாம் களவு நிகழ்த்திய பதியில் அச் செல்வனின் மனைக்குள் புகுந்தனர்.

அவ்வெழுவரும் அம்மனைக்கண் புகுந்த பொழுது, தம் மைத்துனப் புலவரும், வளவனைப் போன்ற அம்மனைக் கிழவனும் உண்டு உடுத்து வெற்றிலைப் பாக்கு மென்றவராய் உவப்பாய் உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் வீற்றிருந்த நிலையை எழுவரும் கண்டு மிக மகிழ்ந்தனர். செல்வன் அவ்வெழுவரையும் வரவேற்று, அமரச்செய்து, இன்மொழி கூறி, நீயிர் போர்க்கோலத்துடன் வந்ததற்குக் காரணமென்ன என்று வினவினன். அவ்வெழுவரும் எங்களை வளைத்துப் பிடிக்க முயன்றவர் இகல் கொண்டு வருவாரேல் அவர்களைக் கொன்று நாங்கள் மாய்வதன் பொருட்டே இக்கோலத்துடன் வந்தோம் என்றனர். இதனைக்கேட்ட புலவரும் செல்வனும் வீரமுடையவர்களே! உங்கள் முயற்சியால் நாங்கள் இருவரும் உய்ந்தோம்; நீங்கள் தீச்செயலாகக் கருதிச் செய்த அதனல் எங்களுக்கு நன்மையே விளைந்தது; இது இறைவன் திருவருட் செயலாகும் என்றனர். பின்னர் அச்செல்வன் புலவர் தம் மைத்துனரைத் தங்கச் செய்து அவர்கட்குச் சிறந்த உபசாரத்துடன் பாலும் சோறும் இட்டு அவர்கள் கட்டி வைத்திருந்த எட்டுச் சுமைகளையும் கொடுத்துத் தங்கைப் பங்காகிய சுமையை எடுத்துச் செல்வதற்கு ஒரு ஆளையும் அனுப்பி வைத்துப் புலவர்க்கு இனி வறுமை என்பதே உண்டாகாதவாறு வேறு பொருள்களையும் கொடுத்துக் கடைசியில் புலவரை நோக்கித், தாங்கள் என் உடன் பிறந்தவரே ஆவீர் என்று அன்புரை வழங்கி விடை கொடுத்தான். அந்நாளிலிருந்து புலவரும் செல்வரும் அன்பால் ஒன்றுபட்டு வாழ்ந்திருந்தனர். இப் புலவரைக் குறித்துப் **புலவர் புராண** முடையார்,

"எத்தனை பேர்க்கோ விடைமிசைப் பரமன்
எய்தியின் னருள்செய்தான் என்பார்;
இத்தகை விளையாட் டொருவருக் கேனும்
இயற்றினன் என்கைகேட் டில்லேன்
பத்தமார் மனையுஞ் சுத்தமு நழுவாப்
பத்தியும் பழுதின்மா துரிய
முத்தமிழ்க் கவியு முடையவர் பெருமை
மொழிந்திடின் முற்றுரு தன்றே,"

என்று பாராட்டிக் கூறியுள்ளனர்.

மேற் கூறிய இவ்வாறன்றி இவர் வரலாற்றை **"பாண்டியனாட்டில் நயினர் கோவில்"** என இப்பொழுது வழங்கும் **மருதூரில்** எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது பாடப்பட்டது மருதூரந்தாதியாகும். இதனை இயற்றியவர் **தலைமலை கண்ட தேவர்** என்னும் புலவராவர். இவர் **சேது நாட்டினர், குருடர், மறவர் குலத்தவர்.** இவர் தம் மரபு வழக்கப்படித் திருமணத்திற்குப் பொன் தேட வேண்டிக் களவு செய்வதற்காகத் திருப்பூவணத்திலுள்ள ஒரு தாசி வீட்டில் அவள் படுக்கையறைக்கண்ணிருந்த கட்டிலடியில் பதுங்கியிருந்தார். அந்தத் தாசி நாடோறும் திருப்பூவண நாதர் மீது செய்யுளொன்று பாடி முடித்து உறங்கும் வழக்க முடையாள். அன்று பாடத் தொடங்கி அப் பாட்டு முடியாமையால் குறை பாட்டைக் கூறிக் கொண்டேயிருந்தாள். அப்பொழுது கீழே ஒளிந்திருந்த தேவர் அதனைப்பாடி முடித்தனர். அதனைக் கேட்டு அவள் திடுக்கிட்டு, "நீர் யார்". என்ன, புலவர் தம் வரலாற்றினைக் கூறிப் பொன் பெற்றுச் சென்று மணமுடித்துக் கொண்டு வாழ்ந்திருந்தார்" என்று **பண்டித உலகநாத பிள்ளை அவர்களும், அபிதான சிந்தாமணி நூலாசிரியரும்** எழுதியுள்ளனர்.

## உரைகளைப்பற்றியன.

யாழ்ப்பாணத்து நல்லூர் சைவத் திருவாளர்—ஆறுமுக நாவலரவர்கள் இவ்வந்தாதிக்கு உரையெழுதி அதனைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். **தஞ்சாவூர் சரபோஜி மன்னர் சரஸ்வதி மகால் நூல் நிலயத்தில்** இவ் வந்தாதிக்கு இரண்டு பழையவுரை ஏடுகள் உள்ளன. அவற்றுள் M. 698 எண்ணுள்ள சுவடி முற்றுப் பெறு தது. அதிற் சில பாட்டுகட்கு மட்டுமே உரை உள்ளது. M-142 எண்ணுள்ள சுவடி பெரும்பாலும் முற்றிலும் உரையுடையதாகும்; அதுவே இங்கு பதிப்பிக்கப்பெற் றுள்ளது. அவ்வுரைதானும் காப்புச் செய்யுட்கும் 35ஆம் செய்யுட்கும் கிடைக்கவில்லை. இவ்வுரையாசிரியர் பெயர் தெரியவில்லை. இவ்வுரை பதவுரையாகவும் சில விடங்களில் விளக்கவுரையாகவும் எழுதப்பட்டுள்ளது. இவ்வுரையாசிரியர் சூதாடு கருவியை நெத்தச்சாரியை (14) என்றும், சிலேத்தும நோயைக் குறிக்கும் ஐ என் பதைக் 'கக்கி' என்றும் கூறுகிறார். 'ஆயம்' என்னும் சொல்லிற்கு உயிர் என்று (79) இவர் கூறியுள்ள பொருள் புதிதாக உள்ளது. இன்னும் இவர் எழுதும் உரை நயம் படித்து இன்புறத் தக்கது.

## நன்றி.

சரஸ்வதி மகால் நூல் நிலயக் கௌரவக் காரியதரிசி யும் பேரறிஞரும் ஆகிய உயர்திரு O. A. **நாராயணசாமி ஐயர்** B. A., B. L., அவர்கள் இப்பழைய வுரையைப் பதிப் பிக்க விரும்பி, அப்பணியை அடியேனைச் செய்யுமாறு பணித்தார்கள். யானும் அவர்கள் இட்ட பணியை மேற்கொண்டு பழைய வுரையை நன்கு படித்துச் செப்

பஞ் செய்தும், பிரதி பேதங்களை ஆங்காங்கே குறித்தும், உரையில்லாத இரண்டு பாட்டுகட்கு உரையெழுதியும் ஒவ்வொரு பாட்டிற்கும் முடிபெழுதியும், வேண்டுமிடங்களில் குறிப்புரை எழுதியும் ஒழுங்குபடுத்திப் பிரதியெழுதி நூல் நிலயத்தாரிடம் கொடுத்தேன். அவர்கள் இதனை நல்ல தாளிலே அழகான முறையில் அச்சிட்டுத் தமிழுலகத்திற்குத் தருகின்றார்கள். இங்ஙனம் நல்ல தொண்டினைச் செய்துவரும் சரஸ்வதி மகால் நூல் நிலயக் கௌரவக் காரியதரிசி உயர்திரு O.A. நாராயணசாமி ஐயர் B, A., B, L., அவர்கட்கும் நூலகத் தலைவர் உயர்திரு V. கோபால் ஐயங்கார் M, A,. அவர்கட்கும் என் அகங்கனிந்த நன்றியறிதலை அறிவித்துக் கொள்ளுகிறேன்-

இங்ஙனம்,

தஞ்சாவூர்-2
3—12—67

**திரு—அடிகளாசிரியன்,**
தமிழ்ப் பேராசிரியன்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

உ

இறைவன் துணை.

தலைமலை கண்ட தேவர் இயற்றிய

# மருதூரந்தாதி

(பழைய உரையுடன்)

காப்பு

ஒருகொம் பிருமத மும்மத
நால்வாயொ ரைந்துகரம்
பெருகுஞ் செவிசிறு குங்கண்
புகர்முகம் பெற்றதந்தி
முருகன் றமைய னுமைமைந்த
னைந்து முகன்மகன்மான்
மருகன் றுணைநம் மருதூரந்
தாதி வருவிக்கவே.

[இப்பாட்டிற்குப் பழையவுரை கிடைக்கவில்லை.]

நம் மருதூரந்தாதி வருவிக்கத் தந்தியும், முருகன் தமையனும், உமை மைந்தனும், ஐந்து முகன் மகனும் மால் மருகனும் ஆகிய விநாயகக் கடவுள் துணை என்க.

## நூல்

திருப்*பங்க யத்த†னம் மாதுக்
களித்தவன் செந்துவர்வாய்த்
திருப்பங்க யத்தன்பு கூர்மரு
தூரன் றிரையெழுந்த
திருப்பங்க யத்தன வாகத்த
ஞன்முகன் ‡செவ்விமழுத்
திருப்பங்க யத்த னிருப்பனென்
னெஞ்சிற் றிருக்கறவே. (1)

(என்பது) திருபங்கய் அ தன மாதுக்கு அளித்த வன் = அழகிய திருமேனி ஓர் பங்கை அத்தன மாதாகிய பார்வதியார்க்குக் கொடுத்தவன்; செம் துவர் வாய் திரு பங்கயத்து அன்பு கூர் மருதூரன் = சிவந்த பவளம் போன்ற அதரத்தையுடைய இலக்குமி அன்பு கூரும் பூவினையுடைய தாமரையோடை சூழும் மருதூர் அமர்ந்தவன்; திரை எழுந்து அதிர் உப்பு அம் கயத்து அன ஆகத்தன் நான் முகன் = திரையானது எழுந்து அதிரும் உப்பினையும் அழகினையும் உடைய கயமாகிய சமுத்திர சலம் போன்றிருக்கும் திருமேனியை யுடைய விட்டுணு பிரமா இவர்களால் காண அரிதாய் இருப்பவனை; செவ்வி மழு திரு பங்கயத்தன் இருப்பன் என் நெஞ்சில் திருக்கு அற ஏ = செவ்வியோடுங் கூடிய மழுவாயுதத்தைப் பங்கய அலரன்ன திருக்கரத்திற் றரித்த சுவாமி திருக்காகிய அஞ்ஞானம் நீங்கும்படி என் நெஞ்சத்திலே எழுந்தருளி யிருப்பன் (என்றவாறு).

---

பிரதி பேதம்: * நான்கு அடியிலும் 'பங்கையத்த' † 'னம்' ‡ 'தெம்முன மழுத்'

(குறிப்புரை) பங்கை மாதுக்களித்தவர், ஆரத்தனும் நான்முகனும் (காண அரிதானவன்), மழுவைத் தாங்கிய (கையாகிய) பங்கயத்தன் ஆகிய மருதூரான் திருக்கு அற என் நெஞ்சில் இருப்பன் என்று கூட்டுக. இப்பாட்டிற் றத் திருமாலும் பிரமனும் ஆகிய சிவபெருமான் என் நெஞ்சில் இருப்பன் என்றும் பொருள் கொள்ளலாம்.

திருக்கண்ட னம்பு மடியார்க்
கொட்டாத சிவன்கரிய
திருக்கண்ட னந்த மருதூரன்
வெற்பினிற் றிங்கள்செங்க
திருக்கண்ட நந்தினு நந்தார்
தவமுஞ் சிதைக்குமிந்தத்
திருக்கண்ட நண்ப*னிங் கேவந்த
தாலறத் தீர்ந்தவனே. (2)

இப்பாட்டு பாங்கன் தலைவனை வியந்தல்.

(எ-து) திருக்கு அண்டல் நம்பும் அடியார்க்கு ஒட்டாத சிவன் = தன்னை நம்பும் அடியவர்க்கு அஞ்ஞானத்தை அணுக வொட்டாத சிவன்; கரிய திரு கண்டன் = அழகிய காள கண்டன்; அந்த மருதூரன் வெற்பினில் = ஆகிய அந்த மருதூரை யுடைய இறைவனது வரையின் கண்ணே; திங்கள் செம் கதிர் உக்கு அண்டம் நந்தினும் நந்தார் தவமும் = சந்திராதவரும் நாசப்பட்டு அண்ட மெல்லாங் கெடும் சங்கார காலத்திலும் கேடில்லாத இருடிகள் தவமும்; சிதைக்கும் இந்த திரு கண்ட நண்பன் இங்கே வந்ததால் அற தீர்ந்தவனே = கெடுக்கும் இந்தத் திருநிகராகிய மாதினைக்கண்டு நீங்கி இவன் வந்ததால் நண்பனாகிய தலைவன் மிகவுந் தெளிதலுடையவனும் (எ-று).

---

பி-பே. *னங்கே வந்ததால்.

(முடிபு) மருதூரன் வெற்பினில் இந்தத் திருவைக் கண்ட நண்பன் இங்கே வந்ததால் அறத் தீர்ந்தவன்.

தவன னிலங்க மலமல
 ராமயன் சந்திரன்மா
தவன னிலங்க மலமொரு
 கால்வெம்மைத் தன்மைகுன்று
தவன னிலங்க *மலனவை
 யாபவன் சாரவொண்ணு
தவன னிலங்க மலன்மரு
 தூரன் சரணமக்கே. (3)

(எ-து) தவனன் இலம் கமலம் மலர் ஆம் அயன் = சூரியனும் இருக்குமிடம் தாமரை மலராகிய பிரமனும்; சந்திரன் மாதவன் நல் நிலம் கமலம் = சந்திரனும் விட்டுணுவும் நல்வினைப் பகுதியான பூமியும் சலமும்; ஒரு கால் வெம்மை தன்மை குன்றுதவன் = அக்னியும்; அனிலம் = காற்றும்; கம் = ஆகாயமும்; அலன் அவை ஆபவன் = ஆகிய இப்பொருள்கள் அல்லாதவனும் இவ்வுரைத்த வெல்லாம் தனது திருமேனியாக வுடைத்தானவன்; சார ஒண்ணுத வனன் இலங்கு அமலன் = யாவர்க்கும் சேர அரிதாகிய மயான வனத்தில் இலங்கிய அமலன்; மருதூரன் சரண் நமக்கு ஏ = மருதூரை யுடைய இறைவன் நமக்குப் புகலிடம் (எ-று).

நமனத் தியானனஞ் சென்னக்
 கொதித்தெம்மை நாடிடுமுன்
நமனத் தியானநின் பாற்செல்ல
 நல்குமுந் நான்குகையா

---

பி-பே. *னவை யாமவன்.

ணமனத் தியானன னத்தபத்
தர்க்கென்று நல்லவனே
நமனத் தியானஞ்செய் வார்மரு
தூருறை நாயகனே. (4)

(எ–து) நமன் அத்தி ஆன நஞ்சு என்ன கொதித்து எம்மை நாடிடும் முன் = இயமன் எம்மைச் சமுத்திரத்து உண்டாகிய நஞ்சுபோலக் கொதித்து நாடி வரும் முன்னே; நம் மன தியானம் நின் பால் செல்ல நல்கு = நம்முடைய மனசும் நின்னைத் தியானம் பண்ணும் வகை நல்கு; முந்நான்கு கை ஆன மன் அத்தி ஆனனன் அந்த = பன்னிரண்டு திருக்கரங்களையுடைய சுப்பிரமணியர் விநாயகர் ஆகிய இவர்கட்குப் பிதாவே!; பத்தர்க்கு என்றும் நல்லவனே = பத்தர்க்கு நன்மையைக் கொடுப்போய்; நமன் அத்தியானம் செய்வார் மருதூர் உறை நாயகனே = நம: என்று அத்தியயனம் செய்யும் வேதியர் உறையும் மருதூரா! (எ–று)

(முடிபு) அத்த! நல்லவனே! மருதூர் உறை நாயகனே! நமன் நாடிடும் முன் நம் மனத் தியானம் நின் பால் செல்ல நல்கு.

அகனகத் தானத் தடிவீழ்ந்
தலற வடியொன்றிஞ
யகனகத் தானத்த நாலைந்தி
ஞனை யடர்த்தவன்றா
யகனகத் தான்மதில் சூழ்மரு
தூரை யடைபவரே
யகனகத் தானினைத் தைம்புலத்
துன்ப மறுப்பவரே. (5)

(எ–து) அகல் நகம் தானத்து அடி = அகன்ற கயிலாய மலையின் அடியிடத்தே; வீழ்ந்து அலற

அடி ஒன்றின் நாயகன் நகத்தால் அத்தம் நால் ஐந்தினனை அடர்த்தவன் = விழுந்து அலறும்படித் திருவடியொன்றின் பெருவிரல் நகத்தால் கைகள் இருபதுடைய இராவணனை நெருக்கியவன்; தூய கனகத் தான் மதில் சூழ் மருதூரை அடைபவர் ஏ = நல்ல பொன்னாற் செய்யப்பட்ட மதில் சூழ்ந்துள்ள மருதூர்ப் பதியைச் சேர்பவரே; அகன் நக தான் நினைத்து ஐம்புல துன்பம் அறுப்பவர் ஏ = இதயம் மலர அச் சிவனை நினைத்து ஐம்புலத் துன்பத்தை அறுப்போராவார். ஆகையினல் அவ்விடம் சேர்க இத்தல விசேடத்தால் வினையான அஞ்ஞானம் போக்கி ஞானத்தை யடைந்து முத்தி பெறுவர். (எ-று)

(முடிபு) நகத்தானத்து அடியிலே நகத்தால் அத்தம் நாலைந்தினனை அடர்த்தவனது மருதூரை அடைபவரே (மருதூரரை) நினைத்து ஐம்புலத் துன்பம் அறுப்பவர். 'நாயகம்' நாயகன் என்ருயிற்று.

அறுகா லனஞ்செறி வாமரு
தூரரை யாழியின்பா
லறுகா லநஞ்சமர் கண்டரைத்
தொண்டரை யாள்பவரை
யறுகா லனஞ்சொரி வேள்வியி
னல்வணங் கன்பர்க்கரு
ளறுகா லனஞ்ச வருகா
லமுமோ ரலைவில்லையே. (6)

(எ-து) அறுகால் அனம் செறிவு ஆ மருதூரரை = வண்டினலும் அன்னத்தினலும் செறிவாகிய வளப்பமுடைய மருதூரரை; ஆழியின்பால் அறுகாலம் நஞ்சு அமர் கண்டரை = சமுத்திரத்திடத்து சங்கார காலத்தியல்பாகத் தோன்றிய நஞ்சு பொருந்திய

கழுத்தினையுடையவரை; தொண்டரை ஆள்பவரை; =அடியாரை ஆட்கொண்டருள்பவரை; அறுகு ஆல் அனம் சொரி வேள்வியினால் வணங்கு அன்பர்க்கு= அறுகு ஆலஞ்சுப்பில் அன்னம் இவற்றால் ஓமம்பண்ணி வணங்கும் அன்பர்க்கு; அருள் அறு காலன் அஞ்ச வரு காலமும் ஓர் அலைவு இல்லை ஏ=அருளற்ற காலன் புவனமெல்லாம் கபளீகரிக்க வென்று வருகினும் இவர் கட்கு அச்சமில்லை (எ-று)

(முடிபு) நஞ்சமர் கண்டரை, தொண்டரை ஆள் பவரை, மருதூரரை வேள்வியினால் வணங்கும் அன்பர்க் குக் காலன் அஞ்ச வரு காலமும் ஓர் அலைவில்லை.

**அலையம் புயங்க மணிமுடி**
**யான்கொன்றை யந்தொடைய**
**லலையம் புயன்மரு தூர்வைகை**
**நாட்டினி லாலைவிற்பை**
**யலையம் புயங்க வினைபோய்த்**
**துயரு மகல்கைக்குவந்**
**தலையம் புயமலர்ப் பான்றலைப்**
**பானென் றரிவையரே.** (7)

(எ-து) அலை அம் புயங்கம் அணி முடியான்=அலை பொருந்திய கங்கை அழகினையுடைய புயங்கம் இவை யிரண்டனையும் அணியும் முடியினன்; கொன்றை அம் தொடையல் அலை அம் புயன்=ஒளி பொருந்திய கொன் றை மாலையை அணிந்த அழகிய தோளினன்; மருதூர் வைகை நாட்டில்= அவனுடைய மருதூரையுடைய வையைபாயும் நாட்டின்கண்; ஆலை வில் பையல் ஐ அம்பு உயங்கும் வினை போய் துயரும் அகல்கைக்கு=கரும்பு விற் கொண்டு காமன் விடப்பட்டு வந்து உளம் புகுந்து

அலைக்கின்ற அம்பினாலே வருதுயர் நீங்கற்கு (யாமம் போம்படி) வந்து அலை அம்புயம் அலர்ப்பான் தொலைப்பான் என்று அரிவையரே = அம்புயத்தை அலர்ப்பான் = நீரிடத்து முகிளித்திருக்கும் தாமரையை அலர்விக்கும் சூரியன்; என்று வந்து = இவ்வகை வந்து; அலை தொலைப்பான் அரிவையரே = இராத்திரியை முடியப் பண்ணுவான் தோழியரே (எ-வ)

இது இரவினீட்டம்.

(முடிபு) அலையும் புயங்கமும் அணி முடியானும் கொன்றைத் தொடையல் அலையும் புயனும் ஆகிய சிவ பெருமானுடைய மருதூர் வைகைநாட்டில், பையல அம்பு உயங்கும் வினை போய், துயரும் அகல் வைக்கு, அரிவையரே! அம்புயம் அலர்ப்பான் என்று வந்து அலை தொலைப்பான்.

அரியர விந்தன் புகழ்மரு
 தூருறை யையன்றுய்ய
வரியர விந்தம் புனைவோன்
 சிலம்பி லதர்மனித
ரரியர விந்த மதமா
 வினையம ராகுலத்துக்
கரியர விந்த முயலூன்றின்
 றேகு மவதரித்தே. (8)

(எ-து) அரி அரவிந்தன் புகழ் மருதூர் உறை ஐயன் = விட்டுணுவும் பிரமாவும் போற்றும் மருதூர் உறையும் சுவாமி; துய்ய அரி அரவு இந்து அம் புனைவோன் சிலம்பில் = தூய நெருப்பையும் பாம்பையும் திங்களையும் கங்கா சலத்தையும் அணிந்துகொண்டிருப்போ

னுடைய வரைக்கண்ணே; அதர் மனிதர் அரியர் அ விந் தம் மதமா வினை அமரா = அதர்-வழி, அவ்வழியாக மனிதர் இவ்வேளையில் செல்லுதல் அரியர், அ விந் தம்=அக்காட்டில், மதமா = யானை, அமரா து= வினை செய்வதாயுள்ளன; குலத்துக்கு அரியர்=உயர் குலத்தி லுதித்த நீங்கள் இப்படித் தனித்தேகுதல் நன்றன்று; அவதரித்து அவிந்த முயல் ஊன் தின்று ஏகும்=இவ் விடத்தே அவதரித்து (தங்கி) வெந்திருக்கிற முயல் ஊனை அருந்திப் போங்கள் (எ-று)

இது விருந்து விலக்கல்.

(முடிபு) அரியும் அரவும் இந்தும் அட்டமும் புனை வோன் ஆகிய மருதூர் ஐயன் சிலம்பில் குலத்துக்கு அரியரே (நீஇர் செல்லும்) அதர்க்கண் மனிதர் அரியர், அவ்விந்தத்தில் மதமா வினை அமரா (ஆகையால், இம் மாலையில் இங்கே) அவதரித்து, அவிந்த முயல் ஊன் தின்று (காலையில்) ஏகும். விந்தம்=மலைகள் நிறைந்த காடு.

அவதரிக் கும்புகழ் மாமரு
தூரனெ னைம்புலனு
மவதரிக் கும்பகை செற்று
ளரன்வெற்பி லாரழல்வா
யவதரிக் கும்பசுந் தேனுந்
தருஞ்சொல் லழுதொழுகி
யவதரிக் கும்பொறுக் கப்படைத்
தான்கம லாலயனே. (9)

(எ-து) புகழ் அவதரிக்கும் மா மருதூரன் என் ஐம் புலனும் அவதரிக்கும் பகை செற்று ஆள் அரன் வெற்

பில் = புகழ் தங்கும் பெரிய மருதூரினை யுடைய வனாய் என்னிடத்து அவதரிக்கும் (தங்கும்) ஐம்புல னாகிய பகையைச் சங்கரித்து ஆளாகக் கொள்பவன் வெற்பிடத்து; ஆர் அழல் வாய அதர் = மிகும் அழல் போலன்றிருக்கும் வழியை; இக்கும் பசும் தேனும் தரும் சொல் அமுது ஒழுகிய அதரிக்கும் = கரும்பின் சாற்றை யும் நல்ல தேனையும் தரும் சொல்லாகிய அமிழ்தம் ஒழு கும் அதரத்தையுடைய என் மகளுக்கும்; பொறுக்க படைத்தான் கமலாலயன் = பொறுக்கும் படிப் படைத் தான் பிரமா (எ-று)

இது பிற்சென்ற செவிலி யிரங்கல்.

(முடிபு) மருதூர் அரன் வெற்பிலே அழல்வாய் அதரினை அதரிக்குப் பொறுக்கப் படைத்தான் கம லாலயன்.

ஆலை யனங்கனெய் யாமனெஞ்
சேநம்மை யன்பர்சிந்தை
யாலை யனங்கமங் கத்தணி
வோனர னரமனி
யாலை யனங்கம் வருந்தியுந்
தேடற் கரியவன்கை
யாலை யனங்கங்கொண் டோன்மரு
தூர னடிவணங்கே. (10)

(எ—து) ஆலை அனங்கன் எய்யாமல் நெஞ்சே நம்மை = கருப்பு வில்லையுடைய காமன் நம்மை வருத்தா மல் நெஞ்சமே; அன்பர் சிந்தை ஆலயன் = அன்பரு டைய சிந்தையை ஆலயமாகக் கொண்ட சுவாமி; அங் கம் அங்கத்து அணிவோன் அரன் = எலும்பை அங்கத்

திற் பூண்டவனாகிய அரன்: ஆர் அமளி ஆல் ஐயன் அங்கம் வருந்தியும் தேடற்கு அரியவன் = பொருந்திய அமளியாய படுக்கை ஆலாகிய விட்டுணுவும் தனது அங்கம் வருந்தத் தேடியும் காணற்கரியவன்; கையால் அயன் அம் கம் கொண்டோன் = கையால் அயனாகிய பிரமாவின் அழகிய சிரத்தைக் கொண்டோன்; மருதூரன் அடிவணங்கு ஏ = மருதூரில் இனிதமர்ந்த ஈசன் சீர் பாதத்தை (நெஞ்சமே!) பணி (எ-று)

இது நெஞ்சொடு புலம்பல்.

(முடிபு) நெஞ்சே! அனங்கன் எய்யாமல் அன்பர் சிந்தை ஆலயனும்; அங்கத்தை அங்கத்து அணிவோனும், அரனும், அமளி ஆல் ஐயன் தேடற்கு அரியவனும், அயன் கம் கொண்டோனும் ஆகிய மருதூரன் அடி வணங்கு.

வணங்கரி யார்தமக் கன்பற்
றவரன்று வன்றொண்டர்க்கா
வணங்கரி யார்முன்பு காட்டவல்
லார்கையும் வாயுஞ்செய்ய
வணங்கரி யாரயன் காண்பரி
யார்மரு தூரரைங்கை
வணங்கரி யார்தந்தை யாரெந்தை
யாரெம் மனத்தவரே. (11)

(எ-து) வணக்கு அரியார் தமக்கு அன்பு அற்றவர் = தம்மைத் தொழாதார்க்கு அன்பிலாதவர்; வன்றொண்டர்க்கு ஆவணம் கரியார் முன்பு காட்ட வல்லார் = வன்றொண்டராகிய சுந்தரர்க்குச் சாதனம் சாட்சியார் முன் காட்டினவர்; கையும் வாயும் செய்ய அணங்கு அரி ஆர் அயன் காண்பு அரியார் = கையும்

வாயும் மிகச் சிவந்த அணங்காகிய இலக்குமிக்கு மிகவும் வேட்கையினையுடைய விட்டுணுவும் அயனாகிய பிரமாவும் காணற்கு அரியார்; ஐங்கை வண்ணம் கரியார் தந்தை யார் = ஐந்து கையினையும் வனப்பினையும் கரிமுகத் தினையுமுடைய கணபதிகுத் தந்தையானவர்; எந்தை மருதூரர் எம் மனத்தவரே = எனக்குச் சுவாமியான மருதூரர் என் இதய கமலத்தி லிருப்பர் (எ—று).

(முடிபு) வணங்கரியார்க்கு அன்பற்றவர் வன்றொண் டர்க்கு ஆவணம் கரியார் முன்பு காட்ட வல்லார், அரி அயன் காண்பரியார் கரியார் தந்தையார் ஆகிய எந்தை மருதூரர் எம் மனத்தவர்.

**மனமாறு கைக்கெம்மை வந்தாளு**
**நாதன் வரம்பெறவா**
**மனமாறு கைக்குந் திருவாயிற்**
**கோபுர மாமருதூர்**
**மனமாறு கைக்கொண் டடிக்கநின்**
**றேன்கொன்றை மாமலர்த்தார்**
**மனமாறு கைக்குஞ் சடையா**
**னெனவினை மாறுமன்றே.** (12)

(எ—து) மனம் மாறுகைக்கு எம்மை வந்து ஆளும் நாதன் = மனம் முதலாகிய கரணமென்னுந் துன்பம் மாளும்படிக்கு ஆட்கொண்ட மகாதேவன்; வரம் பெற வாமனம் மாறுகைக்கும் திரு வாயில் கோபுரம் ஆம் மருதூர் மன் = வரத்தைப்பெறவும் வாமனமாகிய குற ளுருவம் மாறுகைக்கும் விட்டுணு வந்து பல காற் சஞ்ச ரிக்கும் கோபுரம் பொருந்திய வாயிலினை யுடைய மருதூர் சுவாமி; அம் மாறு கை கொண்டு அடிக்க நின்றோன் = அழகியமாறு என்னப்பட்ட பிரம்பால் வைகைக் கரை யில் பாண்டியன் அடிக்கப் பொறுத்தோன்; கொன்றை

மா மலர் தார் மன் அம் ஆறு உகைக்கும் சடையோன் = கொன்றை மா மலர்த் தாருடன் நிலை பெறும் அழகிய கங்கை உகளிக்குஞ் சடாமவுலியை யுடைய சுவாமி; என வினை மாறும் அன்றே = என்று சொல்ல வினை மாறிப் போம் (எ-று)

(முடிபு) வந்து ஆளும் நாதனும், மாறு கொண்டு அடிக்க நின்றோனும் கொன்றைத் தாருடன் ஆறு உகைக்கும் சடையோனும் ஆகிய மருதூர் மன் என வினை மாறும்.

மாரு மதிக்க மறலியைச்
செற்றவன் வஞ்சமென்று
மாரு மதிக்க படர்க்கொளிப்
பானரன் வண்ணவளை
மாரு மதிக்க மறுகூடு
சென்றவன் மாமருதூர்
மாரு மதிக்கநந் தேர்முந்து
மாயின் *வலவனன்றே. (13)

(எ-து) மாரு மதிக்க மறலியை செற்றவன் = மாறு பாடாக மதிக்கிற மீது வரும் இயமனை உதைத்தவன்; வஞ்சம் என்றும் மாரு மதி கபடர்க்கு ஒளிப்பான் = வஞ்சகம் எப்போதும் மாருமலிருக்கிற புத்தியை யுடைய கபடர்க்கு ஒளிப்பான்; அரன் வண்ண வளை மாரு மதிக்க மறுகு ஊடு சென்றவன் = அரன் என்னும் திருப் பெயரை யுடையவன் வண்ணம் பொருந்திய வளையல் களை மாற யாவரும் கண்டு மதிக்கும்படி மதுரை வீதியூடு நடந்தோன்; மா மருதூர் மால் தாமதிக்க நம் தேர் முந்தும் ஆயின் வலவன் நன்று ஏ = மா மருதூரில்

---

பா-பே. *வலவ நன்றே. இப்பாடமே நன்று.

மாலாகிய மேகமும் தாமதிக்கும்படி நம்முடைய தேர் முந்துமாகில் தேர்ப்பாகன் நல்லவன் (எ—று)

*இது தலைவன் கார்ப்பருவங்கண்டு கூறல்.

(முடிபு) மறலியைச் செற்றவன், கபடர்க்கு ஒளிப்பான், அரன், வளையை மாறா மறுகூடு சென்றவன், ஆகிய சிவபெருமானுடைய மா மருதூரில் நம் தேர் மால் தாமதிக்க முந்துமாயின் வலவன் நன்றே.

**வலவம் படமழு வேந்திய**
**வேந்த வரித்தசித்ர**
**வலவம் படவள ருந்தன**
**பார மலைமகள்கா**
**வலவம் படர்பொழில் சூழ்மரு**
**தூர மதன்விரக**
**வலவம் படவரும் போதென்னை**
**யாள வரவல்லையே.** (14)

(எ—து) வலவம் பட மழு ஏந்திய வேந்த=வல்லபம் செய்யப்பட மழுப்படையை யேந்திய சுவாமியே! வரித்த சித்ர வல் அவம் பட வளரும் தன பார மலைமகள் காவல=சித்திரமெழுதிய நெத்தச் சாரியை யாகிய வல் அவம் படத் தள்ளி வளரும் முலையுடைய மகளாகிய உமைக்குக் காவல! வம்பு அடர் பொழில் சூழ் மருதூர= மணம் மிகுந்த பொழில் சூழ்ந்த மருதூரனே; மதன் விரக வல அம்பு அட வரும்போது என்னை ஆள வர வல்லையே=வல்லபம் படைத்த மாரன் வல்ல அம்பு அடர்க்க வரும் பொழுது என்னைக் காக்க வர மாட்டாயோ (எ—று)

இது பிரிவாற்றாத தலைவி கூறல்.

(முடிபு) மழு வேந்திய வேந்த! மலைமகள் காவல! மருதூர! மதன் அம்பு அட வரும்போது என்னை ஆள வரவல்லையே. சாரிகை=சூதாடுகருவி. சாரியை எனவும் வழங்கும்.

**வலையலை வார்முலை பூங்குழ**
**லாக்கொண்ட மங்கைபங்கா**
**வலையலை வார்விட வல்லவ**
**னேமரு தூரவென்க**
**வலையலை வார்மன நின்பாற்**
**புரிந்தனன் மாயஞ்செய்ய**
**வலையலை வாரைய னேசெய்ய**
**பாத மலர்தரவே.** (15)

(எ—து) வலை அலை வார் முலை பூ குழல் ஆ கொண்ட மங்கை பங்கா=வல் எனப்பட்ட நெத்தச் சாரியையும் அல்லெனப் பட்ட இருளையும் கச்சுப் பொருந்தும் முலையும் கூந்தலுமாகக் கொண்ட உமை பங்கனே! வலை அலை வார் விட வல்லவனே=வாராகிய சுருக்கும் தகவதுகளை யுடைய வலையை விலை நிமித்தமாக வலைக்கார வடிவம் கொண்டு அலை பொருந்தும் கடலில் விட வல்லவனே! மருதூர=மருதூரினை யுடையவனே! என் கவலை அலைவு ஆர் மனம் நின் பால் புரிந்தனன்=கவலையும் அலைவும் பொருந்தியிருந்த என் மனம் உன் பால் புரிந்தனன்; மாயம் செய்ய வலை அலை=என் மனக்கவலையும் அலையும் ஆய மாயம் செய்ய வல்லை நீயல்லை. செய்ய பாத மலர் தரவே வார் ஐயனே=ஆதலால் நின் சிவந்த திருவடிமலரைத் தருதற்கு வருவாய் அப்பனே. (எ—று)

(முடிபு) மங்கை பங்கா! வலையை அலையின்கண் விட வல்லவனே! மருதூரனே! கவலையும் அலைவும்

ஆர் என் மனத்தை நின்பால் புரிந்தனன்; (அம்) மாயத்தைச் செய்ய வல்லையல்லை; (ஆதலால்) பாத மலர் தர ஐயனே வார்.

வார்=வருக என்னும் பொருட்டு.

மலரம்பை யாரஞ் சொரியாலை
விற்கொண்டு மாரனெய்யா
மலரம்பை யாரஞ்சும் வஞ்சிக்
கருள்கிலர் மாலையைய
மலரம்பை யாரஞ் செறியாகர்
பார்த்தற்கு வாய்த்தவெற்றி
மலரம்பை யாரஞ் சடையார்
மருத வனத்தவரே. (16)

(எ-து) மலர் அம்பை ஆரம் சொரி ஆலை வில் கொண்டு மாரன் எய்யாமல் = பூவாளிகளை முத்துச் சொரியும் கரும்பு வில்லிற் கொளுவிக் கொண்டு காமன் எய்யாமல்; அரம்பையார் அஞ்சும் வஞ்சிக்கு அருள் கிலர் மாலையை அமலர் = தெய்வப் பெண்களும் இவள் உருவு கண்டு அஞ்சப்படும் வஞ்சிக்கு அமலர் மாலையை அருள் கிலர்; அம் பை ஆரம் செறி ஆகர் = அழகிய படத்தினை யுடைய அரவத்தை ஆபரணமாகச் செறித்த திருமேனியை யுடையவர்; பார்த்தற்கு வாய்த்த வெற்றி மலர் = அருச்சுனற்கு வாய்த்த வெற்றியுள்ள மல்லர்; அம் பை ஆர் அம் உடையார் = சலத்தினும் சர்ப்பத் தினும் ஆத்தியினும் அழகு பொருந்திய சடையினை யுடையார்; மருத வனத்தவர் = மருதவனத்தின் கண் வாழும் கடவுளராவார். (எ-று)

வினைச் சூட்டு.

(முடிபு) ஆகரும், மல்லரும்; சடையாரும், அமலரும் ஆகிய மருதவனத்தவர் மலர் அம்பினை ஆலவிற் கொண்டு மாரன் எய்யாமல் வஞ்சிக்கு மாலையை அருளிலர். (16)

வனத்தவ னம்பன் மலர்க்கஞ்சத்
தார்மரு தூரன்செய்ய
வனத்தவ னம்பன் னிருகரத்
தானத்தன் மாயமெய்வேம்
வனத்தவ னம்ப னகப்பணி
யான்சதுர் மாமறைய
வனத்தவ னம்ப னெனச்சொலப்
போமும் மலங்களுமே. (17)

(எ-து) வனத்த அனம் பல் மலர் கஞ்சத்து ஆர் மருதூரன் = வனம் என்பது கா; அவற்றருகு சேர்ந்துலவும் அன்னம் பல தாமரைப் பூவினிடத்திலே ஆர்ந்திருக்கின்ற மருதூரன்; செய்ய வனத்தவன் நம் = சிவந்த வண்ணத்தையுடையவன்; நம்முடைய சுவாமி; பன்னிரு கரத்தான் அத்தன் = பன்னிரண்டு கைகளையுடையவனாகிய குமார சுவாமிக்குப் பிதாவானவன்; மாய மெய் வேம் வனத்தவன் = மாயத்தை அளிக்கும் காமன் உடம்பு வெந்த வனத்தவன் என்றது காமதகனமான கொறுக்கை வனத்திலிருப்போன் என்ற கருத்தாம். அம் பனக பணியான் = அழகு பொருந்திய நாகத்தை அணியாகப் பூண்டவன்; மா மறையவன் நத்தவன் நம்பன் = சதுர்மா மறையவனாகிய பிரமாவுக்கும் வாலிதாகிய சங்கத்தை யுடைய விட்டுணுவிற்கும் சுவாமி; என சொல போம் மும்மலங்களுமே = என்று சொல்ல மும்மலங்கள் முற்றிலும் போகும் (எ-று)

(முடிபு) செய்ய வனத்தன், நமன், பன்னிரு கரத்தன் அத்தன், மாய மெய் வேம் வனத்தவன், பன்னகப் பணியான், மறைபவன், நத்தன், நம்பன், மருதூரன் எனச் சொல மும்மலங்களும் போம். (13)

மலங்கு வளைக்கு நடுவே
துயிலும் வயலிற்செங்க
மலங்கு வளைக்குண் மலர்மரு
தூரநின் மாலைபெரு
மலங்கு வளைக்குங் கடலோசை
கேட்டு வருந்திநெஞ்ச
மலங்கு வளைக்குங் குமப்புயத்
தான்முக்கண் மைக்கண்டனே. (18)

(எ-து) மலங்கு வளைக்கு நடுவே துயிலும் வயலில் = மலங்கு வென்னும் மீன் சங்குகளின் நடுவாகிய வுச்சத்தில் துயிலும் வயலில்; செம் கமலம் குவளைக்குள் மலர் மருதூர = செந்தாமரை மலர்கள் குவளைக்குள்ளே மலரும் பொலிவினையுடைய மருதூரனே; நின் மாலை பெருமல் அம் குவளைக்குப் கடல் ஓசை கேட்டு வருந்தி நெஞ்சம் மலங்குவளை = நின் மாலையைப் பெருமல் அழகிய பூமியை வளைக்கும் கடலோசை கேட்டு நெஞ்சுருக மயங்கியவளை; குங்கும புயத்து ஆள் முக்கண் மை கண்டனே = மூன்று கண்களையுடைய கறுப்பாகிய கண்டத்தை யுடையவனே; குங்குமம் அணிந்த புயத்தினாலே ஆள்வாயாக (எ-று)

(முடிபு) மருதூரனே! நின் மாலை பெருமல் கடல் ஓசை கேட்டு மலங்குவளை குங்குமப் புயத்தால் ஆள். (18)

கண்டங் களிக்கும் படிநஞ்
சமுதுண்ட காரணவ
கண்டங் களிக்கு முழுதுங்கண்
டாய்நின்ற காமருதூர்க்
கண்டங் களிக்கு மகிழடி
யார்க்கவர் காதலன்பு
கண்டங் களிக்குங் கருணைதந்
தென்றெனைக் காப்பதுவே. (19)

(எ-து) கண்டாங் களிக்கும்படி நஞ்சு அமுது உண்ட காரண = மிடறு களிக்கும்படியாக நஞ்சை அமுதாக வுண்ட காரணனே; அகண்டங்கள் இகு முழுதும் கண்டாய் = அண்டங்கள் பலவற்றையும் இப் பூமி முதலாகிய சகலத்தையும் உண்டாக்கினவனே!; நின்ற கா மருதூர் கண்டு அங்கு அளிக்கு மகிழ் அடியார்க்கு = நிறைந்த காவினையுடைய மருதூரைக் கண்டு அங்கு நினது கிருபைக்கு மகிழும் அடியவரைக் கண்டு; அவர் காதல் அன்பு கண்டு அங்கு அளிக்கும் கருணை தந்து என்று எனை காப்பது ஏ = அங்கு அவர்க்குள்ள அன்பாகிய காதலுக்கேற்றபடி அளிக்கும் கருணையை அடியேனுக்குத் தந்து என்று இரட்சிப்பையோ (எ-று).

இஃது இரந்து கூறல்.

(முடிபு) நஞ்சை அமுதாய் உண்ட காரண; அகண்டங்களையும் இக் குமுழுவதையும் கண்டவனே; மருதூரைக் கண்டு நின் அளிக்கு மகிழ் அடியார்க்கு அவர் அன்பு கண்டு அளிக்கும் கருணையைத் தந்து என்று எனைக் காப்பது (என்று) (19)

காப்பர வப்பணி யாக்கொள்வர்
மாக்கம லாலயங்கொள்
காப்பர வப்பணி ஞனீக்கித்
தேனைக் கவர்மருதூர்
காப்பர வப்பணி யானிற்கும்
வஞ்சகக் கன்னெஞ்சுரு
காப்பர வப்பணி யென்னையு
மாள்வர் கனற்கண்ணரே. (20)

(எ-து) காப்பு அரவம் பணியா கொள்வர் = அரவத்தைக் காப்பு என்னும் அணிகலனாகக் கொள்வர்; மா கமலம் ஆலயம் கொள் காப்பு அரவம் பணினால் நீக்கி தேனை கவர் மருதூர் காப்பர் = மாவென்னும் வண்டுகளானவை கமலாலயம் என்னப்பட்ட தாமரைப் பூவாகிய கோவிலின் இதழாகிய கதவைத் தங்கள் ஆரவாரம் என்றும் பண்ணினால் திறந்து நாவினாலே தேனைக் கவரும் வளப்பமுடைய மருதூரினைக் காப்போர்; அவ பணியால் நிற்கும் வஞ்சக கல் நெஞ்சு உருக பரவ பணி என்னையும் ஆள்பவர் = அவத் தொழிலைச் செய்து வஞ்சகம் பயின்று கல்லான மனத்தை யுருக்கி நித்தியமும் தனது பாதங்களை அருச்சித்துத் துதிக்கப் பணித்து என்னையும் ஆள்பவர்; கனல் கண்ணர் ஏ = நெருப்புக் கண்ணராகிய சிவபெருமான் (எ-று).

(முடிபு) காப்பு என்னும் பணியாக அரவத்தைக் கொள்வர்; கனல் கண்ணர் ஆகிய மருதூர் காப்பவர் என்னையும் கல் நெஞ்சு உருகவும் பரவவும் பண்ணி ஆள்பவர் (ஆவார்) (20)

கனகத் தமரவென் சென்னியின்
வண்டின் கணங்கள்செங்கோ
கனகத் தமரும் புனன்மரு
தூரன் கரியகண்டன்
கனகத் தமருகக் கையா
னரக்கனைக் காதியதுங்
கனகத் தமரவிந் தப்பதம்
வைப்பதெக் காலத்திலே. (21)

(எ து) கனக தமருக கையான் = பொன்னிறமான உடுக்கை யேந்திய கையினை யுடையான்; வண்டின் கணங்கள் செம் கோகனகத்து அமரும் புனல் மருதூரன் = வண்டினங்கள் செவ்விய தாமரைப் பூவின் அமரும் வளப்பமுடைய தாமரைக் காடு சூழ் மருதூரன்; கரிய கண்டன் = கருத்த மிடற்றினையுடையான்; கன கத்து அரக்கனை காதிய துங்கம் நகத்து அம் அரவிந்த பதம் = சத்த மேகம் போன்று ஆர்ப்பரித்து கயிலாய மலையை யெடுத்த இராவணனைக் காதிய உயர்ச்சியாய உகிரினை யுடைத்தாகிய தாமரை மலர் போன்றிருக்கும் தனது பாதங்களை; என் சென்னியில் அமர வைப்பது எக்காலத்திலே = எனது தலையிலே ஏற்ப வைப்பது எக்காலம் (எ-று)

(முடிபு) தமருகக் கையானும் கரிய கண்டனும் ஆகிய மருதூரன் (தனது) அரவிந்தப் பதத்தை என் சென்னியில் அமர வைப்பது எக்காலத்திலே.

முதலடியிலே வந்துள்ள 'கனகத் தமர' என்பதை கன கத்து அமர என்று பிரித்து கன கத்து என்னும் சொற்களை அரக்கனுடனும் அமர என்னும் சொல்லை வைப்பது என்பதனுடனும் கூட்டுக. (21)

காலம் பரம்பையங் காசி
னியங்கி கலங்குமந்த
காலம் பரம்பையங் காய்ந்தென்னை
யாள்கைக்குக் கட்கழுநீக்
காலம் பரம்பையங் காட்டுக்குப்
பாயக் கருதிமள்ளர்
காலம் பரம்பையங் கூர்மரு
தூரமுக் கட்பரனே (22)

(எ—து) கால் அம்பரம் பயம் காசினி அங்கி கலங்கும் அந்த காலம் = காற்று ஆகாயம் சலம் பிருதிவு அக்னி இவ்வைந்து பூதமும் கலங்கி இவ்வுடம்பு ஒழிந்து போங் காலம்; பரம் = உனக்கே பாரம்; (காக்க வேண்டிய பாரம் உனக்கே என்றது) பையம் (பயம்) காய்ந்து என்னை ஆள்கைக்கு = பயத்தைக் காய்ந்து என்னை இரட்சிப்பதற்கு; கள் கழு நீர் கால = செங் கழு நீர் மலரின்றிழியும் தேனாகிய சலத்தினையுடைய வாய்க்கால்; அரம்பையங்காடு = காடு போன்று மிங்க வாழைத் தோட்டத்திற்குப் பாயக் கருதிய மள்ளரானோர்; கால் அம் பரம்பை அங்கு ஊர் மருதூர = கால் பொருந்திய அழகிய பரம்பினை அந்த வாய்க் காலிலே செலுத்தும் அதிசயமுடைத்தான மருதூரின்; முக்கட் பரனே = மூன்று விழிகளையுடைய பரமேசுரனே (எ—று)

(முடிபு) முக்கட் பரனாகிய மருதூரனே! கலங்கும் அந்தக் காலத்திலே பையம் (பயம்) காய்ந்து என்னை ஆள்கைக்கு (உனக்கே) பரம்.

பரம்பு = உழவர் நிலங்களைச் சமப் படுத்துகைக்குப் பயன் படுத்தும் பலகை போன்ற கருவி. அது வாய்க்கால் நீரைத் தடுத்துப் பாய்ச்சுவதற்கும் பயன் படும். (பையம் — போலி) (22)

**பரமாக வந்த மறப்பூதஞ்**
**சூழ்படை யாயதளம்**
**பரமாக *வந்தல் மதிச்சடை**
**யாய்வையம் பாவகனம்**
**பரமாக வந்த மருத்தாகு**
**வாய்வினை பற்றறநின்**
**பரமாக வந்த வெனைமரு**
**தூரகண் பார்த்தருளே. (23)**

(எ-து) பரமா = பரமேசுரனே! கவந்தம் மற பூதம் சூழ் படையாய் = கவந்தங்களும் வெற்றியை யுடைய பூதங்களுமாகிய படை யென்னுஞ் சேனை சூழ வுடைத்தானவனே! அதள் அம்பர = அதள் தோல்; புலியினதகளை; அம்பர = புடவையா யுவந்தோய்! மாக அம் தண் மதி சடையாய் = மாகம்—விண்; மாகத்திலேயுள்ள அந்த மதி பொருந்தும் சடையோய்! அம்—அழகிய; தண்—குளிர்மை; வையம் பாவகன் அம்பரம் மா கவந்தம் மருத்து ஆகுவாய் = பிருதிவு தேயு ஆகாயம் பெருமை பொருந்திய அப்பு வாயு இவை யைந்து பூதமுந் தானே யானவனே; வினை பற்று அற நின் பரமாக வந்த எனை மருதூர கண் பார்த்து அருள் ஏ = நின் பரமாக வந்த என் வினைப்பற்று அற எனைக் கண்ணால் பார்த்து கிருபை செய் மருதூர (எ—று)

(முடிபு) பரமா! பூதப் படையாய்! அதள் அம்பர! மதிச் சடையாய்! வையம் முதலான ஐம்பூதமும் ஆகுவாய்! நின் பரமாக வந்த (என்) வினைப்பற்று அற, மருதூர! எனைக் கண் பார்த்து அருளே.

---

பி—பே. *வந்த

கவந்தம்=முன்னது குறைத்தலைப் பேய்! பின்னது நீர். மாகம் = ஆகாயம். பாவகன் = நெருப்பு. (23)

அருளத் தனைநம் பிறப்பேழு
நீக்கு மடிக்கமல

மருளத் தனைநமக் கண்ணிய
னாக்குவ னாட்பட்டதொண்

டருளத் தனைமரு தூரனை
யன்ப ரவத்தையில்வந்

தருளத் தனைமன மேயொழி
யாமனம் மையனென்றே. (24)

(எ-து) அடி கமலம் அருள = திருவடித் தாமரையைக் கொடுக்க; தனை நமக்கு அண்ணியன் ஆக்குவன் = தன்னை நமக்கு அடுத்தவன் ஆக்குபவனாகிய சுவாமி; ஆட்பட்ட தொண்டர் உளத்தனை = அடிமையான தொண்டருடைய உள்ளத் திருப்பானை; அன்பர் அவத்தையில் வந்து அருள் அத்தனை = அன்பருடைய அவத்தையிலே எழுந்தருளி அருள் செய்யும் சுவாமியை; அத்தனை நம் பிறப்பு ஏழும் நீக்கும் = நம் எழுவகைப் பிறப்பத்தனையும் நீக்குவோனை; மருதூரனை மனமே ஒழியாமல் நம் ஐயன் என்றே அருள் = மருதூரனை யுடையவனை மனமே ஓயாமல் நம் ஐயன் என்றே சொல் (எ—று)

இப் பாட்டு விற்பூட்டுப் பொருள் கோள்.

(முடிபு) பிறப்பேழும் நீக்கு (பவனை), தனை நமக்கு அண்ணியன் ஆக்குவானை, தொண்டர் உளத்தனை, அன்பர் அவத்தையில் வந்து அருள் அத்தனை மருதூரனை மனமே! ஒழியாமல் நம் ஐயன் என்றே அருள்.

'அத்தனை நம் பிறப்பு ஏழும் நீக்கும்' என்னும் தொடரினை 'நம் ஏழு பிறப்பு அத்தனையும் நீக்கும்' என்று மாற்றிக் கூட்டியுள்ளார். இப்பாட்டு ஈறும் முதலும் இயையப் பொருள் கொள்ளுவதால் விற்பூட்டுப் பொருள்கோளாம். அன்பர் அவத்தை — நின்மலாவத்தை. (24)

அய்யம் பலருந் தரச்சென்
றிரந்தவ னாதவனு
ரைய்யம் பலரும் பொடிபடச்
செற்ற வரன்மருதூர்
ரைய்யம் பலருஞ் சடையா
னருளிலை யேலநங்க
னைய்யம் பலருங் கனஞ்சேர்
குழலிக் கரும்பகையே. (25)

(எ—து) அய்யம் பலரும் தர சென்று இரந்தவன் = பிட்சையைப் பலரும் கொண்டுவரத்தான் போய் வாயில் தோறும் எடுத்தவன்; ஆதவனுரை அம் பல் அரும் பொடி பட செற்ற அரன் = சூரியனுரை அழகிய பல்லை அரும்பொடி யாகும்படிச் சினந்த அரன்; மருதூர் = மருதூரன்; அய் அம்பு அலரும் சடையான் = அழகிய சலமான கங்கை அலரும் சடையினையுடையோன்; அருள் இலையேல் = அவனுடைய திருவருள் இல்லாவிடின்; அநங்கன் அய் அம்பு அலரும் = அநங்கனுடைய ஐந்து அம்புகள் என்று சொல்லப்பட்ட மலர் முற்றிலும்; கனம் செய் குழலிக்கு அரு பகை ஏ = மேகம் போன்ற குழலினையுடையாளுக்கு மிக்க பகையாம் (எ—று)

இது பாங்கியிரக்கம்.

(முடிபு) இரந்தவனும், ஆதவனுரைப் பல் பொடி படச் செற்றஅரனும், அம்பு அலரும் சடையானும் ஆகிய மருதூரன் அருள் இல்லையேல், கனஞ்சேர் குழலிக்கு அநங்கன் அய் அம்பு மலரும் பகை. (25)

அரும்பர வைக்கடுக் கண்டர்வன்
றொண்டரை யாள்கையிலை
யரும்பர வைக்குற வாக்குந்
திருவரு ளார்மருதூ
ரரும்பர வைக்கண் டரையரை
வைப்பவ ரன்றுநஞ்ச
மரும்பர வைக்கஞ்சன் வஞ்சமென்
றட்டவற் கப்புறமே. (26)

(எ-து) அரும் பரவை கடு கண்டர் = அரிதாகிய கடலின் கடுப்பொருந்தும் மிடற்றினையுடையவர்; வன் தொண்டரை ஆள் கையிலையர் = சுந்தரரை அடிமை கொண்ட கயிலையாளர்; உம்பர் அவைக்கு உறவு ஆக்கும் திரு அருளார் மருதூரர் = உம்பராகிய தேவர் அவைக்கு உறவாகும்படி அவர்களுக்குச் சொர்க்கம் முதலாகிய மேலாம் பதம் கொடுக்கும் திருவருளரான மருதூரர்; உம்பர் அவைக்கண் தரையரை வைப்பவர் அன்று=தரையிலே யுள்ள மக்கட் சாதியினரைத் தேவருடைய சபையிடத்திலே பொருட்டல்ல வென்று கருதி; நஞ்சு அமரும் பரவை கஞ்சன் வஞ்சம் என்று அட்டவற்கு அப்புறம் ஏ = நஞ்சு பொருந்தும் கடல் போன்று பொதியாநிற்கும் கஞ்சனது வஞ்சத்தினால் யாவரும் உரைசெய்யக்கேட்டு அக்கஞ்சனைக் கொன்ற

தொருவிட்டுணுவினுடைய பதத்தினுக்கு மேலாயதொரு பதமோ தமது தொண்டராகிய அன்பர்களுக்கு அருளுவார் (எ-று)

(முடிபு) கடுக்கண்டரும், வன்றொண்டரை ஆளும் கைலையரும், திரு அருளாரும் (ஆகிய) மருதூரர் தரையரை உம்பர் அவைக்கண் வைப்பவரன்று; கஞ்சனை அட்டவற்கு அப்புறமே (வைப்பர்)

மருதூரர் உம்பர் கூட்டத்திற்குச் சுவர்க்கத்தைக் கொடுத்தாலும் நிலவுலகத்திலுள்ள தம் தொண்டர்க்குத் திருமால் பதத்திற்கு மேலான பதத்தையே கொடுத்தருளுவர் என்பது கருத்து. (26)

அப்புக் கரக்குஞ் சடைமரு
தூரரொன் றுரைமண்மேல்
அப்புக் கரக்கு மணியணி
வோர்வெற்பி னண்ணலெய்த
அப்புக் கரக்குஞ் சரங்கண்டிவ்
வாறிங் கதரத்தினை
அப்புக் கரக்குங் கறுக்குங்
கொடிநின்ற தாவிகொண்டே. (27)

(எ-து) அப்பு கரக்கும் சடை மருதூரர் — அப்பு எனப்பட்ட கங்கையைத் தன்னிடத்தே கரந்து வைத்துக்கொண்டிருக்குஞ் சடையை யுடையவரான மருதூரர்; ஒன்றுரை மண்மேல் அப்பு உக்கர் = ஒன்றாகிய முப்புராதிகளை மண்மேல் அறையும் உக்கிரத்தையுடையவர்; அக்கு மணி அணிவோர் வெற்பில் = அக்குமணியை அணிவோருடைய வரையிலே; அண்ணல் எய்த அப்பு கர குஞ்சரம் கண்டு = தலைவர் எய்த அம்பு

பாய்ந்த துதிக்கையினையுடைய யானையைக் கண்டு; இவ்வாறு இங்கு=இந்தப்படியாக இவ்விடத்திலே; என்னவே, யாருமில்லா அருங்காட்டுக் கொல் விலங்குகளையும் கண்டு பயப்படாமல; அதரத்தின் ஐ அப்புக்கு அரக்கும் கறுக்கும் கொடி = அதரமாகிய இதழின் அமிர்து போலும் செவ்விதாகிய சலத்திற்கு இங்குலிகமும் கறுக்கும் வஞ்சிக் கொடி போன்ற தலைவி; ஆவி கொண்டே நின்றது = உயிர் தரித்துத் தலைவன் பின்னே நின்றது அரிது (எ–று)

இது பிற்சென்ற செவிலி யிரங்கல

(முடிபு) ஒன்னுரை மண்மேல் அப்பு உக்கரும் அக்குமணி அணிவோரும் ஆகிய மருதூரர் வெற்பில் இவ்வாறு இங்கே அண்ணல் எய்த குஞ்சரத்தைக் கண்டு கொடி (தலைவி) ஆவி கொண்டே நின்றது (அரிது) (எ–று)

உக்கிரர் உக்கர் எனத்திரிந்தது. இங்குலிகம் = சாதிலிங்கம். அரிது என்னும் சொல் வருவிக்கப்பட்டது. (27)

ஆவிக் கனங்களங் கார்வண்
டணிதந் தமர்மருதூர்
ராவிக் கனங்களந் தொண்டர்க்
கடாமைச்சென் றுண்டருளை
யாவிக் கனங்களங் காட்டமெய்
வேர்க்கு மவத்தையில்வந்
தாவிக் கனங்க ளருத்துமுன்
றுண்டருஞ் ளஞ்சலென்றே. (28)

(ஏ-து) ஆ இக்கு அனங்கள் அம் கார் வண்டு அணி தந்து அமர் மருதூரா = பசுக்கணங்களினாலும் கருப் பந் தோட்டங்களினாலும் அன்னத் திரள்களினாலும் அழகிய கருமை பொருந்திய வண்டுகளினாலும் அழகு செறியும் மருதூரினை யுடையோய்! அரனே! விக் கனங்கள் அம் தொண்டர்க்கு அடாமை சென்று ஆண்டு அருள் ஐயா = விக்கினங்கள் நின் பத்தியான அழகு டைய அன்பரான தொண்டர்க்கு அணுகாமற் சென்று ஆண்டருள் சுவாமியே! விக்கல் நம் களம் காட்ட மெய் வேர்க்கும் அவத்தையில் = விக்கலானது நம்முடைய மிடற்றிற் காட்ட மெய் வேர்க்கும் மெய்யறியாது வரும் அவசமான காலத்திலே; வந்து ஆவிக்கு அனங்கள் அருத்தும் முன் அஞ்சல் என்றே ஆண்டு அருள் = இனி உயிரொழியு மென்று இன்னதோர் உயிர்க்கு ஆன தோர் அன்ன வகைகளை அருத்து முன் அஞ்சல் என்று வந்து ஆளக்கடவை. (எ-று)

(முடிபு) தொண்டர்க்கு விக்கனங்கள் அடாமை சென்று ஆண்டருள் ஐயா! மருதூரரே! நம் களம் விக்கல் காட்ட மெய் வேர்க்கும் அவத்தையில், ஆவிக்கு அனங்கள் அருத்துமுன், வந்து, அஞ்சல் என்றே ஆண்டருள்.

அவசமான காலம் = தம் வசமிழந்த காலம். (28)

**அஞ்சக் கரத்தை நினைவோர்க்கு**
**நாச்செவி யங்கமென்றுண்**
**டஞ்சக் கரத்தை யணைவேற்கண்**
**ணூர்வச மாகவொட்டா**
**ரஞ்சக் கரத்தை யரிக்களித்**
**தார்மரு தூரரங்கி**
**யஞ்சக் கரத்தை யறுத்தாரென்**
**பார்க்கில்லை யச்சங்களே.** (29)

(எ-து) அஞ்சு அக்கரத்தை நினைவோர்க்கு = பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரிப்போர்க்கு; நா செவி அங்கம் மென் துண்டம் சக்கு = நாவும் செவியும் அங்கமும் மெல்லிதாகிய மூக்கும் கண்ணும் என்னும் ஐம்புலனும்; அரத்தை அனை வேல் கண்ணார் வசம் ஆக ஒட்டார் = அரம் பொரப்பட்ட வேல் போலும் கண்ணார் வசமாக்கி மாய்கையில் விழாதபடி ஆள்வோர்; அம் சக்கரத்தை அரிக்கு அளித்தார் = அழகிய சக்கரத்தை விட்டுணுவுக் களித்தவர்; மருதூரர் = மருதூரினையுடையவர்; அங்கி அஞ்ச கரத்தை அறுத்தார் என்பார்க்கு இல்லை அச்சங்கள் ஏ = அக்னி தேவன் அஞ்ச அவனுடைய கையை அறுத்தவர் என்று கூறி இவ்வகையே தியானிப்பவர்க்கு ஒருங்காலும் அச்சமில்லை (எ-று)

முடிபு) அஞ்சு அக்கரத்தை நினைவோர்க்கு அங்கம் முதலான ஐம்புலனும் கண்ணார் வசம் ஆக வொட்டாரும், சக்கரத்தை அரிக்கு அளித்தவரும், அங்கி அஞ்சக் கரத்தை அறுத்தவரும், மருதூரரும் என்பார்க்கு அச்சங்கள் இல்லை. (29)

அச்சம் கரிக்குற *யாந்துயர்
நீங்கவொ ரண்ணலெய்த
வச்சங் கரிக்கு மரிதுகண்
டீர்மத னங்கமெரி
யச்சங் கரிக்கு மரனுழ
வோர்பறி யான்முத்தமீன்
னச்சங் கரிக்கும் வயன்மரு
தூர னணிவரைக்கே. (30)

---

பி-பே. *யான்றுயர்.

(எ-து) அச்சம் கரிக்கு உற = யானைக்கு அச்சம் தோன்ற; யாம் துயர் நீங்க = யாங்கள் துயரம் தவிர; ஓர் அண்ணல் எய்த அச்சு = ஒரு இராச குமாரன் எய்த அவ்வகை; சங்கு அரிக்கும் அரிது கண்டீர் = சங்கமேந்திய விட்டுணுவாலும் முடித்தலரிது; மதன் அங்கம் எரிய சங்கரிக்கும் அரன் — மன்மதனின் உடலும் எரியும்படி அழிக்கும் அரன்! உழவோர் பறியால் முத்தம் மீன் அ சங்கு அரிக்கும் வயல் மருதூரன் அணிவரைக்கு ஏ = உழவர் தம் கையில் பறியாலே முத்துக்களையும் மீன்களையும் அச்சங்குகளையும் கூட அரிக்கிற வளமையுடைய கழனி சூழ் மருதூரினையுடைய சுவாமியின் நாட்டு வரையிடத்து (எ-று)

இப்பாட்டு மணவிலக்கு

(முடிபு) மதன் அங்கம் எரிய சங்கரிக்கும் அரன் ஆகிய மருதூரன் அணிவரைக்கு, கரிக்கு அச்சம் உறவும், யாங்கள் துயர் நீங்கவும் ஓர் அண்ணல் எய்த அச்சு அரிக்கும் அரிது கண்டீர்.

இது பிறர்மணம் விலக்கல் பாங்கி கூற்று. (30)

**வரையரம் பாய்கதிர் வைவேன்**
**முருகர் வழுவைமுக**
**வரையரம் பாசிலைக் கஞ்சப்**
**புனன்மரு தூரர்வெள்ளி**
**வரையரம் பாய்சடை யாரிசை**
**யேழும் வரவமைத்த**
**வரையரம் பாய்வரக் கண்டோர்**
**மலரடி வந்திப்பனே.** *(31)*

(எ-து) வரை அரம் பாய் கதிர் வை வேல் முருகர் =வரையப்பட்ட அரத்தால் அராவிய வெந்து கூர்மை யான வேற்படையை யுடைய முருகக் கடவுட்கும்; வழுவை முகவர் ஐயர்=யானை முகமான விநாயகர்க்கும் பிதாவானவர்; அம் பாசு இலை கஞ்சம் புனல் மருதூரர் =அழகிய பச்சை நிறத்தையுடைய இலைகளைப் பெற்றி ருக்கும் தாமரை வளரும் புனல் சூழ்ந்த மருதூர்க் கடவுள்; வெள்ளி வரையர்=கைலாய மலையையுடைய வர்; அம் பாய் சடையார்=கங்கை பரந்த சடையினை யுடையவர்; இசை ஏழும் வர அமைத்த வரையர் அம்பு ஆய் வர கண்டோர்=குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரீ தாரம் என்னும் ஏழு இசைகளும் தோன்ற அமைத்த வேய்ங்குழலையுடைய திருமால் திரிபுர சங் காரம் செய்யும் பொழுது அம்பாகி வரப் பண்ணினவர்; மலர் அடி வந்திப்பன் = மலர் போன்ற திருவடியை வணங்குவன் (எ-று).

(முடிபு) முருகருக்கும் வழுவை முகவர்க்கும் ஐய ரும், வெள்ளி வரையரும், அம் பாய் சடையாரும். வரை யர் அம்பாய் வரக்கண்டோரும், ஆகிய மருதூரர் மல ரடியை வந்திப்பன்.

வழுவை-யானை; வரை-வேய், மூங்கில். வரையர்- வேய்ங்குழலையுடைய திருமால். (30)

**வந்தியங் காமலை குட்டங்க**
**ளைபித்தம் வாதமென்மேல்**
**வந்தியங் காமலை யானன**
**நாதனை வான்றனைச்செவ்**
**வந்தியங் காமலை மாமரு**
**தூரனை வாழ்த்திநெஞ்சே**
**வந்தியங் காமலை சூடும்**
**பிரானை வரதனையே.** (32)

(எ–து) வந்தியம் காமலை குட்டங்கள் ஐ பித்தம் வாதம் என் மேல் வந்து இயங்காமல் = நீரிழிவுகளும் காமாலையும் குட்ட நோய்களும் கக்கியும் வாதமும் பித்தமுமாகிய இவைகள் என்னிடத்துச் சஞ்சரியாமல்; வாழ்த்தி நெஞ்சே வந்தி=நெஞ்சமே! வாழ்த்தி வணங்கு; ஐ ஆனன நாதனை = ஐந்து முகமுடைய தலைவனை; வான்தனை செவ்வந்தி அம் கா மலை மா மருதூரனை = ஆகாயத்தைச் செவ்வந்தி பொருந்திய சோலைகள் மலையும் (பொரும்) பெருமையையுடைய மருதூரனை; அங்காம் அலை சூடும் பிரானை வரதனை ஏ = அங்கமாகிய தலையிலே அலை பொருந்திய கங்கையைச் சூடும் பெருமானை வரத்தைத் தருமவனை (எ–று)

(முடிபு) நெஞ்சே! ஐயானன நாதனை, அலை சூடும் பிரானை, வரதனை, மருதூரனை வந்தியம் முதலிய நோய்கள் என்மேல் வந்தியங்காமல் வாழ்த்தி வந்தி.

வந்தியம்—நீரிழிவு என்னும் நோய். அங்கம் என்னும் சொல் அங்காம் என விகாரமாயிற்று. (32)

வரம்பல வாயன்பர்க் கீவாய்
ககனம் வருங்கதிர
வரம்பல வாய்விட் டகலச்செற்
றுய்தவர் மாதர்கற்பின்
வரம்பல வாய்விட வேடங்கொண்
டாய்மரு தூர*பொன்னின்
வரம்பல வாயம தண்டத்தென்
மேலன்பு வைத்தருளே. (33)

---

பி–பே. * பொன்னி.

(எ–து) வரம் பல ஆய் அன்பர்க்கு ஈவாய் = பலவாகிய வரங்களையும் அன்பர்க்குக் கொடுக்கிறவனே! ககனம் வரும் கதிர வரு அம் பல் அ வாய் விட்டு அகல செற்ருய்=ஆகாயத்தில் உலவும் ஆதித்தற்கு உண்டாகிய அழகிய பல் அந்த வாய்விட்டு உதிரச் சினந்தவனே! தவர் மாதர் கற்பின் வரம் பல ஆய்விட வேடம் கொண்டாய்=இருடி பத்தினிகளுடைய கற்பின் வரமானது பலவிதமாய் விட்டுக் கற்பழியும்படிக் கங்காள வேடம் தரித்தோய்; மருதூர=மருதூரையுடையவனே !பொன்னின் வரு அம்பலவா=பொன்னுலே யுண்டாக்கப்பட்ட அம்பலத்தை யுடையோய்; யம தண்டத்து என் மேல் அன்பு வைத்து அருள் ஏ = இயமனல் தண்டிக்கை இல்லாதபடியாக என் மீது கிருபைவைத்தருள். (எ–று)

(முடிபு) அன்பர்க்கு வரம் ஈவாய்! கதிர பல் அகல செற்ருய்! வேடம் கொண்டாய்! அம்பலவா! மருதூர! யமதண்டத்து என் மேல் அன்பு வைத்தருள்.

கதிர — கதிரவற்கு, ‘கு’ அகரமாய்த் திரிந்தது. கற்பின் வரம்—கற்பின் சிறப்பு. (33)

**வையம் பரவ மருதூ**
**ருறையும் வரதர்செந்தீ**
**வையம் பரவ மதித்தார்க்**
**கரியவர் வாய்த்தவது**
**வையம் பரவ மகட்சூட்டு**
**வார்கழல் வாழ்த்தியன்பு**
**வையம் பரவ முடியார்நெஞ்**
**சேநல் வரந்தரவே.** *(34)*

(எ-து) வையம் பரவு அம் மருதூர் உறையும் வரதர்=வையகமெல்லாம் பரவப்பட்ட அழகிய மருதூரிலிருந்து, வரதர்-வசதியற்ற தனது அன்பர்க்கு வேண்டுவன கொடுக்கும் வரதர்; செம் தீ வை அம்பர் = அக்னியைக் கூர்மையான அம்பாகவுடையவர்; அவ மதித்தார்க்கு அரியர்=அவமான புத்தியை நினைப்பார்க்குக் காணப்படாதவர்; வாய்த்த வது வையம் பரவ மகள் சூட்டுவார் =வாய்ப்பாகிய கலியாணம் வையகமெல்லாம் பரவ பார்ப்பதியார்க்குப் புனைந்து கொண்டவர்; கழல் வாழ்த்தி அன்பு வை=அவர் கழலாகிய பாதங்களை வாழ்த்தி அன்பு வை; அம்பு அரவ முடியார் நெஞ்சே நல் வரம் தர ஏ = சலமாகிய கங்கை அரவம் புனையும் சடாடவியார் நெஞ்சமே! நல்ல வரத்தைத் தருவதற்கு (எ-று)

(முடிபு) நெஞ்சே! வை அம்பரும், அரியரும், சூட்டுவாரும், முடியாரும் ஆகிய மருதூரரது கழலை அவர் வரம்தர வாழ்த்தி அன்பு வை. (34)

**தரவாக மஞ்சன்ன மெய்க்கூற்றென்**
**மேல்வருந் தண்டத்திறு**
**தரவாக மங்கைபங் கோடு**
**விளங்கத் தலங்கணநா**
**தரவாக மங்கணின் றேத்துஞ்செந்**
**தாமரைத் தாளெனக்குத்**
**தரவாக மந்தொலை யாமரு**
**தூருறை சங்கரனே.** (35)

(இதற்குப் பழையவுரை யில்லை.)

(எ-து) தரவு ஆக மஞ்சு அன்ன மெய் கூற்று என் மேல் வரும் தண்டத்தின் = தருங்காலம் வர, கரு முகிலை நிகர்த்த உடலையுடைய கூற்றுவன் என் மேல் வரும் தண்ட காலத்திலே; ஆதரவு ஆக மங்கை பங்கோடு விளங்க=அன்பு தோன்ற உமாதேவியார் இடப்பாதியுடன் விளங்க; தலம் கணநாதர் அவ் ஆக மங்கள் நின்று ஏத்தும் செம் தாமரை தாள் எனக்கு தர வா=பாதலத்தவரும் பூதலத்தவரும் விண்டலத் தவரும் சிவ கணநாதரும் அந்த சிவாகமங்களும் நிலை பெற்றுப் புகழும் செந்தாமரை மலர் போன்ற திரு வடியை எனக்குத் தருதற்கு வா; கமம் தொலையா மரு தூர் உறை சங்கரனே = நிறைவு நீங்காத மருதூர் உறையும் சங்கரனே (எ-று).

(முடிபு) மருதூர் உறை சங்கரனே! கூற்று என் மேல் வரும் தண்டத்தின், மங்கை பங்கோடு விளங்க செந்தாமரைத்தாள் எனக்குத் தர வா. (35)

சங்கர வீர மதியா
பரண தமிழ்மருதூர்ச்
சங்கர வீர மழுவேந்து
நாத சரணெனக்கஞ்
சங்கர வீரமிட் டேத்தன்பர்
போற்றுன்பந் தானறவச்
சங்கர வீரமுன் வந்துநிற்
பாய்கொன்றைத் தாரவனே. (36)

(எ-து) சங்கு அரவு ஈரம் மதி ஆபரண = சங்கு அரவம் குளிர்ந்த பிறை இவற்றை ஆபரணமாக வுடை யோய்! தமிழ் மருதூர் சங்கர=தமிழ் சேர் மருதூரை

யுடைய சங்கரனே! வீர மழு ஏந்தும் நாத=வீரமாகிய மழுப்படையை யேந்தும் சுவாமியே! சரண் என கஞ்சம் கரவீரம் இட்டு ஏத்து அன்பர் போல் = உன்னையே சரண் என்று கருதித் தாமரைப் பூவும் அலரிப் பூவும் கொண்டு அர்ச்சித்துத் தோத்திரம் செய்யும் அன்பர்க்கு அருளுவதுபோல; துன்பம் தான் அற அச்சம் கரவு ஈர=அடியேனுடைய துன்பம் அறவும் எனது அச்சமும் கரவும் அறுக்கும்படியாகவும்; முன் வந்து நிற்பாய் கொன்றை தாரவனே = கொன்றைத் தார் அணிந்தவனாய் *என்முன் வந்து நிற்பாய் (எ-று).

(முடிபு) ஆபரண! நாத! மருதூர்ச்சங்கர! உன்னை ஏத்தும் அன்பர்க்குப் போல் துன்பம் அற, அச்சம் கரவு ஈர, கொன்றைத்தாரவனாய் முன் வந்து நிற்பாய். (36)

அவனித் தலத்தன்பர் துன்பந்
துடைப்பவ னம்புயன்மா
லவனித் தலத்தனென் றேத்தும்
பிரானைத் தளித்தவெண்டூ
யவனித் தலத்தண் வயன்மரு
தூரனை யார்விழிக்கேற்
பவனித் தலத்தண்டைத் தாள்செல்லன்
மீட்டென்னை யாற்றியதே. (37)

(எ-து) அவனி தலத்து அன்பர் துன்பம் துடைப்பவன் = அவனியினிடத்துள்ள தனது அன்பருடைய துன்பத்தைத் தவிர்ப்பவன்; அம்புயன் மாலவன் நித்தல் அத்தன் என்று ஏத்தும் பிரான் = அம்புயனாகிய

பி-பே. *என்னிடத் திருந்து.

பிரமனும் மாலவனுகிய மகாவிட்டுணுவினும் நாடோறும் சுவாமி என்று ஏத்தப்படும் பிரான்; அவனுடைய, நத்து அளித்த வெண் தூய் வன் கித்தல தண் வயல் மருதூர் அனையார் = சங்குகள் ஈனப்பட்ட வெண்மையும் தூய்மையுமுடைய வல்லிதான முத்துக்கள் செறிந்து குளிர்மை பொருந்திய வயல் சூழ்ந்த மருதூர் போலும் சிறப்புடையவள்; விழிக்கு ஏற்பு=எனது விழிக்கு ஏற்பதாக; அவனி தல தண்டை தாள் செல்லல் மீட்டு என்னை ஆற்றியது ஏ=பூமியைத் தோய்ந்த தண்டை பொருந்திய தாள்களானவை என்னை, என் மன வருத்தத்தில் செல்லாது மீள விட்டுக் காம நோயை ஆற்றிற்று (எ-று)

இப்பாட்டு தெளிதல்.

(முடிபு) துன்பம் துடைப்பவனுகிய ஏத்தும் பிரானுடைய மருதூர் அனையார் விழிக்கு ஏற்பு (ஏற்ப, அவனி தலம் (தோய்ந்த) தண்டைத்தாள் செல்லல் மீட்டு என்னை ஆற்றியது. (37)

**ஆற்றலைத் தண்டரும் போரிலை**
**மாலுக் கரியவனே**
**யாற்றலைத் தண்டரு நீர்முடி**
**யாய்மரு தூரரசே**
**யாற்றலைத் தண்டருங் கூற்றுள்கொண்**
**டேகிடு மன்றெனக்கோ**
**ராற்றலைத் தண்டருங் காணத்தந்**
**தாண்டரு ளஞ்சலென்றே.** (38)

(எ-து) ஆல் தலை தண்டு அரும்பு ஓர் இலைமாலுக்கும் அரியவனே=ஆல மரத்தின் தலைமையான கொம்பில் உண்டாகிய ஒரு இலையிற்றுயிலும் மாலுக்கும்

காணப்படாதவனே! ஆறு அலை தண் தரும் நீர் முடியாய் = கங்கையாகிய யாற்றினது அலையினால் குளிர்ச்சி தரும் நீர்மையையுடைய முடியுடையோய்! மருதூர் அரசே = மருதூரையுடைய மன்னனே! ஆற்றலை தண்டு அரும் கூற்று ஆள் கொண்டு ஏகிடும் அன்று = வலிமையைச் செலுத்தாநிற்கும் அரிதாகிய இயமனுடை ஆளாகிய கால தூதர் எனது உயிரைக்கொண்டு ஏகும் அன்று; எனக்கு ஓர் ஆற்றல் ஐந்து அண்டரும் காண தந்து ஆண்டு அருள் அஞ்சல் என்று ஏ = என்றனக்கு அத்தூதரை அஞ்சப்பண்ணும் ஆற்றலாகிய தலைமையை அண்டர் காணத் தந்து அஞ்சல் என்றே ஆண்டருள் (எ-று).

(முடிபு) மாலுக்கும் அரியவனே! நீர் முடியாய்! மருதூர் அரசே! கூற்று ஆள் (கூற்றுவனுடைய ஆள்) கொண்டு ஏகிடும் அன்று ஆற்றல் ஐந்து தந்து அஞ்சல் என்றே ஆண்டருள். (38)

அஞ்சுக மாகமஞ் சொன்மரு
தூர ரரக்கனையீ
ரஞ்சுக மாகமங் கச்செற்
றுனையு மடர்த்தபங்க
யஞ்சுக மாக மனத்துள்வைப்
பேனை யடர்கைக்குச்சற்
றஞ்சுக மாக மழைமுகில்
போனிறத் தந்தகனே. (39)

(எ-து) அம் சுகம் ஆகமம் சொல் மருதூரர் = அழகிய கிளிகளானவை ஆகமங்களைக் கூறும் வளப்பமுடைய மருதூரர்; அரக்கனை ஈர் அஞ்சு கம் ஆகம்

மங்க செற்று = இராவணனை பத்துத் தலைகளையும் உடம்பையும் நெறியக் காலால் ஊன்றி; உன்னையும் அடர்த்த பங்கயம் சுகம் ஆக மனத்துள் வைப்பேனை = கூற்றுவனாகிய உன்னையும் அடர்த்த பங்கயம் போன்ற பாதத்தைத் திடமாக மனத்துள் தியானித்திருக்கும் என்னை; அடர்கைக்கு சற்று அஞ்சுக = சிறிது கிட்டுதற்கும் அச்சப் படுவாயாக; மாக மழை முகில் போல் நிறத்து அந்தகனே = ஆகாயத்திலே மழை முகில் போலும் மேனியையுடைய இயமனே (எ—று).

(முடிபு) அந்தகனே! மருதூருடைய (பாத) பங்கயத்தை மனத்துள் வைப்பேனைச் சற்று அடர்கைக்கும் அஞ்சுக.

ஆகமம்—சிவாகமம். அடர்கை—நெருங்குதல். (39)

அந்தத் தலைவரை யாக்கையர்
தென்மரு தூரரன்பர்க்
கந்தத் தலைவரை மாத்திரை
யிற்செறு மத்தர்வெற்பி
னந்தத் தலைவரை போற்கரி
கொல்லுமு னஞ்சலென்றே
வந்தத் தலைவரை யன்றியென்
ளுர்ப்ப தணிமுரசே. (40)

(எ—து) அந்த தலை வரையா கையர் = அப்பொழுது பிரம்மாவினுடைய தலையை (வரையாத) பொருந்திய கையையுடையவர்; தென் மருதூரர் = அழகு பொருந்தும் மருதூரினையுடையவர்; அன்பர்க்கு அந்தத்து அலைவு அரை மாத்திரையில் செறும் அத்தர் வெற்பின் = அன்பர்கட்கு இறுதிக் காலத்திலே உண்டாகும் வருத்

த்தை அரை மாத்திரை நேரத்திலே போக்கும் சுவாமி அவருடைய நாட்டு வெற்பிடத்து; அந்த தலை வரை போல் கரி கொல்லுமுன் = அழகிய தலைமையாகிய மலை யைப் போன்று உயரமும் விசாலமும் உடைய கரி எங் களைக் கொல்லுமுன்; அஞ்சல் என்றே வந்த தலைவரை அன்றி என் ஆர்ப்பது அணி முரசு ஏ = பயப்படாதே என்று சொல்லிக்கொண்டு வந்த அந்தத் தலைவர் அந்த யானையை அடர்த்து எம்மைக் காத்த இராச குமாரர்க் கன்றி வேறொருவர்க்காக இவ்வணி முரசு ஆர்ப்பது என் (எ-று).

இப்பாட்டு பிறர்மணம் விலக்கு.

(முடிபு) தலைவரையாக் கையரும், சுத்தரும் ஆகிய மருதூரார் வெற்பில் கரி கொல்லுமுன் அஞ்சல் என்றே வந்த தலைவரை அன்றி, (பிறர்க்கு) அணி முரசு ஆர்ப் பது என்? (40)

**அணியவ னந்தி மருதூர**
**னென்றிறைஞ் சன்பர்க்குப்பாம்**
**பணியவ னந்தி வணங்கொண்ட**
**மேனிய னுனந்தனு**
**ரணியவ னந்திக ழீமத்து**
**ளாடி யருள்புரிந்தா**
**ரணியவ னந்தி வரத்தன்**
**பதத்தி லமர்ந்தவனே. (41)**

(எ-து) பாம்பு அணியவன் = சர்ப்பத்தை ஆபரண மாகப் பூண்டோன்; அந்தி வணம் கொண்ட மேனியன் = அந்தி வானத்தின் நிறம் போன்ற மேனியை

யுடையவன்; ஆனந்தன் = சுகசொரூபன்; ஆரணிய வனம் திகழ் ஈமத்துள் ஆடி = பெரும் அடவி திகழாநின்ற ஈமத்திலே ஆடுமவன்; அருள் புரிந்து ஆர் அணியவன் = அடியவர்க்கு அருள் செய்து ஆத்தி மாலையை அணிபவன்; நந்தி வர தன் பதத்தில் அமர்ந்தவன் = இடபமானது தன் பதத்தால் நடந்து வர அதன்மேல் அமர்ந்தவன்; அணியவன் நந்தி மருதூரன் என்று இறைஞ்சு அன்பர்க்கு = நந்தியே! மருதூரனே! என்று முன் சொன்னவையெல்லாம் கூட்டி இப்படிப்பட்ட சுவாமியே! என்று தோத்திரம் பண்ணி இறைஞ்சும் அன்பர்க்கு அருகாயிருந்து இரட்சிக்குமவன் எனக் கொள்க (எ-று).

(முடிபு) பாம்பு அணியவன், அந்திவணம் கொண்ட மேனியன், ஆனந்தன், ஈமத்துள் ஆடி, ஆர் அணியவன், நந்தி அமர்ந்தவன், நந்தி, மருதூரன் என்று இறைஞ்சு அன்பர்க்கு அணியவன்

பிரதியில் "வணங்கொண்ட வேணியன்" என்று மூல பாடம் உள்ளது, ஆனால் உரை 'மேனியன்' என்றே எழுதப்பட்டுள்ளது. (41)

**அம்பர வம்புனை வேணிய**
**பாணியி லங்கியவை**
**யம்பர வம்புனை சூழ்மரு**
**தூருறை யையதிசை**
**யம்பர வம்புனை நெற்றிக்**
**கனல்விழி யாயென்பதை**
**யம்பர வம்புனை கொங்கையை**
**வீழ்ப்ப தறிந்திலையே. (42)**

(எ-து) அம்பு அரவம் புனை வேணிய = அம்பாகிய கங்கையையும் அரவினையும் சூடும் சடையையுடையவனே! பாணியில் அங்கிய = அக்கினியைக் கையிலே தரித்தோய்! வையம் பரவு = புவனத்தி லுள்ளோரெல்லோராலும் பரவப்பட்டோய்; அம் புனை சூழ் மருதூர் உறை ஐய = அழகிய புன்னைகள் சூழ் மருதூரின்கண் உறையும் ஐயனே! திசை அம்பர = திக்கை ஆடையாகத் தரித்தோய்! வம்பு உனை நெற்றி கனல் விழியாய் என்பது = உன்னை நெற்றிக் கனல் விழியாய் என்று பலரும் சொல்வது வம்பாகும்; அ வம் புனை என்பதனுள் கடைத்துறை விதியால் 'வம்பு' வம் என்ருயிற்று. ஐ அம்பர் அ வம் புனை கொங்கையை வீழ்ப்பது அறிந்திலை ஏ = அந்த அழகிய வம்பாகிய கச்சுப்புனையும் கொங்கையாளை, ஐயம்பர் - பஞ்சபாணமுடைய காமன்; வீழ்ப்பது அறிந்திலையே = கொல்வதறிந்து இரங்கலையாகையால் (எ-று).

(முடிபு) அரவம் புனை வேணிய! பாணியில் அங்கிய! திசை அம்பர! நெற்றிக் கனல் விழியாய்! வையம் பரவு மருதூர் உறை ஐய! வம் (வம்பு) புனையும் கொங்கையை ஐயம்பர் வீழ்ப்பது அறிந்திலையே. (42)

காமனை விழியால் எரிக்கவேண்டும் என்பது கருத்து.

இலையை யிலங்கையர் தந்தையர்
தென்மரு தூரரெண்க
யிலையை யிலங்கையர் வீழ
வுதைத்தவ ரென்றஞ்சம்வே
றிலையை யிலங்கைய ராவென்று
பாலொழுக் கெல்லைமெய்யா
மிலையை யிலங்கைய ராவுயிர்
நீங்குமு னென்னெஞ்சமே. (43)

(எ-து) இலை அயில் அம் கையர் தந்தையர் = இலை பொருந்தும் வேலினை அழகிய கையிலே தரிக்கும் சுப்பிரமணியர்க்குத் தந்தையானவர்; தென் மருதூரர் = அழகிய மருதூரினையுடையவர்; எண் கயிலையை இலங்கையர் வீழ உதைத்தவர் = எண்ணப்பட்ட கயிலை மலையை எடுத்த இலங்கைக்கு அதிபனாகிய இராவணன் வீழ உதைத்தவர்; என் = என்று; தஞ்சம் வேறு இலை ஐ = எங்களுக்குத் தஞ்சம் வேறொருவருமிலை அய்யனே என்று; அங்கு ஐயர் ஆ என்று = அவ்விடத்தே மூத்தோர் முதலாகிய சனங்கள் ஆ வென்று இரக்கத்துடனே; பால் ஒழுக்கு எல்லை = அவசான காலத்திலே; (பாலினை வாயில் ஊற்ற மரணமடையும் காலத்திலே) மெய் ஆம் இலை ஐ இலங்கு ஐயரா (அயரா) உயிர் நீங்கும் முன் = தேகம் ஆகிய இருப்பிடத்தைக் கக்கி கோபம் விளங்க மதியா (கடையா) உயிர் நீங்குமுன்; என் நெஞ்சமே = முன்சொன்னபடி இப்படிப்பட்ட சுவாமி என்று தோத்திரம் பண்ணு என்னுடைய நெஞ்சமே (எ-று).

(முடிபு) நெஞ்சமே! ஐயர் தஞ்சம் வேறு இலை ஐ (ஐயனே) என்று பால் ஒழுக்கு எல்லையில், உயிர் நீங்கு முன், அயில் கையர் தந்தையர் இலங்கையர் வீழ கயிலையை உதைத்தவர் மருதூரர் என் (என்று சொல்). (43)

என்றலைக் குன்றிருத் தாடரவென்
பாருய்கைக் கெண்கயிலை
யென்றலைக் குன்றி னிருந்தருள்
செய்யு மிறைமருதூ
ரென்றலைக் குன்றி நிறங்கவர்
மேனிகொண் டிடழிக்கைக்
கென்றலைக் குன்றி விடாதகல்
வானத் தெழுவதுவே. (44)

(எ-து) என் தலைக்கு உன் திரு தாள் தா என்பார் உய்கைக்கு=எனது தலைக்கு உன்னுடைய திருத்தாளைத் தா என்னும் அடியார் பிழைக்கும் வகைக்கு; எண் கயிலை என் தலை குன்றில் இருந்து அருள் செய்யும் இறை மருதூர்=எண்ணப்பட்ட கைலாசம் என்று சொல்லப்பட்ட முந்திய குன்றிலிருந்து அருள் செய்கின்ற சுவாமியுடைய மருதூரிலே; என்று அலை குன்றி நிறம் கவர் மேனி கொண்டு=என்று-எல்; அலை-இராத்திரியை; எல்லாகிய ஆதித்தன் இராத்திரிப் பொழுதை குன்றியினுடைய நிறத்தைக் கவரும் சிவந்த மேனியைக் கொண்டு; ஈடு அழிக்கைக்கு=போக்கும்படிக்கு; என்று அலை குன்றிவிடாது அகல் வானத்து எழுவது ஏ = எப்போது சமுத்திரத்தில் குன்றிப்போகாமல் அகன்ற வானத்தின்கண் எழுவது தான் (எ-று).

இப்பாட்டு இரவினீட்டம்.

(முடிபு) என் தலைக்கு உன் திருத்தாள் தா என்பார் உய்கைக்குக் கயிலைக் குன்றிலிருந்து அருள் செய்யும் இறைவனுடைய மருதூரில் என்று (சூரியன்) அலை (அல்லை) குன்றி நிறம் கவர் மேனி கொண்டு ஈடழிக்கைக்குக் குன்றிவிடாது எழுவது என்று. (44)

எழுதா ரணிபுகழ் மாமரு
தூருறை யீசர்வெற்பி
லெழுதா ரணிதிகழ் தோளண்ண
லேயிந்த முத்தமன்ற
லெழுதா ரணிகுழ லாட்கெங்ங
னுந்தொய்யி லேந்துகொங்கைக்
கெழுதா ரணிய மடவா
ரிடையி னிறுதிகண்டே. (45)

(எ-து) எழு தாரணி புகழ் மா மருதூர் உறை ஈசர் வெற்பில்=ஏழுலகும் புகழும் உயர்ந்த மருதூரின் கண் உறையும் ஈசருடைய வரையிடத்து; எழு தார் அணி திகழ் தோள் அண்ணலே = தாரினது தொடர்ச்சியாயிருக்கின்ற ஆபரணம்; அவற்றோடு திகழ்ந்து எழப்பட்ட தோளினையுடைய அண்ணலே! இந்த முத்தம்=நீ கையுறையாகக் கொண்டு வந்த இந்த முத்து மாலை; தொய்யில் ஏந்து கொங்கைக்கு எழுதார் அணிய மடவார் இடையின் இறுதி கண்டு ஏ = அடுத்த மடவாராகிய தோழிமார், ஏந்து—கனமாகிய, கொங்கையிலே தொய்யிலும் எழுதார் இடையின் நேர்மையைக் கண்டே; மன்றல் எழு தார் அணி குழலாட்கு எங்ஙன் ஆம்=அப்படிப்பட்ட மன்றல் எழும் தாரினை அணிந்த குழலினையுடையாட்கு எப்படி யாகும் (எ-று).

இப்பாட்டு கையுறை மறுத்தல்.

(முடிபு) மருதூர் உறை ஈசர் வெற்பில் (உள்ள) அண்ணலே! (நீ கொண்டு வந்த) இந்த முத்தம் அணி குழலாட்கு எங்ஙன் ஆம்? (ஏன் எனில்) ஏந்து கொங்கைக்கு இடையின் இறுதி கண்டே அணிய மடவார் தொய்யிலும் எழுதாரே. (45)

**கண்டனை யாரழ லாக்கொண்ட**
**தேவைக் கரியதிருக்**
**கண்டனை யார வயன்மரு**
**தூர்தனிற் கண்களிக்கக்**
**கண்டனை யார்வயிற் றிற்கருத்**
**தாழ்வுங் கடந்துசொற்றேன்**
**கண்டனை யாரயிற் கண்ணும்**
**வலையுங் கடந்தனமே.** (46)

(எ—து) கண்ணனை ஆர் அழலா கொண்ட தேவை = தனது கண்ணை நிறைந்த அக்கினியாகக் கொண்ட தேவனை; கரிய திரு கண்டனை = கருத்த அழகிய கண்டத்தையுடையவனை; ஆர வயல் மருதூர் தனில் கண் களிக்க கண்டு = முத்துக்களால் நிறையும் வயல் சூழ் மருதூர் தனில் கண் களிக்கும்படித் தெரிசித்து; அனையார் வயிற்றில் கரு தாழ்வும் கடந்து = அன்னையாருடைய வயிற்றில் பொல்லாத கருவிலே அழுந்துவதும் கடந்து; சொல் தேன் கண்டு அனையார் அயில் கண் ஆம் வலையும் கடந்தனம் ஏ = சொல்லானது தேனும் கற்கண்டும் நிகரான மாதரின் அயில்போன்ற கண்ணாகும் வலையினையும் யாம் கடந்தோம் (எ—று).

(முடிபு) யாம் தேவை திருக்கண்டனை மருதூர் தனிற் கண் களிக்கக் கண்டு, அன்னையார் வயிற்றிற் கருத்தாழ்வும் கடந்து, சொல் தேனையும் கண்டையும் நிகர்த்த மாதரார் கண்ணும் வலையும் கடந்தனம். (46)

கடனந்தி *னம்பவந் தீர்கைக்கு
வைகைக் கவரின்வந்து

கடனந்தி னம்படி வார்மரு
தூரன் கடுவுண்டவி

கடனந்தி நம்பன் கடுங்கால
காலன்கங் காளன்கன்ம

கடனந் தினந்தொறும் †புல்லும்பி
ரானென் கருத்தினனே. (47)

---

பி—பே. * நம்பவந். † புல்லும் பிரானங்.

(எ-து) கடல் நந்து இனம் வைகை கவரின் வந்து = கடலிலுள்ள சங்கினமானது வைகையாற்றின் கவரின் (பிரிவின்) வழியே வந்த; படி வார் மருதூரன் = படியும் வள வளப்பமுள்ள மருதூரினை யுடையோன்; கடு உண்ட விகடன் நந்தி நம்பன் கடும் கால காலன் கங்காளன் = கடுவினையுண்ட விகடன் நந்தி நம்பன் என்னும் பெயரினையுடையவன் கடுமையாகிய கால காலன்; கங்காள வேடம் தரித்தோன்; கல் மகள் தனம் தினம் தோறும் புல்லும் பிரான் = கல்லென்னும் இமயகிரியின் மகளாகிய பார்வதியாருடைய தனம் புல்லும்படிக்குப் பாகத்தில் அமைத்த பிரான்; இப்படிப்பட்ட சுவாமி; கடல் நந்து இனம் பவம் தீர்கைக்கு என் கருத்தினனே = செனனங்களாகிய கடலும் கெட்டு இன்னும் அளவில்லாத பாவமும் தீருகைக்கு என்னிதய கமலத்தே யிருப்பான் (எ-று).

(முடிபு) கடுவுண்ட விகடனும், நந்தியும், நம்பனும், காலகாலனும், கங்காளனும், புல்லும் பிரானுமாகிய மருதூரன் பவம் தீர்கைக்கு என் கருத்தினன். (47)

**கருமங் குலத்திறந் தற்சங்கை**
**விட்டுக் கசிந்துபவக்**
**கருமங் குலத்துமெய் யன்பர்க்கு**
**வீடு கமலங்கணி**
**கருமங் குலத்திருக் கைம்மங்கை**
**பங்கன் கழுகுசென்று**
**கருமங் குலத்தணை யும்மரு**
**தூரன் கழலிணையே.** (48)

(எ-து) கருமம் குல திறம் தன் சங்கை விட்டு கசிந்து = உலக வியற்கையாகிய கருமமும் திறமான தொரு மேற்குல மென்னும் இயல்பும், தற் சங்கை—தான் சங்கை; மானமென்பதும் விட்டு உளம் நெகிழ்ந்து; பவ கரு மங்கு=பாவ ரூபமாய செனனத்திற்குத் தாரக மான கரு மங்கிப் போம்படி நினைந்து; உலத்து மெய் அன்பர்க்கு=தபசுகளினாலே உலர்த்தப்பட்ட சரீரத்தை யுடைய அன்பர்க்கு; வீடு = அவர்களுடைய ஆன்மா வுறையுமிடம்; கமலங்கள் நிகரும் அங்குலம் = கமலங் களை நிகராய மெல்கிய விரலிணையு முடைய; இரு கை மங்கை பங்கன் = இரண்டு கைகளினாலும் விளங்கா நிற்கும் உமையவளைப் பங்காயுள்ளவர்; கமுகு சென்று =கமுக மரங்களானவை யுயர்ந்து; கரு மங்குல் அத்து அணையும் மருதூரன் கழல் இணை ஏ = கரிய மேகத்து அணையும்; அப்படி வளம் பொருந்திய மருதூரன் பாதம் இரண்டும் (எ-று). அத்து இடைச்சேர்தி.

(முடிபு) கருமத்தையும் குலத்திறத்தையும் தன் சங்கையையும் விட்டுக் கசிந்து பவக்கரு மங்கு (மங்கும் படி) மெய் உலர்த்தும் அன்பர்க்கு வீடு மங்கை பங்கனா கிய மருதூரன் கழலிணையே. (48)

**கழலாத வஞ்செய்து போற்றிடு**
**கைக்கென் கருத்தைவிட்டுக்**
**கழலாத வன்பு தருவாய்**
**விடுதளக் கன்னியர்கைக்**
**கழலாத வன்பதந் தோய்மரு**
**தூர கருணைநின்பு**
**கழலாத வன்சொற் கதற்றும்**
**பிதற்றுடைக் கள்வனுக்கே.** (49)

(எ–து) கழலா=வீரக்கழல் புனையும் பாதமுடைய வனே! தவம் செய்து போற்றிடு கைக்கு என் கருத்தை விட்டு கழலாத அன்பு தருவாய்=யான் தவம் செய்கைக்கும் போற்றுதற்கும் என் கருத்தை விட்டு நீங்காத அன்பினைத் தருவாய். விடுதள கன்னியர் கை கழல் ஆதவன் பதம் தோய் மருதூர=மேடையுள் விடுதளத்திலிருந்து கன்னியராடும் கழல் முதலானவற்றைச் சூரிய மண்டலம் தொடும் எனவே மேடையை உயர்த்துக் கூறியது; அப்படி வளம் பொருந்தும் மருதூரனே! கருணை நின் புகழ் அலாத வன் சொல் கதறும் பிதற்று உடை கள்வனுக்கு ஏ=கருணை அமைந்த நின் புகழ்ச் சொல் அல்லாத பொல்லாத சொற்களைக் கத்திப் பிதற்றித் திரியும் கள்வனாகிய எனக்கு (எ–று).

(முடிபு) கழலா! மருதூர! நின் புகழ் அல்லாத வன் சொல்லைக் கதறும் பிதற்றுடைக் கள்வனாகிய எனக்குத் தவம் செய்து போற்றிடுகைக்கு என் கருத்தை விட்டுக் கழலாத அன்பு தருவாய். (49)

*களங்கந் தரமனை யார்†மூல
மாய்மைக் கருமமென்னுங்
களங்கந் தரங்கெட நீர்சொரி
யாநிற்பக் கண்புளகங்
களங்கந் தரவென்னை யாண்டருள்
வாயென்று காவொழுக்குங்
களங்கந் தரமழை போன்மரு
தூர்நகர் காவலனே. (50)

---

பி–பே. *களங்கந் தரமனையாய். †மூல மாயை.

(எ–து) களம் கந்தர மனையார் = கள்ளத்திற்கு மனையாகிய கந்தரமுடைய மாதரும்; மூல மாய்கை = ஆணவமலமும் மாயையும்; கருமம் என்னும் களங்கம் தரம் கெட = கன்மமும் என்று சொல்லப்படும் களங்கமாகிய அவற்றின் மேம்பாடு கெடவும்; நீர் சொரியா நிற்ப கண் = கண்களானவை ஆனந்த சலம் பொழிய; புளகங்கள் அங்கம் தர = புளகத்தை உடம்பு தர; என்னை ஆண்டருள் வாய் என்று = என்றுதான் என்னை ஆட்கொண்டருள்வாய்? கா ஒழுக்கு களங்கு அந்தர மழை போல் மருதூர் உறை காவலனே = காவிடத்து மலர்களிலும் கனிகளிலும் நின்று ஒழுகும் களங்கு என்னுந் தேன் ஆகிய அந்த மழை ஆகாயத்தின் மழை போலும் வளப்பம் பொருந்திய மருதூர் நகரத்தில் உறையும் காவலனே (எ–று).

(முடிபு) மருதூர் நகர்க் காவலனே! அனையாரும் மூலமும் மாய்கையும் கருமமும் என்னும் களங்கம் கெட, கண்ணீர் சொரியா நிற்ப, அங்கம் புளகம் தர, என்னை ஆண்டருள்வாய். (50)

**காவல ராவரும் பர்க்கிறை**
**யாகுவர் கங்குன்மதிற்**
**காவல ராவருங் கோறகன்ன**
**ராயினுங் காலுகுக்குங்**
**காவல ராவருந் தும்மரு**
**தூரரைக் கன்னிதன்பங்**
**காவல ராவருந் தாரணி**
**வாயென்று கைதொழவே.** *(51)*

(எ–து) காவலர் ஆவர் = பூமிக்கு அரசராவார்; உம்பர்க்கு இறை ஆகுவர் = தேவர்கட்கு இறையாகிய தேவேந்திரனுவார்; கங்குல் மதில் காவல் அராவரும் கோல் கன்னர் ஆயினும் = இராத்திரி காலத்திலே காவலாகிய மதிலை அறுக்குந் தன்மையுள்ள கன்னக்கோலை யுடைய கள்ளராயினும்; கால் உகுக்கும் கா அலர் ஆ அருந்தும் மருதூரரை = காற்றினல் உதிர்க்கப்பட்ட காவினிடத்து மலர்களைப் பசுக்கள் அருந்தும் வளப்பமுடைய மருதூரரை: கன்னி தன் பங்கா = உமாதேவியாகிய கன்னியை இடப்பாகத்தில் உடையவனே! அலரா வரும் தார் அணிவாய் என்று கை தொழவே = அலர்ந்து வருவதெனவே, அப்போதைக் கப்போது மணத்தைக் கொடுத்துவரும் தாரினை அணிவாய் என்று சொல்லிக் கைகளாற்றொழ முற்சொன்னபடி யாவார் (எ–று).

(முடிபு) கோல் கள்ளர் ஆயினும் மருதூரரைக் கன்னி பங்கா! தார் அணிவாய்! என்று கை தொழவே, அவ்வாறு கைதொழுத அவர் காவலர் ஆவர்; உம்பர்க்கு இறை ஆகுவர். (51)

**கையுடை யானை யதளங்கி**
**யானைக் கதம்பெறுவேங்**
**கையுடை யானை மருதூர**
**னைக்கரு தார்கள்வன்ப**
**கையுடை யானைத் தொழுதுவில்**
**வேடன் கடுங்கணையாக்**
**கையுடை யானை மடவா**
**ருயிர்க்கென் கரைவதுவே.** (52)

(எ-து) கை உடையானை அதள் அங்கியானை = துதிக்கையினையுடைய யானை அதளாகிய தோலைப் போர்வையாயுள்ளவனை; கதம் பெறு வேங்கை உடையானை = கோபம் பொருந்திய வேங்கை என்றவதனால் இங்கே அதன் தோலாயிற்று; அத்தோலினை உடையென்னும் ஆடையாகவுள்ளானை; மருதூரனை—மருதூரினை உடையவனை; கருதார்கள் வன் பகை உடையானை = எண்ணாராகிய வல்லிதான பகையைச் சங்கரித்தவனை; வில் வேள் தன் கடும் கணை யாக்கை உடையானை = வில்லினையுடைய காமனது கணை; அந்தக் கணை யானதை, கடும்—கடிந்து தள்ளுமதொரு யாக்கையுடையானை; இப்படிப்பட்ட சுவாமியை; தொழுது = கை குவித்து வணங்கி; மடவார் உயிர்க்கு என் கரைவது ஏ = அவரால் உற்ற மயலால் வருந்தும் மடவார் உயிர்க்கு அந்தப் பரமேசுரன் இரங்கும் என்று கரைவது என் (எ-று).

இப்பாட்டு பாங்கி வெறுத்துக் கூறல்.

(முடிபு) யானை அதள் அங்கியானை, வேங்கை உடையானை, பகை உடையானை, வேள்தன் கணையைக் கடும் (கடியும்) யாக்கை உடையானை, மருதூரனைச் சென்று, மடவார் தொழுது, பின் உயிர்க்குக் கரைவது என். (52)

கரைவா னகங்குழை மெய்யடி
யார்க்குக் கலங்கவரக்
கரைவா னகங்கொண் டடர்க்கும்
பிரான்புரக் கள்ளவஞ்ச

கரைவா னகந்தை கெடத்தக
னஞ்செய் கடவுள்பொய்கைக்
கரைவா *னகங்கைத் தொடும்மரு
தூரனெங் கட்கிறையே. (53)

(எ—து) கரைவான் அகம் குழை மெய் அடியார்க்கு =அகமாகிய மனம் குழையும் உண்மை பொருந்திய அடியார்க்குக் கிருபை செய்யுமவன்; கலங்க அரக்கர் ஐ வான் நகம் கொண்டு அடர்க்கும் பிரான் = அரக்கர்க்குத் தலைவனான இராவணன் கலங்க, ஆகாயம் போன்ற வனப்பினையுடைய தன் காலின் நகத்தினால் அடர்த்த பிரான்; புர கள்ள வஞ்சரை வான் அகந்தை கெட தகனம் செய் கடவுள் = திரிபுரம் வஞ்சகரை மேவிற்றுதலால் வஞ்சகராயிற்று. புரமாகிய கள்ளமும் வஞ்சமும் பொருந்திய அதனைப் பெரிய அகந்தை கெடத் தகனம் செய் கடவுள்; பொய்கை கரை வான கங்கை தொடும் மருதூரன் எங்கட்கு இறை ஏ = பொய்கையின் கரை வானத்திலுள்ள கங்கையாற்றைத் தொடும் மருதூரன் எங்கட்கு இறைவன் (எ—று).

(முடிபு) அடியார்க்குக் கரைவான்; அரக்கர்தம் ஐ (யை) நகம் கொண்டு அடர்க்கும் பிரான்; புரத்தைத் தகனம் செய் கடவுள் ஆகிய மருதூரன் எங்கட்கு இறை.

கட்டா மரைய ரமரர்க்கு
வேந்தர் கமலந்துழாய்க்
கட்டா மரையர் மருதூ
ரிறைவர் கறையரவக்

---

பி—பே. *னகந்தொடு மாமரு.

கட்டா மரையர் மனமே
யிருவினைக் கட்டறநங்
கட்டா மரையரென் றுட்கொண்
டருள்கைக்குக் கற்பனையே. (54)

(எ-து) கள் தாமரையர்=மது பொருந்திய தாமரையராகிய பிரமாவிற்கும்; அமரர்க்கு வேந்தர்=தேவர்கட்கு வேந்தராகிய இந்திரர்க்கும்; கமலம் துழாய் கண் தாமர் ஐயர்=கமலமும் துழாயாகிய துளசியும் கண்ணும் தாமமுமாகவுள்ள விட்டுணுவுக்கும் சுவாமியானவர்; மருதூர் இறைவர்=மருதூரினையுடைய இறைவர்; கறை அரவ கட்டு ஆம் அரையர்=விடம் பொருந்திய அரவம் கட்டப்பட்ட அரையையுடையோர்; இரு வினை கட்டு அற=நல்வினை தீவினையென்னும் கட்டாகிய பாசம் அற; நம் கண் தாம் அரையர் = நம்மிடத்துத் தாமாயிருக்கிற சுவாமி; என்று ஆட்கொண்டு அருள்கைக்கு கற்பனையே மனமே=என்று சொல்லுதல் ஆட்கொண்டருளுதற்குக் கற்பித்தபடியாம் மனமே (எ-று).

(முடிபு) மனமே! தாமரையர்க்கும் அமரர்க்கு வேந்தர்க்கும் துழாய்த் தாமர்க்கும் ஐயர், அரவக்கட்டாம் அரையர், வினைக்கட்டற நங்கட்டாம் அரையர், மருதூர் இறைவர் என்று (சொல்லுதல் அவர்) ஆட்கொண்டருள் கைக்குக் கற்பனை. (54)

கற்பனை யத்தனை யாயினு
நின்புகழ் கற்பதுநான்
கற்பனை யத்தனை காணச்
சரவணப் பொய்கைவந்தோன்
கற்பனை யத்தனை யாமரு
தூருறைக் காரணவக்
கற்பனை யத்தனை பத்தர்குற்
றத்தைக் கடிபவனே. (55)

(எ–து) கற்பனை அத்தனை ஆயினும் = கற்பித்த படி வயதின் கற்பம் ஆயினும்; நின் புகழ் கற்பது நான் கற்ப நையத்தனை (நயத்தனை) காண் = உன்னுடைய கீர்த்தியை நான் கற்கத்தக்க மாட்டெல்லாம் கற்கும்படி நயந்து கொண்டனை காண்; சரவண பொய்கை வந்தோன் = அந்தச் சரவணப் பொய்கையில் அவதரித்த குமார சுவாமியார்க்கும்; கல் பனை அத்தன் ஐயா = கல்–மலை நிகர்க்கும், பனை–பனை போன்ற, அத்தன்–கையினையுடைய விநாயகர்க்கு ஐயா–பிதாவானவனே! மருதூர் உறை காரணவ = மருதூரிலே தங்கியுள்ள நிமித்த காரணனே! கற்பு அனை அத்த = கற்புடைய உலக மாதாவாகிய உமைக்கு ஒரு பாதியானவனே! நை பத்தர் குற்றத்தை கடிபவனே = உள நெகிழ்வுடைய பத்தர்க்கு வருவதொரு குற்றத்தைக் கடிபவனே (எ–று)

(முடிபு) சரவணப் பொய்கை வந்தோனுக்கும் பனை போன்ற அத்தனுக்கும் ஐயா! கற்பையுடைய அன்னைக்கு அத்தா! பத்தர் குற்றத்தைக் கடிபவனே! மருதூர் உறை காரணவ! (55)

**கடியவம் போடிகல் கண்ணியைக்**
**கண்டு கலங்கிநெஞ்சிற்**
**கடியவம் போய்நின் றழிந்தனன்**
**காண்குற்றங் கண்டெனை நீ**
**கடியவம் போதமுன் கண்டதுண்**
**டோவண்டின் காலணையக்**
**கடியவம் போருகங் கான்மரு**
***தூர னகல்வரைக்கே.** (56)

---

பி–பே. *மருதூரரன் கல்வரைக்கே.

(எ-து) கடிய அம்போடு இகல் கண்ணிலைய கண்டு = கடிய அம்பினுடன் பகைக்கும் கருங்கண்ணினை யுடையவளைக் கண்டு; கலங்கி = மனங் கலங்கி; நெஞ்சில் கடி அவம் போய் நின்று அழிந்தனன் = நெஞ்சிலே கடி என்னும் காவலானது அவமாகப்போய் நின்று அழிந்தேன்; காண் = மையலாகிய சோபத்தால் மெய்ம்மறந்தேன் காண்; குற்றம் கண்டு எனை நீ கடிய அம் போதம் முன் கண்டது உண்டோ = தோழனே! என்னிடத்து நாடோறும் உண்டாகிய குற்றங் கண்டு அதனை நீ கடிந்திட நல்லதொரு போதினையாகிய அறிவையை முன்னொளிலே கண்டது உண்டோ? வண்டின் கால் அணைய = வண்டின் கால்கள் சேர; அ அம்போருகம் கடி கால் மருதூரன் அகல் வரைக்கு ஏ = அழகிய தாமரையானவை தேனைச் சொரியும் வளம் பொருந்திய மருதூரனுடைய அகன்ற வரையிடத்து (எ-று).

இப்பாட்டு தலைவன் பாங்கனோடுற்றதுரைத்தல்.

(முடிபு) (தோழனே!) மருதூரன் அகல்வரையிடத்துக் கண்ணியைக் கண்டு கலங்கி (அதனால்) நெஞ்சிற் கடியானது அவமே போய் அழிந்தனன் காண்; நீ குற்றங் கண்டு கடிய போதனையாளைக் கண்டதுண்டோ. (56)

**கல்லார மாலைமென் கூந்தற்கைக்**
**காந்தட் கவுரிபங்கன்**
**கல்லார மாலைத் திகழ்மரு**
**தூரிற்பொய் கைக்குண்மண்ணைக்**

**கல்லார மாலையங் கையாற்**
**றெழார்சைவ காவியங்கள்**
**கல்லார மாலயன் காணுப்**
**பதமெங்ஙன் காண்குவரே.** (57)

(எ-து) கல்லாரம் மாலைமெல் கூந்தல் கை காந்தள் கௌரிபங்கன் = செங்கழுநீர் மலர் மாலை பொருந்திய மெல்லிய குழலினையும் காந்தள் மலர் போன்ற கைகளையுமுடைய கௌரியை இடப்பாகத்திலே யுடைய கடவுள்; கல் ஆரம் ஆலை திகழ் மருதூரில் = மாணிக்கம் முதலான இரத்தினக் கற்களும் முத்தும் கரும்பும் விளங்கும் மருதூரில்; பொய்கைக்குள் மண்ணை கல்லார் = நார்ந்த பொய்கைக்குள் மண்ணினை வெட்டி வெளியில் எடுத்துப் போடார்; அம் ஆலயம் கையால் தொழார் = அழகிய திருக்கோயிலைக் கைகளாற் றொழார்கள்; சைவ காவியங்கள் கல்லார் = சிவ சம்பந்தமான காவியங்களைப் படியார்; அ மால் அயன் காணு பதம் எங்ஙன் காண்குவர் ஏ = இவ்விதமாகிய மாந்தர் அனாதியான மாலும் அயனும் காணாத திருவடியை எப்படிக் காண்பர் (எ-று).

(முடிபு) (மாந்தர்) கௌரிபங்கன் மருதூரில் பொய்கை மண்ணைக் கல்லார்; ஆலயம் தொழார்; சைவ காவியம் கல்லார்; (இவ்வாறிருப்பின்) மால் அயன் காணாப்பதத்தை எப்படிக் காண்பர். (57)

***குவலையங் கற்பக நாடர**
**வப்பதி கும்பிடுஞ்செங்**
**குவலையங் கட்பொழி வார்மரு**
**தூரிறை †கூரயிலாற்**

---

பி-பே. *நான்கடியிலும் 'குவலயம்' என்ற பாடம்.
†கூரயிலா.

**குவலையங் கற்பொடி யாகத்**
**தொடுங்கந்தர் ‡கோக்கொற்றவர்**
**குவலையங் கட்செவி யாகக்கொள்**
**வாரெங் குலதெய்வமே.** *(58)*

(எ—து) குவலையம் கற்பக நாடு அரவ பதி கும்பிடும் = பூலோகம் தெய்வலோகம் நாகலோகம் இவற்றில் உள்ளவரெல்லாம் கும்பிடுகின்ற: செம் குவலை அம் கள் பொழி வார் மருதூர் இறை = செவ்விதாகிய குவளை மலர்கள் அழகிய நிறைந்த தேனைப் பொழியும் வளப்ப முள்ள மருதூர் இறைவர்; கூர் அயிலால் குவலையம் கல் பொடி ஆக தொடும் கந்தர் கோ = கூர்மை பொருந்திய வேலினுலே குவலைய மென்னும் சமுத்திரத்தையும் கல் என்னும் கிரவுஞ்ச கிரியையும் பொடியாக்கிய கந்த சுவாமியார்க்குப் பிதாவான சுவாமி; கொற்றவர் = வெற்றிப் பாட்டையுடையவர்; குவலையம் கட்செவி ஆக கொள்வார் எம் குல தெய்வம ஏ = பாம்பினைக் கங்கண மாகத் தரித்த சுவாமி எங்குல தெய்வமே (எ—று).

(முடிபு) குவலையமும் கற்பக நாடும் அரவப்பதியும் கும்பிடும் மருதூர் இறை; கந்தர் கோ; கொற்றவர்; கட் செவியைக் குவலையமாகக் கொள்வார்; (இவர்) எங்குல தெய்வமே. (58)

**குலஞ்சுகந் தாதிகள் விட்டுத்**
**தவவுருக் கொண்டுநெஞ்சா**
**குலஞ்சுகந் தாகம்பொய் மோகந்**
**தவிர்ந்து குணத்திரயங்**

---

‡ கொற்றவா

குலஞ்சுகந் தாட்பட மாட்டா
வெனைப்பணி கொண்டதென்கோ
குலஞ்சுகந் தாதுகொய் *மாமரு
தூர்க்குன்றக் கோதண்டனே. (59)

(எ-து) குலம் சுகந்தம் ஆதிகள் விட்டு=மேலாகிய குலத்தையும் சுகந்த மாதியாய சகல போகங்களையும் விட்டு; தவம் உரு கொண்டு=தவ வேடத்தைக் கொண்டு; நெஞ்சு ஆகுலம் சுகம் தாகம் பொய் மோகம் தவிர்ந்து =நெஞ்சினது ஆகுலமும் சுகமும் தாகமும் பொய்யும் மோகமும் தவிர்ந்து; குண திரையம் குலஞ்சு= இராசத தாமச சாத்துவீகம் என்னும் முக்குணங்களும் குலைந்து; உகந்து ஆட்படமாட்டா எனை—உன்னுடைய பாதத்தில் விருப்புற்று அடிமையாவதற்கு அறியாத வென்னை; பணி கொண்டது என் = அடிமை கொண்டது எந்த வகை? கோகுலம் சுகம் தாது கொய் கா மருதூர் குன்றம் கோதண்டனே = குயிலும் கிளியும் மலர்களின் தாதினைக் குடையும் வளப்பம் பொருந்திய மருதூர் உறைவோய்! மகா மேருமலையை வில்லாக வுடையவனே! (எ-று)

(முடிபு) மருதூர்க் குன்றக் கோதண்டனே! குலத்தையும் சுகந்தாதிகளையும் விட்டுத், தவவுருக்கொண்டு, நெஞ்சிலுள்ள ஆகுலம் சுகம் தாகம் பொய் மோகம் தவிர்ந்து குணத்திரயமும் குலஞ்சு (குலைந்து) உகந்து ஆட்படமாட்டாத எனைப் பணிகொண்டது என்கொல்? (59)

தண்டலை நாகங்கள் பூகங்கள்
சூழுந் தடஞ்சுனையிற்

பி-பே. *காமரு.

றண்டலை நாகங் *கனைகழு
†நீர்கமழ் தாதுவிண்ட
தண்டலை நாகங்கொ லென்றஞ்சி
மாறெனத் தன்னிழன்மேற்
றண்டலை நாகந் தவிர்மரு
தூரனென் றுபரமே. (60)

(எ-து) தண்டலை நாகங்கள் பூகங்கள் சூழும் தடம் சுனையில்=சோலையிலே புன்னாக மரங்களும் பூகங்களும் சூழ்ந்துள்ள அகன்ற பொய்கையில்; தண்டு அலை நாகு அம் கனை கழுநீர் கமழ் தாது விண்ட தண் தலை நாகம் கொல் என்று அஞ்சி = தட்பத்தை யுடைய அலையில் வருவதொரு, அம்-அழகிய, தாது விண்டிருக்கும் செங் கழுநீரின் நாகுப்பூவைத் தண் தலையையுடைய நாகங் கொலோ என்று கருதி அஞ்சி; மாறு என தன் நிழல் மேல் தண்டலை நாகம் தவிர் மருதூரன் என் தாபரம் ஏ =நாகம் என்னும் ஆண் யானையானது தன் நிழலை மாறு என்று கருதி அதன்மேற் பொருவதொரு சினத்தைத் தவிர்க்கும் வளப்பம் பொருந்திய மருதூரன் எனக்குத் தாபரம் (எ-று).

(முடிபு) தண்டலைக் கண் நாகங்களும் பூகங்களும் சூழும் சுனையில் நாகமானது அலையில் கனை தாதுவிண்ட நாகுக் கழுநீரைத் தண் தலைய நாகங்கொல் என்று அஞ்சித் தன் நிழலை மாறு எனக் (கருதித்) தண்டலைத்தவிர் மருதூரன் என் தாபரம்

தண்டல்—பொருதல், தாபரம்—துணை. (60)

---

பி-பே. *கணை கழு.
†நீர்முகை சற்றுவிண்ட.

தாபர சங்கமொ ராறுக்கும்
போற்றுஞ் சதுர்மறைக்குந்
தாபர சங்க வயன்மரு
தூர்நகர் தங்கியநா
தாபர சங்குமர் சாடக்கொண்
டாய்சுந் தரற்குச்செ.ஃறா
தாபர சங்கர வல்வினை
யேற்குன் சரணங்களே. (61)

(எ-து) பரசு அங்கம் ஓர் ஆறுக்கும் = சொல்லப் படாநின்ற சந்தசு கற்பம் வையாகரணம் சோதிடம் நிருத்தம் சிட்சை என்னும் ஆறு அங்கத்திற்கும்! போற்றும் சதுர் மறைக்கும் தாபர = தன்னைத் தோத்திரஞ் செய்யும் நான்கு வேதத்திற்கும் ஆதாரமானவனே! சங்க வயல் மருதூர் நகர் தங்கிய நாதா = சங்கினம் உலவாநிற்கும் வயல் சூழ்ந்த மருதூர் நகரில் தங்கிய நாதனே! பரசு அங்கு அமர் சாட கொண்டாய் = பரசாகிய மழுவை யாம்தாருவிடத்தே தோன்றிய அமரில் எதிர்த்தோரைச் சங்கரிக்கவென்று கையிற் றரித்தவனே! சுந்தரற்கு செல் தூதா = சுந்தரமூர்த்தி நாயனூர்க்காகத் தூது சென்றவனே! பர சங்கர = பரனே! சங்கரனே! வல் வினையேற்கு உன் சரணங்களே தா = வல்வினையையுடைய அடியேற்கு உன் திருவடிகளைத் தருவாய் (எ-று).

இப்பாட்டு விற்பூட்டுப் பொருள்கோள்.

(முடிபு) தாபரனே! மருதூர் நகர் தங்கிய நாதனே! பரசினைக் கொண்டவனே! சுந்தரற்குத் தூதனே! பரனே! சங்கரனே! வல் வினையேற்கு உன் சரணங்களைத் தா.

இப்பாட்டு இறுதிச் சொல்லும் முதற் சொல்லும் இயைந்து 'சரணங்களைத் தா' என்று முடிதலின் விற்பூட்டுப் பொருள் கோளாயிற்று. (61)

**சரக்கன் றுகந்த மலரோற்கு**
**மேற்பதந் தண்கழுநீர்ச்**
**சரக்கன் றுகந்தர்ப் பனையெரித்**
**தோரிரு தாட்கடக்குஞ்**
**சரக்கன் றுகந்தன் றனக்கையர்**
**பொய்யர் தமக்ககலீ**
**சரக்கன் றுகந்தவர் தென்மரு**
**தூரர் தமர்களுக்கே.** (62)

(எ-து) தண் கழுநீர் சரம் கன்று கந்தர்ப்பனை எரித்தோர்=குளிர்மை பொருந்திய நீல மலராகிய பாணங்கொண்டு கோபித்து எய்த கந்தர்ப்பனாகிய காமனை எரித்தோர்; இரு தாள் கட குஞ்சர கன்று கந்தன் தனக்கு ஐயர் = இரண்டு தாள்களையும் மதத்தையு முடைய குஞ்சரக் கன்றாகிய விநாயகனுக்கும் கந்த சுவாமிக்கும் பிதாவானவர்; பொய்யர் தமக்கு அகல் ஈசர்=பொய் சொல்லுவார் உள்ளம் விட்டு நீங்குமவர்; அக்கு அன்று உகந்தவர்=அக்கு மணியை அந்நாளில் விரும்பியவர்; தென் மருதூரர் தமர்களுக்கு= இத்தகைய தென்மருதூரர்தம் அடியார்கட்கு; கந்த மலரோற்கு மேல் பதம் சரக்கு அன்று=கந்தமுள்ள மலரோனாகிய பிரமாவுக்கு மேலாகிய பதம் கிடையாததன்று (எ-று).

இது விற்பூட்டு.

(முடிபு) கந்தர்ப்பனை எரித்தோரும், குஞ்சரக் கன்றுக்கும் கந்தனுக்கும் ஐயரும், பொய்யருக்கு அகல்

ஈசரும், அக்கு உகந்தவரும், (ஆகிய) தென் மருதூரர் தமர்களுக்கு மலரோற்கு மேற்பதமும் சரக்கன்று

அக்கு — சங்குமணி. சரக்கன்று - கிடைக்காத சரக்கன்று. கந்தர்ப்பன் —மன்மதன். (62)

**தமர வரிக்களி வண்டுதுன்**
**றுங்கொன்றைத் தாமரன்பர்**
**தமர வரிக்குவ யல்மரு**
**தூரர்*பொற் றுளுயிராய்ந்**
**தமர வரிக்கிறை யார்க்கரி**
**தானுந் தமைவணங்குந்**
**தமர வரிக்கு மிதயத்**
**தியானந் தனக்கெளிதே. (63)**

(எ-து) தமர வரி களி வண்டு துன்றும் கொன்றை தாமர் = ஓசையையுடைய வரி பொருந்திய மதித்திருக்கும் (களித்திருக்கும் வண்டு நிறைந்து எப்போதும் விடா திருக்கிற கொன்றைத் தாமத்தை யுடையோர்; அன்பர் தமரவர் = தன்னை வணங்கும் அன்பர்க்கு உறவின் முறையாரைப் போன்றவர்; பின்னும் தாமென்றும் அவரென்றும் பேத மற்றிருப்போர்; இக்கு வயல் மருதூரர் பொன் தாள் = அவ்விதமாகிய கரும்பால் அழகு பெறும் வயல் சூழ்ந்த மருதூரராகிய சுவாமி யுடைய பொலிவினையுடைய பாதமானது; உயிர் ஆய்ந்து = தனது உயிர் உடல் வகை இதுவென்று ஆராய்ந்து; அமர் அ அரிக்கு = தவசிலே யிருக்கும் அனுமாற்கு; இறையாற்கு அரிதானும் = இறையாகிய திருமாலுக்குக் கிடைப்பதரிதானாலும்; தமை வணங்கும் தமர் அ வரிக்

பி—பே. *பொற்று ளுயிரார்க்

கும் இதய தியானம் தனக்கு எளிது ஏ = தமை வணங்கும் தமராகிய அடியார் தோத்திரஞ் செய்யுமிடத்து அவருடைய தியானத்திற்கு எளிதாயிருக்கும் (எ-று).

(முடிபு) கொன்றைத் தாமரும், அன்பர் தமரவரும் ஆகிய மருதூரர் பொற்றாள் அரிக்கு இறையார்க்கு அரிதானும் (அரிதாயினும்) வணங்கும் தமர் வரிக்கும் இதயத் தியானந் தனக்கு எளிது. (63)

**தனக்கடங் காநெஞ்ச னென்றெனைக்**
**கொண்டு தருமன்செல்வி**
**தனக்கடங் காவனின் றாண்மரு**
**தூரநற் சந்திரவ**
**தனக்கடங் கால்கும்பத் தும்பிக்கொம்**
**பென்னச் சமைந்தவிரு**
***தனக்கட மாம்பலஞ் செங்கனி**
**வாய்மங்கை தன்பங்கனே.** (64)

(எ-து) தனக்கு அடங்கா நெஞ்சன் என்று = தரும பாவங்கள் அறிந்து அதற்கானபடி அடங்காத நெஞ்சினை யுடையனானவனென்று; என்னை கொண்டு தருமன் செல் விதன கடம் = என்றனைப் பற்றித்தருமனாகிய இயமன் செல்லும் விதனமே செய்யாநிற்கும் வழிக்கு; காவல் நின் தாள் = உன்னுடைய பாதமே காவலாக வேண்டும்; மருதூர = மருதூரினை யுடையவரே! நல் சந்திர வதனம் = நல்ல திங்கள் போன்ற முகமும்; கடம் கால் கும்பம் தும்பி கொம்பு என்ன சமைந்த இரு தன கடம் = மதம் பொழியும் கும்பத்

பி-பே. *தனக்கடங் காம்பலஞ்.

தலத்தையுடைய யானையின் கொம்பென்னச் சமைந்த இரண்டு முலையாகிய கும்பமும்; ஆம்பல் அம் செம் கனி வாய் மங்கை தன் பங்கனே = ஆம்பல் மலர் போன்று அழகிய செம்மை பொருந்திய கனிவாயினையும் உடைய பார்வதியார் பங்கனே! (எ-று).

(முடிபு) மங்கை பங்கனே! மருதூரனே! தருமன் என்னைத் தனக்கு அடங்கா நெஞ்சன் என்று கொண்டு செல் விதனக் கடத்திற்கு நின் தாள் காவல். (64)

பங்க முகந்தலை மோதக்
கயலினம் பாய்ந்து*பைந்தாள்
பங்க முகந்தலை சேர்மரு
தூர பருப்பதத்தாள்
பங்க முகந்தலை †தேய்த்திட
வெண்டிங்கள் பட்டபெரும்
பங்க முகந்த தலைவநின்
பாதம் பரமெனக்கே. (65)

(எ-து) பங்கம் முகந்து அலை மோத கயல் இனம் பாய்ந்து பை தாள் பம் கமுகம் தலை சேர் மருதூர = பங்கம்-சேறு, வாவிகளிற் கயலானவை பாயும் விசையிலே அவ்வாவி குழம்பச் சேற்றை முகந்து அலை வீசப் பாய்ந்த கயலானவை, பைந்தாள் - பச்சை நிறமாகிய தாளினையுடைய, பம் கமுகு (பைங்கமுகு) — குளிர்மை பொருந்தத் தழைந்த கமுகின் தலையிலே சேரும் வளப்பமுடைய மருதூரனே! பருப்பதத்தாள் பங்க = பருப்பதமாகிய மலையில் உதித்தாளாகிய பார்வதியார்க்கு ஒரு

*பைந்தட். †தேய்ந்திட.

பங்கான சரீரத்தையுடையவனே! முகம் தலை தேய்த்திட=முகத்தையும் தலையையும் வீரபத்திர சுவாமி தேய்த்திட; வெண் திங்கள் பட்ட பெரும் பங்கம் உகந்த தலைவ=வெண்மையாகிய திங்கட் கடவுள் பட்ட பெரிய பங்கத்தைப் பிரியப்படுவாய்! நின் பாதம் பரம் எனக்கே=உன்னுடைய திருவடி எனக்குப் பரம் (எ-று)

(முடிபு) பருப்பதத்தாள் பங்க! வெண்டிங்கள் பட்ட பங்கத்தை உகந்த தலைவனே! மருதூரனே நின் பாதம் எனக்கே பரம். (65)

பரம்—புகலிடம்.

பரவா திருக்கை மருவா
கமத்தைப் *பழிச்சுப்பண்ணிற்
பரவா திருக்கை திருவுள
மோவலை பண்ணெடுத்த
பரவா திருக்கை மழுநாத
தேவர் பணிமருதூரர்ப்
பரவா திருக்கை யறுத்தென்னை
யாளும் பதந்தரவே. (66)

(எ-து) பரவாது = கவலைப்படாமல்; இருக்கை மருவு ஆகமத்தை பழிச்சு பண்ணில் பரவாது இருக்கை திரு உளமோ=இருக்கு வேதத்தையும் அதனை மருவும் ஆகமங்களையும் பண்ணுடனே ஓதி அந்த இசையினாலே உன்னைப் பழிச்சி-வாழ்த்திப், பரவாது-வீணே காலங்களை அதிக்கிரமிக்கிறது உன் மனத்திற்குச் செவ்வையான காரியமன்றே; ஆகையால், திருக்கை அறுத்து= என்னுடைய மனத்தின் திருக்காகிய குற்றங்களை

பி—பே. *பழித்துப்.

அறுத்து, என்னை ஆளும் பதம் தரவே வா = என்னை ஆட்கொண்டு பதயுகங்களைத் தருவதற்குச் சற்குருவாக வருவாயாக; வலை பண்டு எடுத்த பரவா = முன்னாளிலே வலையைக் கையிலே யெடுத்த பரதவனே! திரு கை மழு நாத = கரத்திலே மழுவாயுதந் தரித்தோய்! தேவர் பணி மருதூர் பர = தேவர்கள் வந்து பணியாநிற்கும் மருதூரனே! பரனே! (எ-று).

(முடிபு) வலை பண்டு எடுத்த பரவா! திருக்கை மழுநாத! மருதூர்ப்பர! (யான்) பரவாது, இருக்கையும் ஆகமத்தையும் பண்ணில் பழிச்சுப் பரவாது இருக்கை திருவுளமோ? திருக்கை அறுத்துப் பதந்தர வா. (66)

பதங்கடந் தானிரைத் தன்னபன்
மாதர்கள் பற்றறநற்
பதங்கடந் தாலென்ன கைம்மாறு
செய்வன் பகைத்தபருப்
பதங்கடந் *தான்படக் கைம்மா
வுரித்த பரமன்மறைப்
பதங்கடந் தான்புகழ் மாமரு
தூர்மங்கை பங்கினனே. (67)

(எ-து) பதங்கள் தந்தால் நிரைத்தன்ன பல் மாதர்கள் பற்று அற = எல்லை தொறும் நூலால் நிரைத்து வைத்தன்ன பல்லினையுடைய மாதர்களிடத்துப் பற்றுகிய ஆசை நீங்க; நல்ல பதங்கள் தந்தால் என்ன கைம்மாறு செய்வன் = நல்ல பதங்களைத் தந்தருளினால் யான் செய்வதொரு பிரதியுபகாரம் என்ன செய்வன்? என்னை யாளவேணுமென்று நீ கிருபை வைப்பதல்லாமல் அக்கிருபைக்குப் பதிலாக என்னால்

---

பி-பே. *தான் பட்ட.

உனக்கு ஆவதுண்டோ வென்று பிரியம் கூறியது. பகைத்த பருப்பதம் கடந்தான்=பகைத்த பருப்பதம்-புரம்; முப்புரங்களையும் வென்றோன்; படகைம்மா உரித்த பரமன் = முகபடாம் பொருந்திய யானையை உரித்த பரமேசுரன்; மறை பதம் கடந்தான்=மறைப் பதம்-வேதத்தின் பதம்; என்றது அவற்றின் உண்மை யாலும் கடந்தோன் — அறியப்படாதவன்; புகழ் மா மருதூர் மங்கை பங்கினன் ஏ = புகழ் பொருந்திய பெரிய மருதூரன் மங்கை பங்கினன் (எ—று).

(முடிபு) பருப்பதம் கடந்தான், கைம்மா வுரித்த பரமன், மறைப்பதம் கடந்தான், மருதூர் மங்கை பங்கினன், (இத்தகைய கடவுள்) மாதர்கள் பற்று அற நற் பதங்களைத் தந்தால் யான் என்ன கைம்மாறு செய்வன்.

பரு+பதம்=பெரிய பதியாகிய முப்புரம். (67)

**பங்கைய வாவி யனையாட்**
**களித்த பரமன்மன்றற்**
**பங்கைய வாவி *மருதூரர்**
**வெற்பிறை பாரவல்லி**
**பங்கைய வாவி †யிவளா**
**டிடத்துப் பகையடுமின்**
**பங்கைய வாவிம் மணமு**
**மினிதல்ல பாவையரே.** (68)

(எ—று) பங்கை அ ஆவி அனையாட்கு அளித்த பரமன்=தன்னுடம்பிற் பாதியை அந்த தன்னுயிரனைய பார்வதியார்க்குக் கொடுத்த பரமன்; மன்றல் பங்கைய

---

பி—பே. *மருதூரி லோரிறை.
†யிவண்மே லிடுமப் பகையடுமின்.

வாவி மருதூரர் வெற்பு இறை = மணம் பொருந்திய தாமரை வாவிகள் சூழ்ந்த மருதூரர்; அவருடைய நாட்டில் வரையிடத்து ஓர் இராசகுமாரன்; பார் அ வல்லி பங்கை அவாவி இவள் ஆடு இடத்து = பாராய் ஒரு ஆகரியத்தை; அழகு பெற்ற வல்லியாகிய கொடி போன்ற வனப்பினையுடைய அவளுடைய பங்கென்னும் சரீரத்தை இச்சித்து, அல்லது, தன்னுடைய சரீரத்தில் ஒரு பங்காகச் சேர்த்து எனவும் பெறும்; யாமும் இவளும் விளையாடுமிடத்து; பகை அடும் = எதிரான பகையை அடுதாவது, இவளைக் கொல்ல வந்ததொரு யானையைக் கொன்று இவள் உயிரைக் காத்தான்; இன்பம் கை அவாவி = இவனுடைய இன்பத்தை அவாவி வசமாகுவதே யல்லாது; மணமும் இனிது அல்ல பாவையரே = வேறுமணம் செய்வோம் என்று சொல்லுவதும் தருமமன்று தோழியீர்! (எ-று).

இது பிறர்மணம் விலக்கு.

(முடிபு) பாவையரே! மருதூரர் வெற்பிறை இவள் ஆடிடத்து (வந்து) பகையை அடும்; அவனுடைய இன்பம் கை அவாவி (இருத்தலன்றி) (வேறு) மணமும் இனிது அல்ல. (68)

பாவக னஞ்சக் கரந்துணித்
தாய்பத மாறுநடப்
பாவக நஞ்சக் கறைமிடற்
றுய்மரு தூர்ப்பரம
பாவக னஞ்சத்தி குன்றநின்
றுளைப் பரந்தமலம்
*பாவக நன்சர்ப் பணைபுரிந்
தென்று பணைவதுவே. (69)

---

பா - பே. *பாவக நஞ்சர்ச் சணைபுரிந் தென்று.

(எ-து) பாவகன் அஞ்ச கரம் துணித்தாய்=அக்னி தேவன் அஞ்சுமாறு அவன் கையை வெட்டினாய்; பதம் மாறு நடம் பாவக = பாதத்தை மாறியாடிய பாவகத்தையுடையவனே! நஞ்சம் கறை மிடற்றாய் = நஞ்சாகிய கறை அழகாகப் பொருந்தியிருக்கும் மிடற்றினையுடையவனே! மருதூர் பரம=மருதூரில் எழுந்தருளியுள்ள பரமேசுரனே! பாவ கனம் சத்தி குன்ற = கனமான பாவமானது ஆற்றல் குறைய; பரந்த மலம் பாவு அகம் நன் சர்ப்பனை பிரிந்து=விரிவான ஆணவ மலம் முதலான பாசங்கள் நிறைந்திருக்கும் என் மனமானது என்னிடத்திலுள்ள சர்ப்பனை முதலாகிய பல விகாரங்களையும், பிரிந்து-விட்டு; நின் தாளை என்று பணிவது ஏ = உன்னுடைய பதத்தை என்று பணியப் பெறுவதாகும் (எ-று).

(முடிபு) பாவகன் கரம் துணித்தாய்! பதம் மாறு நடப் பாவக! கறை மிடற்றாய்! மருதூர்ப் பரம! பாவ கனம் சத்தி குன்ற, பரந்த மலம் பாவிய (என்) அகம் சர்ப்பனை பிரிந்து நின் தாளை என்று பணிவது. (69)

பணியாத வர்க்கத் தொடர்ச்சிக்கும்
பத்திர பத்தர்சித்தப்
பணியாத வர்க்கருள் செய்ம்மரு
தூர படவரவப்
பணியாத வர்குன்ற வென்றவன்
றாட்செம் பதுமநெஞ்சே
பணியாத வர்க்கு மதிக்குமப்
பாலைப் பதந்தரவே. (70)

(எ-து) அ வர்க்கத்தொடு அர்ச்சிக்கும் பத்திர பத்தர் சித்தர் பணியா = மந்திர தந்திரம் முதலாகப் பூசைக்குரிய மிகுந்த ஐவகை வர்க்கம் தவிராமல் பத்

திரம் முதலானவற்ருல் அர்ச்சிக்கும் பத்தருடைய மனசுக்கு ஆபரண மானவனே! தவர்க்கு அருள் செய் மருதூர = தபசு பண்ணுமவர்க்கு அவர் வேண்டுவன கொடுக்கும் கிருபையுடையோனாய் மருதூரில் உறைவோனே! பட அரவ பணியா = படம் பொருந்திய சர்ப்பத்தை ஆபரணமாகத் தரித்தவனே! தவர் குன்ற வென்றவன் = தவ கெர்வத்திஞல் தன்னை மதியாத முப்புரத்தவர்கள் குன்றும்படி வென்றவனே! என்று; தாள் செம் பதுமம் = இவ்விதமான சுவாமியுடைய செந்தாமரை மலர் போன்ற பதயுகங்களை; பணி நெஞ்சே பணியாது = வணங்கு; நெஞ்சமே! உனக்கு வேறு வேலை எது? ஆதவர்க்கும் மதிக்கும் அப்பாலை பதம் தர ஏ = சூரியனுக்கும் சந்திரனுக்கும் அப்பாலே யுள்ள சிறந்த பதத்தினைத் தருதற்கு (எ-று).

(முடிபு) நெஞ்சே! அர்ச்சிக்கும் பத்தர் சித்தப் பணியா; தவர்க்கு அருள் செய் மருதூர; பட அரவப் பணியா; தவர் குன்ற வென்றவன், (என்று) பதுமத் தாளை ஆதவர்க்கும் மதிக்கும் அபபாலைப் பதம் தரவே பணி; (வேறு) பணியாது? (70)

***வேலைக் கயலைக் கவர்விழி**
**யார்வசம் வீழ்ந்துனது**
**வேலைக் கயலைக்கண் டும்முயலேன்**
**புக்க †வேளையுண்டே**
**வேலைக் கயலைத் துவருங்கொல்**
**கூற்றை வெறுத்துயிர்போம்**
**வேலைக் கயலைப் புனன்மரு**
**தூர்முக்கண் ‡மெய்யவனே.** (71)

---

பி-பே. *நான் கடியிலும் "வேலைக் கையலை" பாடம். †வேளை யுண்டோய். ‡மெய்ப்பயனே.

(எ-து) வேலை கயலை கவர் விழியார் வசம் வீழ்ந்து =‘வேலையை’ என்பது கடைக் குறை விதியால் ‘வேலை’ என வாயிற்று. சமுத்திரத்தையும் கயல் மீனையும் கவரும் கண்ணழகுடையார் தம் அவசத்தில் வீழ்ந்து; உனது வேலைக்கு அயலை கண்டும் முயலேன் = உன்னுடைய பணிவிடைக்கு அயலார் செய்வது கண்டும் அடியேன் முயற்சி பண்ணிலேனாயினும்; புக்க வேளை உண்டே=உனதுக்கு (உன் அருளிற்கு) அடிமைப்பட்டதுண்டே; அதனால், வேலை கய் அலைத்து வரும் கொல் கூற்றை வெறுத்து உயிர் போம் வேலை = வேலாகிய சூலத்தைக் கையினாலே அலைத்து வரும் கூற்றுவனைக் கடிந்து, கொல் = சினத்தையுடைய, இமயனானவன் உயிர்கொடு போங்காலத்து இரட்சிப்பாயாக; கயலை புனல் மருதூர் முக்கண் மெய்யவனே! கயல்மீனைப் பொருந்தும் புனல் சூழ்ந்த மருதூரினையுடைய முக்கண் உண்மைப் பொருளே (எ-று).

‘உயிர் போம் வேலைக்கு அய் அலை புனல் மருதூர்’ என்று கண்ணழித்து, ‘அய் அலை’ ‘அழகு செறிந்த அலை’ என்றும் பொருள் கூறிக்கொள்க.

(முடிபு) மெய்யவனே! யான் விழியார் வசம் வீழ்ந்து உனது வேலையை அயலைக் கண்டும் முயலேன்; புக்க வேளை உண்டே; உயிர்போம் வேலை (இரட்சிப்பாயாக). (71)

**பயனந்த நாக மலரிற்**
**றுயிலப் படுமருதூர்ப்**
**பயனந்த னாகப் பகலைக்கண்**
**டோன்பத்தர் சித்தத்துள்ளான்**

பயனந்த ளுக மணிவோன்
கழலைநும் பல்பிறவிப்
பயனந்த நாகந் துதிக்க
வணங்கப் பரிந்திருமே. (72)

(எ-து) பயன் நந்தம் நாகம் மலரில் துயிலப்படு மருதூர் பயன் = பயன்-சூல்; நந்தம்-சங்கு; சூற் சங்குகளானவை புன்னை மலரிலே துயிலப்படும் வளப்பம் பொருந்திய பயனுயுள்ளவர்; அந்தன் ஆக பகலை கண்டோன் = அந்தகனுக—குருடனுகப்; பகலை—சூரியனை; ஆதித்தனைக் குருடனுகப் பண்ணினவன்; பத்தர் சித்தத்து உள்ளான் = அன்பரின் நெஞ்சத் தாமரையில் உள்ளவன்; பயன் அந்தன் நாகம் அணிவோன் கழலை =பயன்—சலமாகிய கங்கையினையும்; அந்தன் நாகம்—அழகு செறிந்த சர்ப்பத்தையும் அணிவோன்; கழலை—இவ்விதமான சுவாமியுடைய பாதத்தை; நும் பல் பிறவி பயன் நந்த=உம்முடைய பல செனனமாகிய அச்சம் கெட; நந்தல் — கெடுதல்; நா கம் துதிக்க வணங்க பரிந்து இரும் ஏ = நா-நாக்கும், கம்-தலையும், துதிக்கவும் வணங்கவும்; பரிந்து-கிருபை உண்டாகி; இரும்-இருக்கும் (எ-று).

இது அன்பில்லா மாந்தர்க்குச் சொல்லியது.

(முடிபு) (அன்பில்லா மாந்தரே!) பகலை அந்தனுகக் கண்டோன்; பத்தர் சித்தத்து உள்ளான்; பயனையும் நாகத்தையும் அணிவோனுகிய மருதூர்க்குப் பயனுயுள்ள (கடவுளது) கழலை நும் பிறவிப் பயம் நந்தும்படி நாவினுலே துதிக்கக் கம்மினுலே வணங்கப் பரிந்து இரும் (இருக்கும்).

பயம்—அச்சம்; இச்சொல் பயன் எனப் போலியாய் வழங்கிற்று. (72)

இரும்பல வின்செய் மருதூரென்
னூர்த மிதயங்கள்போ
*லிரும்பல ரின்ன லதுதீர
வேண்டி லுலகிலுள்ளீ
ரிரும்பல வின்ப மிலையா
யினுமஞ் செழுத்தையுன்னி
யிரும்பல வின்சொ லொடும்புகழ்ந்
தேத்தி யிரந்துகொண்டே. (73)

(எ—து) இரும் பல இன் செய் மருதூர் என்னூர் தம் இதயங்கள் போல் இரும்பு அலர் = பெருமை பொருந்திய இனிமையுண்டாகிய பலா மரங்களினாலே விளங்காநிற்கும் வயல்கள் சூழ்ந்த மருதூர் என்று சொல்லாருடைய இரும்பு அலர்ந்தபடி இருள் நிறைந் திருக்கும் இதயங்கள் போலாகிய உம்மிடத்து; இன்னல் அது தீர வேண்டில் = பொல்லாங்கான அது தீர வேண்டினால்; இ உலகில் உள்ளீர் = இவ்வுலகத்திலே உள்ளவர்களே! அஞ்சு எழுத்தை உன்னி = பஞ்சாட் சரத்தை நினைந்து கொண்டும்; இரும் பல இன் சொ லொடும் புகழ்ந்து ஏத்தி இரந்து கொண்டு ஏ = பலத் தைத் தருவதற் கேற்பனவாகிய இன் சொல்லொடும், புகழ்ந்து ஏத்தி — தோத்திரம் பண்ணி, இரந்து கொண்டே இரும் — இன்னபடியாக வேணுமென்று வேண்டிக்கொண்டே யிரும்; அதனால், இரும் பல இன்பம் இலையாயினும் = 'ஈரும்' என்பது இரும் என ஆயிற்று. உம்மிடத்து இன்னலையும் ஈரும்; ஈரும்— அறுக்கும்; விதிவழி உமக்கு இன்பம் இல்லையே யாயி னும் உண்டாம்; எனவே, முற் சொல்லியபடி வழிபடு

பி—பே. *இரும்பல வின்ன லதுதீர வேண்டிடினிவ்வுலகுள்.

வீராகில் இந்தச் சுவாமியுடைய கடாட்சத்தினாலே பல விதமாகிய இன்பங்களும் உங்களுக்கு உண்டாம் (எ-று).

(முடிபு) உலகிலுள்ளீர்! மருதூரர் என்னுர்தம் இரும்பு அலர் இதயங்கள் போலாகிய (உம்மிடத்து) இன்னல் அது தீர வேண்டில், அஞ்செழுத்தை உன்னி, இன்சொலொடும் புகழ்ந்து ஏத்தி, இரந்து கொண்டே இரும்; (அவ்வாறிருந்தால்) பல (இன்னல்களையும்) இரும் (ஈரும்); இன்பம் இலையாயினும் (உண்டாம்). (73)

இரவித னந்தும் பரவையைச்
சுந்தர ரெய்தச்சென்ருே
னிரவித னஞ்சயன் றிங்களங்
கண்ண *னெழிற்கரும்பை
யிரவித னம்புண ரும்மரு
தூர னிணையடியை
யிரவித னங்க னறுத்துயிர்
வாழுகைக் கென்னெஞ்சமே. (74)

(எ—து) இரவு இதன் நந்தும் பரவையை சுந்தரர் எய்த சென்ருேன் = இராத்திரி காலத்திலே சுந்தரரிடத்து உண்டாகிய குறையினாலே சுகத்தைக் கெடப் பண்ணி வயிராக்கியத்துட னிருந்ததொரு பரவை நாச்சியாரைச் சுந்தரர் சேரும்படியாகத் தூது சென்ருேன்; இரவி தனஞ்சயன் திங்கள் அம் கண்ணன் = சூரியனும் அக்னிபகவானும் சந்திரனும் அழகிய கண்ணாகவுள்ளவன்; எழில் கரும்பை = அழகு பொருந்திய கரும்பு வில்லினைத் தரித்தவளாகிய; இரவி தனம் புணரும்

பி—பே. *னெழிற் கரும்ப.

மருதூரன் இணை அடியை='பயிரவி' என்னுஞ் சொல் தலைக்குறை விதியால் குறைந்து இரவி என நின்றது. கரும்புவில்லினைத் தரித்த பயிரவியாகிய உமையாளுடைய தனத்தைப் புணரும் மருதூரராகிய அவருடைய இரண்டு பாதங்களையே; இர = இரந்துகொள்; விதனங்கள் அறுத்து உயிர் வாழுகைக்கு என் நெஞ்சமே= என்னுடைய நெஞ்சமே! நம்மிடத்துள்ள வியாகூலத்தைத் தவிர்த்து நம் உயிர் வாழும்படிக்கு (எ—று).

(முடிபு) என் நெஞ்சமே! பரவையைச் சுந்தரர் எய்தச் சென்றோனும் இரவியும் தனஞ்சயனும் திங்களும் ஆகிய கண்ணனும் பயிரவி தனம் புணருவோனுமாகிய மருதூரன் இணையடியை விதனங்கள் அறுத்து உயிர் வாழுகைக்கு இர. (74)

என்னு வருந்தக் கழுநீர்க்
கிடங்கெங்கு மீன்கறவை
யென்னு வருந்து மலர்மரு
தூருறை யீசநம
வென்னு வருந்தமி ழாற்றுதிப்
பேன்பய னெய்துவதிங்
*கென்னு வருந்தக மையியல்
பாயின ரென்னிடத்தே. (75)

(எ—து) கழுநீர் கிடங்கு எங்கும் ஈன் கறவை என் ஆ அருந்தும் மலர் மருதூர் உறை ஈச = செங்கழுநீர் பொருந்திய வாவி யெங்கும் ஈனத்தக்க கறவை யென்று

பி—பே. *கென்னு வருந்தன்மை வல்லிய மாவுனக் கென்னிடத்தே.

சொல்லப்படும் பசுக்களானவை அவ்வாவியிற் செங்கழு நீர் மலர்களை யருந்தும் வளப்பமுடைய மருதூர் உறை ஈச! நம என்று என் நா வருந்த அரும் தமிழால் துதிப்பேன் = நம என்று சொல்லி அரிதாகிய தமிழினாலே என்னுடைய நாவானது வருந்தும்படிக்குத் தோத்திரம் பண்ணுவேன்; என் இடத்தே = இவ்விதத்தில் வழிபட்டு உனக்கு அடிமையாகும் என்னுடைய பக்கலிலே; வரும் தகமை இயல்பு ஆயினர் = தகவு — பெரிது; தகமை இயல்பு ஆயினர் — உயர்ச்சியாய்க் காளகூட விஷம் கொதித்து வருவது போலும் கறுத்த மேனியை யுடையராய் வருவதொரு கால தூதர்; பயன் எய்துவது இங்கு என் ஆ = இவ்விடத்து அவர் எய்துவதால் பெறுவதொரு பயன் ஏது (எ—று) 'ஆ' அதிசயக் குறிப்பு.

(முடிபு) மருதூர் உறை ஈச! நம என்று, என் நா வருந்த அருந்தமிழால் துதிப்பேன்; என்னிடத்தே வரும் மையியல்பாயினராகிய (கால தூதர்) இங்கு எய்துவதால் பயன் என்? ஆ!

**இடத்தே யுமையைவைத் தோன்மரு**
**தூருறை யெந்தைவன்ம**
**யிடத்தே யுமைவண்ண னையுதைத்**
**தோன்வெற்பி னிங்கனெங்க**
**ளிடத்தே யுமைவரப் பெற்றது**
**நன்றியின் றேந்தியமுத்**
**திடத்தே யுமைய விடையதி**
**பார விளமுலைக்கே.** (76)

(எ—து) இடத்தே உமையை வைத்தோன் = இடப்புறத்திலே உமாதேவியை வைத்தோன்; மருதூர்

உறை எந்தை=மருதூரின் கண் உறையும் எம் ஐயன்; வல் மயிடத்து ஏயும் மை வண்ணனை உதைத்தோன் வெற்பில் = வலியினையுடைய எருமைக் கடாவின்மேல் பொருந்திய மை போன்ற வண்ணத்தையுடைய இயமனை உதைத்தோன் வரையிடத்தே; இங்ஙன் எங்களிடத்தே =இவ்விடத்து எங்களிடத்தே; உமை வர பெற்ற அது நன்றி=உம்மை வரப்பெற்றோமே அது நன்று; இன்று ஏந்திய முத்து=இன்று நீர் கையுறையாகக் கொண்டு வந்த முத்துமாலை; அதி பார இள முலைக்கே = இவளுடைய அதிகபாரமாகிய இள முலையிலே; இட தேயும் ஐய இடை = பூணத் தேயும் உண்டோ வில்லையோ வென்று ஐயப்படுமதொரு இடை (எ-று).

இப்பாட்டு கையுறை மறுத்தல்.

(முடிபு) இடத்தே உமையை வைத்தோன் மை வண்ணனை உதைத்தோன் மருதூர் உறை எந்தை வெற்பில் எங்களிடத்திலே தலைவராகிய உம்மை வருதற்குப் பெற்றது நன்றி; இன்று (நீர் இவளுக்குக் கொடுப்பதற்காக) ஏந்திய முத்து (மாலை) இளமுலைக்கேயிட (இவளுடைய) ஐய இடை தேயும். (76)

**முலையம் புலவிறை பங்கர்கங்**
**காளர் முதன்மருதூர்**
**முலையம் புலகங் கொளினுங்குன்**
**ருமன்றன் மொய்குழனின்**
**முலையம் புலவி கெடத்தழு**
**வேமதன் மூன்றம் பெய்தான்**
**முலையம் புலவு மினியாவி**
**நீல முடித்திடுமே.** (77)

(எ—து) முலை அம் புல இறை பங்கர் = அழகு பொருந்திய முல்லை நிலத்திற்கு இராசாவாகிய விட்டுணுவை ஒரு பாகமாகக் கொண்டவர்; கங்காளர் முதன் மருதூர் = கங்காளராகிய சிவபெருமானுடைய புவிக்கு முதன்மையாகிய மருதூரிடத்து; முலை அம்பு உலகம் கொளினும் குன்று மன்றல் மொய் குழல் = அம்பு—சலம்; உலகம் கொளினும் சலமான பிரளயம் வந்து உலகத்தையெல்லாம் கவளீகரித்தாலும்; 'முல்லை' என்பது 'முலை' எனத் தொகுத்தது. முல்லை—கற்பு. கற்புக் குன்றாத மன்றல் குழலாய்; மன்றல்—மணம்; மணத்தையுடைய மொய்குழலாய்! நின் முலை அம் புலவி கெட தழுவேம் = எம்முடைய புலவியானது கெட உன்னுடைய முலைகளை அழகாகத் தழுவப் பெறேம்; அதனால், மதன் மூன்று அம்பு எய்தான் = மன்மதன் தாமரைப்பூ அசோகம்பூ மாம்பூ என்னும் மூன்று அம்புகளை எய்தான்; முலை அம்பு உலவும் = இப்பொழுது முல்லை மலராகிய அம்பு உலவாநிற்கின்றது; ஆவியை நீலம் முடித்திடும் = இனி உயிரை நீல மலரானது முடித்து விடும் (எ—று).

இப்பாட்டு தலைவியுடன் தலைவன் வருத்தங்கூறல்.

(முடிபு) இறை பங்கரும் கங்காளரும் ஆகிய இறைவனுடைய மருதூரிலே அம்பு உலகத்தைக் கொள்ளினும் முல்லை (கற்பு) குன்றாத மொய்குழலே! நின் முலையைப் புலவிகெடத் தழுவேம்; மதன் மூன்று அம்புகளை எய்தான்; (இப்பொழுது) முல்லையாகிய அம்பு உலவும்; இனி நீல அம்பு ஆவி முடித்திடும். (77)

**முடியப் படுவலை வீசும்**
***பரவவம் முப்புரவர்**
**முடியப் படுகணை தொட்டவ**
**னே†மரு தூர்முதலோய்**

---

பி—பே. *பரவ வெம். †மருதூர முன்னேய்.

முடியப் படுபுலித் தோலரை
‡மேலிடு முக்கண்ணயான்
முடியப் படுபிற விக்கடல்
வீழ முனிந்தனையே. (78)

(எ-து) முடியப்படு வலை வீசும் பரவ = முடியப் பட்ட வலையினை வீசும் பரவன் என்னும் வேடங்கொண்டோய்! அம் முப்புரவர் முடியப்படு கணை தொட்டவனே = அவ்வகத்திலே முப்புரத்திலுள்ளவர்கள் முடியும்படிக் கணையைத் தொட்டருளியவனே! மருதூர் முதலோய் = மருதூரிலே யாவர்க்கும் முதல்வோனுக உறைபவனே! முடி அப்பு அடு புலி தோல் அரை மேல் இடு முக்கண்ண = சலமாகிய கங்கையை முடியில் தரித்து, கொல்லும் புலித்தோலை அரையிலே புனைந்த முக்கண்ணனே! யான் முடியப்படு பிறவி கடல் வீழ முனிந்தனையே = ஒரு காலத்திலே முடியப்படும் பிறவியாகிய கடலிலே யான் வீழ முனிந்தனையே (எ-று)

(முடிபு) பரவ! கணை தொட்டவனே! மருதூர் முதலோய்! முடியின்கண் அப்பும் அரையின்கண் புலித்தோலும் மேவும் முதல்வ! பிறவிக் கடலில் யான் வீழ முனிந்தனையே. (78)

முனியாய மானுடர்க் காவந்
தகனை முனிந்தவனே
முனியாய மான தமிழ்மரு
தூருறை முக்கணநின்

‡மேவு முதல்வ வென்னை.

முனியாய மாலைய னென்றேத்
துகைக்கன்பு முற்றுவித்து
முனியாய மாநிலத் திற்*பிற
வாமலென் முன்வினையே. (79)

(எ-து) முன் நியாய மானுடர்க்கு ஆ அந்தகனை முனிந்தவனே=முன்னாளிலே நினது வழிபாடானதைச் சன்மார்க்கமாகச் செய்த மனிதனாகிய மார்க்கண்டேயனைக் காய்ந்த இயமனை முனிந்தவனே! முனி ஆயம் ஆன தமிழ் மருதூர் உறை முக்கணா=முனி-அகத்தியன்; அவற்கு ஆயம்-உயிர்; உயிர்போன்ற தமிழ் எனவே அரிய தமிழாயிற்று; அத்தமிழினை விரிக்கு மதனால் விளங்காநிற்கும் மருதூரின்கண் உறையும் முக்கண்ண! நின் முனி ஆய மால் ஐயன் என்று ஏத்துகைக்கு அன்பு முற்று வித்து = உன்னை முன்னி (கருதி) உண்டாகிய ஆசையுடனே யான் நின்று சுவாமியே! என்று ஏத்தும் படிக்கு மன நெகிழ்வு முற்றுவித்து; முனியாய் அ மாநிலத்தில் பிறவாமல் என் முன் வினை ஏ=யான் இவ் வுலகில் பிறக்குந்தொறும் ஆக்கும் வினையையும் என்னிடத்துச் சூழ்ந்த முன்னாளிலும் தொடர்ந்துவரு வினையையும் முனியாய் (எ-று).

(முடிபு) அந்தகனை முனிந்தவனே! மருதூர்உறை முக்கண்ண! யான் ஐயன் என்று ஏத்துகைக்கு அன்பு முற்றுவித்து, யான் பிறவாமல் என் மாநிலத்தின் வினையையும் முன் வினையையும் நீ முனியாய். (79)

வினையகல் வித்தென்னை யாண்டிட
வேண்டும் விரைமலர்க்கா

---

பி-பே. *பிறவாமை நம்.

விளையகல் *வித்தகல் கண்ணிபங்
காநட மெய்ப்பயில
விளையகல் வித்தன மாதர்க்கு
மோகம் விளைத்தருள்க
விளையகல் வித்தலை வாமரு
தூர்மைம் மிடற்றவனே. (80)

(எ-து) விளை அகல்வித்து எனை ஆண்டிட வேண்டும்=விளை என்னிடத்துச் சூழும் துன்பத்தைத் தவிர்த்து என்னையும் அடிமை கொள்ள வேணும்; விரை மலர் காவினை அகல் வித்து அகல் கண்ணி பங்கா= மணம் பொருந்திய செங்கழுநீர் மலரினை அகல்வித்து, அஃதாவது கண்ணினது வனப்பிற்கு இம்மலரும் இடைந்துபோம் என்னும் எழிலையுடைய அகன்ற கண்ணினை யுடைத்தான உமாதேவியாரை ஒரு பங்கிலே வைத்தவனே! நடம் மெய் பயில் அவினைய=அவினயத்துடன் கூடிய நடத்தினைப் பயின்ற மெய்யினையுடையோய்! கல் வித் தன மாதர்க்கு மோகம் விளைத்தருள் கவினைய=கல்-மலை; வித்-விதம்; மலையினுடைய விதமாகிய தனத்தையுடைய மாதருக்கு மோகத்தை உண்டாக்கும் அழகினையுடையோய்! எனவே, முன்னந் தாருகா வனத்தில் இருடி பத்தினிகள் எல்லோரும் காம விகாரத்தினாலே அவசமாகும்படிக்கு மிகவும் அழகினையுடைய கங்காள வேடந்தரித்தோய் என்றார். கல்வி தலைவா மருதூர் மை மிடற்றவனே = கல்விக்கு முதல்வனே! மருதூரில் எழுந்தருளியிருக்கும் கரிய மிடற்றினையுடையவனே (எ-று).

(முடிபு) கண்ணி பங்கா! நடம் பயில் அவினய! மாதர்க்கு மோகம் விளைத்தருள் கவினைய! கல்வித் தலைவா! மருதூர் மை மிடற்றவனே! என்னை விளை அகல்வித்து ஆண்டிட வேண்டும். (80)

---

பி-பே. *வித்தகக்

**அவனியம் பாரழல் கால்விசும்**
**பாயெங்கு மானவனே**

**யவனியம் பான்முப் புரமெரித்**
**தாய்தென் னணிமருதூ**

**ரவனியம் பாவித் தெனைவா**
**வெனவடர்த் தந்தகனு**

**மவனியம் பாமு னருள்புரி**
**யாயுன் னடைக்கலமே.** (81)

(எ-து) அவனி அம்பு ஆர் அழல் கால் விசும்பு ஆய் எங்கும் ஆனவனே = பிருதிவி, சலமென்னும் அப்பு, திரண்ட அழலாகிய தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூத வுருவமாய் எங்கும் நிறைந்திருப்பவனே! அவனி அம்பால் முப்புரம் எரித்தாய் = அ வன்னி என்னும் சொல் அவனியாயிற்று; அந்த வன்னியாகிய அக்கினி அத்திரத்தினாலே முப்புரங்களை எரித்தோய்! தென் அணி மருதூர = அழகிய அணியமைந்த மருதூரனே! அனியம் பாவித்து எனை வா என அடர்த்து அந்தகனும் அவன் இயம்பா முன் = அன்னியத்தனம் பண்ணிக் கொண்டு என்னை வாவென்று உரத்து அந்தகனவன் கடின பாடணங்கள் சொல்லுவதற்கு முன்னே; அருள் புரியாய் உன் அடைக்கலம் ஏ = திருவருளைச் செய்து அடியேனை உன்னிட அடைக்கலமாகப் பண்ணுவாய் (எ-று).

(முடிபு) அவனி அம்பு அழல் கால் விசும்பு ஆய் எங்கும் ஆனவனே! முப்புரம் எரித்தாய்! மருதூர! அந்தகனும் அவன் அன்னியம் பாவித்து என்னை வா என அடர்த்து இயம்பாமுன் அருள்புரியாய்; யான் உன் அடைக்கலமே. (81)

கலங்கா மனந்தந்து கூற்றுவன்
ரேற்றிடுங் *காலத்திடைக்
கலங்கா †வம்நந்தந் தருமரு
தூரைய கஞ்சத்தன்ப
கலங்கா மனந்த முராரி
தொழுஞ்சிவ காமமெனுங்
கலங்கா மனந்த விழித்தவ
னேகறைக் கந்தரனே. (82)

(எ-து) கலங்கா மனம் தந்து கூற்றுவன் தோற்றிடும் காலத்திடை = கூற்றுவன் தோற்றிடும் காலத்திடையிலே அடியேனுக்குக் கலங்காத தொரு மனசைத் தருவாய்; கலங்கா அம் நந்தம் தரும் மருதூர் ஐய = நிர்மலமான சலங்களானது சங்குவினைத் தருவதொரு வளப்பமுடைத்தான மருதூர்த் தலைவனே! கஞ்சத்தன் பகல் அம் கா மன் அந்த முராரி தொழும் சிவ = பிரமா ஆதித்தன் அழகிய கற்பகக் காவுக்கு மன்னனாகிய தேவேந்திரன் அந்த முரன் என்னும் இராக்கதனை அரித்த விட்டுணு இவர்களாற் றொழப்படுஞ் சிவனே! காமம் என்னும் கலம் காமன் நந்த விழித்தவனே = ஆசையென்னும் அணிகலம்; அதனை ஆபரணமாகப் பெற்ற காமன் எனவே சகலர்க்கும் ஆசைகளைப் பூட்டு கையினாலே பூண்பதாம் எனச் சொன்னார்; அக்காமன் நந்த; நந்த-கெட; விழித்தவனே! கறை கந்தரனே = நஞ்சக் கறையினையுடைய கழுத்தை யுடையவனே! (எ-று).

(முடிபு) தொழும் சிவ! காமனை விழித்தவனே! கறைக்கந்தரனே! மருதூர் ஐய! கூற்றுவன் தோற்றிடும் காலத்திடைக் கலங்கா மனம் தந்து (அருள்) (82)

---

பி-பே. *காலத்தடைக். †கலங்கா மனந்தந்

கந்தர வைய னயன்மாலென்
றிந்து *கசமுகன்வேற்
கந்தர வையன் புகழ்மரு
தூர கரியதிருக்
கந்தர வையம் புகுந்தவ
னேமதன் காயங்கன
கந்தர வையம்பெய் தாலுய்யுமோ
வென்றன் காதலியே. (83)

(எ—து) கந்தரம் வையன்=மேகத்தை ஊர்தியாக வுடைய தேவேந்திரனும்; வையம் — ஊர்தி; அயன் மால் என்று இந்து கசமுகன் வேல் கந்தர் அ ஐயன் புகழ் மருதூர = பிரமாவும் திருமாலும் சூரியனும் திங் களும் யானை முகமுடைய விநாயகனும் வேலையேந்திய முருகனும் அந்தச் சாத்தாவும் ஆகிய இவர்களாலே துதிக்கப்பட்ட மருதூரனே! கரிய திரு கந்தரனே= திருநீலகண்டனே! ஐயம் புகுந்தவனே = பிட்சாட னனே! என்றன் காதலி காயம் கனகம் தர மதன் ஐயம்பு எய்தால்=என்னுடைய காதலியாகிய தலைவியி னுடைய உடல் பொன்போல் பசக்க மன்மதன் ஐந்து பாணங்களையும் எய்தால்; உய்யுமோ=இவள் பிழைப் பாளோ (எ—று).

இது இறைவனை முன்னிலையாக்கிப் பாங்கி கூறல்.

(முடிபு) மருதூர! கரிய திருக்கந்தர! ஐயம் புகுந் தவனே! என் காதலியினுடைய காயம் கனகம் தர மதன் ஐயம்பு எய்தால் உய்யுமோ? (83)

---

பி—பே. *கணபதி வேற்.

காதலை யானின் னடியே
வணங்கக் கருதுகின்ற
காதலை யானின்னந் *தீர்கின்
றிலேனினிக் காலனென்மேற்
காதலை யானின் புறந்தோற்றி
மாற்றிக் †கதையரம்பைக்
காதலை யாநிற்குந் தென்மரு
தூரவென் கண்மணியே. (84)

(எ—து) 'கா' என்னுஞ் சொல்லைப் பின்னே கூட்டுக; தலையால் நின் அடியே வணங்க கருதுகின்ற காதலை யான் இன்னம் தீர்கின்றிலேன் = என்னுடைய தலையதனாலே உன் பாதத்தை வணங்கக் கருதுகின்ற ஆசையை அடியேன் தீர்ந்தவனன்று; இனி காலன் என் மேல் காதலை — இனிக் காலனானவன் என் மேல் கோபிப்பதை; ஆனின் புறம் தோற்றி மாற்று கா = இடபத்தின் முதுகில் ஏறி வந்து தோன்றுதல் செய்து மாற்றுவாயாக இரட்சிப்பாயாக; இக்கு அதை அரம்பை காது அலையாநிற்கும் தென் மருதூர என் கண்மணியே = கரும்புகளை அரம்பை காதவென்று நிறையும்; அரம்பை — வாழைகள்; பூமியிடம் பெறாது கரும்பும் வாழையும் ஒன்றோடொன்று மிஞ்சி நின்றதால் அலையாநிற்கும் என்றார். இத்தகைய வளப்பம் பொருந்திய, தென் — அழகுபெற்ற மருதூரினையுடையவன் என் கண் மணி (எ—று).

(முடிபு) தென் மருதூர! என் கண் மணியே! நின் அடியே வணங்குகின்ற காதலை யான் இன்னந் தீர்கின்றிலேன்; காலன் காதலை (காதுதலை) ஆனின் புறந்தோற்றி மாற்று; கா. (84)

---

பி—பே. தீர்கிலன் காணினிக். †கரையரம்பை.

கண்டீர வந்தங்கு காட்டிரு
வீருங் கதிர்மறைவுங்
கண்டீர வந்தனி போவதிங்
கேதங்கிக் காலையிற்போங்
கண்டீர வந்த மொழிபங்க
னைத்தென்னங் காமருதூர்க்
கண்டீர வந்தனை செய்தூர்
புகுமின் கவலையற்றே. (85)

(எ-து) கண்டீரவம் தங்கு காட்டு இருவீரும் கதிர் மறைவும் கண்டீர்=சிங்கம் உறைகின்ற (நீங்கள் செல்லும்) காட்டிலே நீங்களிருவீருமன்றி உங்களுக்கு இன்று ஒரு துணையுமில்லை; ஆதித்தன் அத்தமனமாவதும் கண்டீர்; அவம் தனி போவது = தனியே நீங்கள் போவது நன்றல்ல; இங்கே தங்கி காலையில் போம்= இந்த வரையிடத்தே தங்கிக் காலைப் பொழுதிலே போமின்; தென்னம் கா மருதூர்க்கண் =கா வென்னும்படி நிறைந்த தென்ன மரங்கள் சூழ்ந்த மருதூரின்கண்; கண்டு ஈர வந்த மொழி பங்கனை தீர வந்தனை செய்து= கற்கண்டினையும் அகற்றுவிப்பதொரு மொழியினையுடைய உமாதேவியை ஒரு பங்காகக் கொண்ட சுவாமியை நன்றாக வந்தனை செய்து; ஊர் புகுமின் கவலை அற்று ஏ=உங்களூரிலே சேருங்கோள் வேறொரு கவலையுமின்றி (எ-று)

இது விருந்து விலக்கல்.

(முடிபு) (வழிச்செல்லும் காதலரே!) இருவீரும் காட்டிலே கதிர் மறைவும் கண்டீர்! (இக்காட்டிலே இந்தப் பொழுதிலே) தனியாகப் போவது அவம்; (ஆதலால்) மருதூர்க்கண் கண்டீரவந்த மொழிபங்கனைத் தீர வந்தனை செய்து (தங்கியிருந்து) கவலையற்று ஊர் புகுமின். (85)

வலையம் பரிக்குங் கடற்றுறை
வாகறை வாளரவ
வலையம் பரிக்கும் புயத்திற்கொண்
டாய்மரு தூரரசே
வலையம் பரிக்கு மிசையே
யசைய மதுரைவந்தாய்
வலையம் பரிக்குவில் வாங்கினுண்
டோவென் மகட்குயிரே. (86)

(எ—து) வலை அம்பு அரிக்கும் கடல் துறைவா = வலையினைச் சலம் அரிக்கின்ற வளப்பம் பொருந்திய கடல் துறைவனே! சலம் வலையை அரிக்குதலாவது தான் அபகரித்துக் கொள்ளுதல். எனவே, பரவர் வலையை எடுத்துக் கடலிலே வீசுகையில் அவர் கையிற் பிடித்து இழுப்பனவாகிய கயிற்றையும் வலையையும் மீன்களின் விசையினாலே பறித்துக் கொண்டுபோம் என்றதனால், அம்பாகிய சலம் வலையை அரிக்கும் என்றார். கறை வாள் அரவம் வலையம் பரிக்கும் புயத்தில் கொண்டாய் = விடம் பொருந்திய வாள் போன்ற சர்ப்பத்தைப் பூண்பதொரு வாகு வலையமாகப் புயத்திற் றரித்தவனே! மருதூர் அரசே = மருதூர்க்குக் காவலனே! வலையம் பரிக்கு மிசையே அசைய மதுரை வந்தாய் = பரியின் மேலே வல்லயத்தை அசைத்துக் கொண்டு மதுரையிலே பாண்டியன் முன்னே வந்தவனே! வல்லயம்—எறியீட்டி. வலை அம்பர் இக்கு வில் வாங்கின் உண்டோ என் மகட்கு உயிர் ஏ = 'கவலை அம்பர்' என்பது தலைக்குறை விதியால் 'வலை அம்பர்' எனக் குறைந்து நின்றது. கவலையைக் கொடுக்கும் அம்பாகிய பஞ்ச பாணத்தையுடைய

மன்மதனுனவன். 'ஐயம்பு வல்லவர்' என்று விகுதி மாற்றியுங் கொள்க. வலை அம்பர் என்பதும் ஐயம்பு வல்லவர் என்பதும் மன்மதனைக் குறிக்கும். இக்கு வில் —கருப்பம்வில். வாங்கில்—கையில் எடுத்துக் கொண்டா லுயின்; என் மகட்கு உயிர் உண்டோ — தரிக்குமோ (எ-று).

இது செவிலி கூற்று.

(முடிபு) கடல் துறைவா! அரவத்தை வலையமாகப் புயத்திற் கொண்டோய்! பரியின் மிசை மதுரை வந்தோய்! மருதூர் அரசே! கவலை அம்பர் (மன்மதன்) இக்கு வில்லை வாங்கின் என் மகட்கு உயிர் உண்டோ. (86)

மகவா னரம்பையர் சந்திர
சூரியர் மாமுனிவோர்
மகவா னரம்புவி போற்றுங்
கவுரி மருவியவா
மகவா னரம்புயன் மாயோ
னெருங்க மருங்கிற்கொண்ட
மகவா னரம்பையங் காமரு
தூர்க்கொன்றை மாலையனே. (87)

(எ-து) மகவான் அரம்பையர் சந்திர சூரியர் மா முனிவோர் மக வானரம் புவி போற்றும் கவுரி மருவிய வாம கவான் = தேவேந்திரன் தெய்வப் பெண்கள் திங்கள் ஞாயிறு பெரிய முனிவர் பராக்கிரம முடைய அனுமார் புவியிடத்தனைவர் இவர்களெல்லாம் போற்று கின்ற சுவாமியே! கவுரியை மருவிய இடக்கவானை யுடையவரே; அம்புயன் மாயோன் நெருங்க மருங்கில்

கொண்ட மகவான் = பிரமா விட்டுணு என்னும் இருவரையும் நெருங்கி நின்று உடம்பில் ஒன்ற இரண்டு பாரிசத்திலும் கொண்ட பெரியவனே! அரம்பையம் கா மருதூர் கொன்றை மாலையன் ஏ= வாழைச் சோலையினை யுடைய மருதூர்க்கண் வாழும் கொன்றை மாலையனே! என்று உன்னைப் போற்றுவேன் (எ-று).

(முடிபு) கவுரி மருவிய வாம கவானை யுடையவனே! அம்புயனையும் மாயோனையும் மருங்கிற்கொண்ட மகவானே! மருதூர்க் கொன்றை மாலையனே! என்று போற்றுவேன். (87)

**மாலையம் போருக நோக்குங்கண்**
**ணனை மதியங்கொன்றை**
**மாலையம் போருகந் தோறுந்**
**தரித்து*மன் ருடியப்புன்**
**மாலையம் போருகந் தந்நா**
**ளிரணியன் மார்பகழ்ந்த**
**†மாலையம் போருகை மாமரு**
**தூரனை வந்திப்பனே,** (88)

(எ-து) மால் ஐ அம்போர் உக நோக்கும் கண்ணனை = பெருமை பொருந்திய ஐந்து அம்பையுடைய மன்மதன் இறக்கும்படி விழித்த கண்ணையுடையவனை; மதியம் கொன்றை மாலை அம்பு ஓர் உகந்தோறும் தரித்த மன்று ஆடி = சந்திரனையும் கொன்றை மாலையையும் சலமாகிய கங்கையினையும் உகங்கள் தோறும் அணிந்தவனைத் திருவம்பலத்தில் ஆடினவனை; அப் புன்

---

பி-பே *மன்ருடியைப்.
†மாலையம் போருகஞ் சூழ் மருதூரனை.

மாலை அம் போர் உகந்து அந் நாள் இரணியன் மார்பு அகழ்ந்த மாலை அம்பு ஒருகை மா மருதூரனை வந்திப்பன் ஏ=அந்தப் புன்மாலையாகிய, இரவு மன்றிப் பகலு மன்றி அர்த்தமான அந்நாள் அந்தச் சமயத்திலே; அம்—அழகிய; போர் உகந்து—உயுத்தத்தை விரும்பும்படி; இரணியனுடைய மார்பு இடந்த மாலை — விட்டுணுவை; அம்பு ஒரு கைய = அம்பாகத் தெரிந்த கையினை யுடையவனை; மா மருதூரனை யான் வந்திப்பேன் (எ–று).

(முடிபு) கண்ணனை, மன்றுடியை, இரனியன் மார்பு அகழ்ந்த மாலை அம்பாக ஒரும் கையையுடைய மாமருதூரனை யான் வந்திப்பன். (88)

வந்திக்கு மாதர பத்தர்சித்
தத்தன் மனமகிழ்ந்து
வந்திக்கு மாத ரமரா
வதிதொழு மன்னனெல்லு
வந்திக்கு மாதரக் கன்றருந்
தும்மரு தூரனமன்
வந்திக்கு மாதரப் போதணு
காதென்னுள் வைகுவனே. (89)

(எ–து) வந்திக்கும் ஆதரம் பத்தர் சித்தத்தன் = ஆதரவுடனே வணங்கும் அன்பர்; அவர்களுடைய இதயத்திலிருப்பவன்; மனம் மகிழ்ந்து வந்து இக்கு மாதர் அமராவதி தொழும் மன்னன் = மனமகிழ்ச்சியுடனே இவ்வுலகில் வந்து தேவருலகப் பெண்களும் தேவேந்திரனும் தொழும்படியான மன்னன்; நெல் உவந்து இக்கும் ஆ தர கன்று அருந்தும் மருதூரன் = நெல்லி

யையும், இக்கு—கரும்புகளையும், ஆ—பசுக்களும், தர கன்று—அனவரதப்படும் கன்றுகளும் அருந்தி உவந்திருக்கும் அத்தகைய வளப்பம் பொருந்திய மருதூரன்; நமன் வந்திக்கும் ஆதர போது அணுகாது என் உள் வைகுவன் = இயமனுனவனுல் செய்யப்படும் வந்திக்கு (கட்டாயத்திற்கு) யான் ஆதரப்படும் பொழுது (சங்கிக்கும் பொழுது) அணுகாதபடிக்கு என் மனத்துள்ளே வைகுவன் (எ—று).

(முடிபு) பத்தர் சித்தத்தன், தொழும் மன்னன், மருதூரன் இயமன் அணுகாது என் உள் வைகுவன். (89)

வையம் புரந்தர மாலங்கி
வின்மலை மாசுணநாண்
வையம் புரந்தரர் வானவர்
பாகயன் மாமறையி
வையம் புரந்தர மாறப்
படைத்தனர் மாமதுரை
வையம் புரந்தர சாண்மரு
தூரர்தம் வல்லவமே. (90)

(எ—து) வை அம்பு உரம் தர மால் அங்கி=கூரிய அம்பு உறுதிப் பெறும்படிக்கு விட்டுணுவையும் அக்கினியையும் அவற்றில் அமைத்து; வில் மலை = மலையை வில்லாகவும்; மாசுணம் நாண் = பெரியதொரு சர்ப்பத்தை நாணுகவும்; வையம் புரந்தரர் வானவர்= தேவேந்திரன் முதலான தேவர்களையே தேராகவும்; பாகு அயன்=பிரமா தேர்ப்பாகனுகவும்; மா மறை= மாவென்னும் தேர்க்குதிரைகள் நாலும் வேதங்களாகவும்; இவை அம் புரம் தரம் மாற படைத்தனர் =

இவைகளை அழகுள்ள முப்புரமானவை மேன்மை குறையப் படைத்துக்கொண்டனர்; மாமதுரை வையம் புரந்து அரசு ஆள் மருதூரர் தம் வல்லவம் ஏ=பெரிய மதுரையம் பதியிலே வீற்றிருந்து உலகத்தையெல்லாம் புரந்து அரசாளும் மருதூரருடைய வல்லபம் இது (எ-று).

(முடிபு) அம்பு மாலும் அங்கியும்; வில் மலை; நாண் மாசுணம்; வையம் (தேர்) புரந்தர ராதி வானவர்; பாகு அயன்; மாவானவை மறை; இவை புரத்தின் தரம் மாறப் படைத்தனர்; மதுரையிலிருந்து வையம் புரந்து அரசாளும் மருதூரர்தம் வல்லபம் (இதுவாம்). (90)

வல்லிய மாம னதளுடை
யான்மரு தூரன்வள்ளி
வல்லிய மாமன் முருகன்
பிதாமும் மலங்களென்னும்
வல்லிய மாம னெகிழ்த்தென்னை
யாளுமென் மாட்டினிநீ
வல்லிய மாமனத் துண்ணினை
*யாய்கொல் வரத்தினியே (91)

(எ-து) வல்லியம் மா மன் அதள் உடையான் மருதூரன்=மருதூரில் பொருந்திய அரன் மா என்னும் (வல்லியத்தின்) புலியின், மன்—மன்னிய, அதளாகிய தோலை உடையாகக் கொண்டவன்; வள்ளி வல்லிய மாமன் முருகன் பிதா = வள்ளியம்மைக்கு வல்லமை அமைந்த மாமன்; வல்லியன்—சகலத்திலும் வல்லவன்; முருகனுக்குத் தந்தை; மும்மலங்கள் என்னும் வல்லி

பி–பே. *வரத்தினையே.

அமாமல் நெகிழ்த்து என்னை ஆளும்=மூன்று மலங்கள் என்னும் கொடிகள் பந்தியாமல் நெகிழச் செய்து என்னை அடிமைகொள்வான்; வல் இயமா மனத்து உள் நினையாய் கொல் வரத்து இனியே = வலியினை யுடைய கூற்றுவனே! இனி வருவதை மனத்தினுள் நினையாதை (எ-று).

கொல் அசை. அமலல்-பொருந்துதல்; அமாமல்-பொருந்தாமல்.

(முடிபு) அதள் உடையான், வள்ளி மாமன், முருகன் பிதா ஆகிய மருதூரன் மும்மலங்கள் என்னும் வல்லி அமாமல் என்னை நெகிழ்த்து ஆளும்; இயமா! இனி வரத்தை மனத்துள் நினையாய். (91)

**வரப்புடைக் குஞ்சிச் சடையான்**
**குவளை மதுவொழுகி**
**வரப்புடைக் குஞ்செறு மாமரு**
**தூர்வெற்ப மங்கைதன்பால்**
**வரப்புடைக் குஞ்சிங்கங் கங்குலின்**
***வாரல்வந் தாலெழிலி**
**வரப்புடைக் குங்கொங்கை யாதலின்**
**வேண்டும் வரைவினியே.** (92)

(எ-து) வரு அப்பு உடை குஞ்சி சடையான்= வருவதொரு கங்கையைத் தரித்துள்ள குஞ்சிச் சடையை யுடையவனுடைய; குவளை மது ஒழுகி வரப்பு உடைக்கும் செறு மா மருதூர் வெற்ப=குவளை மலரிலிருந்து தேன் ஒழுகி வரப்பினை உடைக்கும் வயல் சூழ்ந்த பெரிய மரு

பி-பே. *வாரலை வல்லெழிலி.

தூர் வெற்பனே! மங்கை தன் பால் வர புடைக்கும் சிங்கம் = நீ இந்த மங்கையிடத்து வருவாயாகில் சிங்கமானது உன்னைப் புடைக்கும்; அதனாலே, கங்குலில் வாரல் வந்தால் — இராத்திரி காலத்திலே வராதே; வந்தாயாகில்; எழில் இவர புடைக்கும் கொங்கை = அழகானது பொருந்த இவளுக்கு முலையானது புடைக்கும்; ஆதலின் வேண்டும் வரைவு இனி ஏ = ஆதலால் நீர் கலியாணம் முகித்துக் கொள்ளுகிறதை நினைத்து வரைந்து கொள்ளும் (எ—று).

இது வரைவு முடுக்கம்.

(முடிபு) சடையானுடைய மாமருதூர் வெற்ப! (நீ) கங்குலில் மங்கைதன்பால் வர (உன்னைச்) சிங்கம் புடைக்கும்; அதனால், வாரல்; வந்தால், இவளுக்குக் கொங்கை புடைக்கும் (பூரிக்கும்) ஆதலின் இனி வரைவு வேண்டும். (92)

*இனியம னச்சுத லில்லையென்
மேன்மன்ற லீன்கமலத்
தினியம னச்சுதன் போற்றும்
†பிரான்மரு தூரிறைவ
‡னினியம னச்சிதம் பெற்றிடுங்
கண்ட னிலங்குபொற்ற
ளினியம னச்சுரு திப்பொரு
ளோடு மிறைஞ்சுவனே. (93)

பி—பே. *வில்லைநெஞ் சேமன்ற லீர்ங்கமலத்
†மருதூ ரிறையா
‡மினியம னச்சுதம் போந்திடுங்.

(எ-து) மன்றல் ஈன் கமலத்து இனிய மன் = மணத்தைக் கொடுக்கும் தாமரை மலரிலே வாழும் இனிதான மன்னுகிய பிரமாவும்; அச்சுதன் = விட்டுணுவும்; போற்றும் பிரான் = போற்றுகின்ற பெருமான்; மருதூர் இறைவன் இனிய மன் = மருதூரிலே இனிதாக நிலைபெற்றிருக்கும் (மன்னியிருக்கும்) இறையவன்; நச்சு இதன் பெற்றிடும் கண்டன் = நஞ்சினுல் அங்கிதப்பட்டிருக்கும் மிடற்றினையுடையவன்; அங்கிதம் — உடற்றழும்பு அது இதம் இதன் என்ருயிற்று. இலங்கு பொன் தாள் = அவருடைய அழகுபொருந்திய விளங்கா நிற்கும் தாள்களை; இனிய மன சுருதி பொருளோடும் இறைஞ்சுவன் ஏ = இனிய மனம்-உவப்பாகிய மனம். அம்மனத்தோடு வேத மந்திரத்தால் துதித்து வணங்குவன்; ஆதலால், இனி யமன் நச்சுதல் இல்லை என் மேல் = இனி இயமனுனவன் விரும்பி என்மீது வருவதில்லை; வரப்பயப்படுவன் (எ-று).

(முடிபு) கமலத்து மன்னும் அச்சுதனும் போற்றும் பிரான்; கண்டான்; மருதூரிலே இனிமையாக மன்னும் இறைவன்; அத்தகையோனுடைய இலங்கு பொற்ருளை இனிய மனத்தோடும் சுருதிப் பொருளோடும் இறைஞ்சுவன்; ஆதலால், என்மேல் இனி இயமன் நச்சுதல் இல்லை.

இறையா மலகங்கை யான்மரு
தூர னிணையடியை
யிறையா மலக மெனக்கண்
டிறைஞ்சுவ *னென்கவிப்பாட்

பி-பே. *னென்கவிப் பாழ்க்கிறையா.

டிறையா மலக மகிழ்வுறப்
பாடுவ னிங்கியமற்
கிறையா மலகண்டித் †தெம்மேல்
வருவ தியல்பலவே (94)

(எ—து) இறை ஆமலகம் கையான் மருதூரன் = இறையாகிய சுவாமி; ஆலகால விடத்தை நெல்லிக்காய் போலக் கையிலே எடுத்தவன் (உள்ளங்கை நெல்லிக் கனி போல என் கைவசப்பட்டவன் என்றுமாம்) மருதூரினை யுடையவன்; இணை அடியை இறை ஆமலகம் என கண்டு இறைஞ்சுவன் = அவனுடைய இரண்டாகிய திருவடியை கரதல ஆமலகமாகக் கண்டு இறைஞ்சுவேன்; என் கவி பாட்டு = என்னுடைய இசை பொருந்திய கவியை; இறை ஆம் மல கம் மகிழ்வுறப் பாடுவன் = அம் ஆம் என நீண்டது. அம்—சலம் மருதூரனாகிய சுவாமியுடைய சலமாகிய கங்கை மல்கிய, கம்—சிரசு; மகிழ்வுற— சிரக்கம்பம் பண்ணப் பாடுவேன்; இங்கு இயமற்கு இறை யாம் அல = இவ்விடத்திலே இயமற்கு இறையிறுப்பதொரு குடியல்ல; கண்டித்து எம் மேல் வருவது இயல்பு அலவ = அவனுடைய மனது கண்டிதத்துடன் நம்மிடத்து வருவது இயல்பல்லவே (எ—று).

(முடிபு) மருதூரன் இணையடியை இறை ஆமலகம் என கண்டு இறைஞ்சுவன்; என் பாட்டினையுடைய கவியை இறை மகிழ்வுறப் பாடுவன்; இங்கு இயமற்கு இறை யாம் அல; அவன் கண்டித்து எம் மேல் வருதல் இயல்பல. (94)

இயலு மிசையும் பயின்மரு
தூருறை யின்னருளா

---

†தென் மேல்

**லியலு மிசையும் பரிசநின்**
**றேங்கிட *லெய்திலிவ**
**ணியலு மிசையு மிதுமுடிப்**
**பாயிங்குப் போலவெங்க**
**ளியலு மிசையும்பர் தம்பதி**
**நீயு மிருந்திடவே. (95)**

(எ–து) இயலும் இசையும் பயில் மருதூர் இறை இன் அருளால் = இயலிசை நாடகம் என்னும் முத்தமிழும் பயிலப்பட்ட மருதூர் இறைவன் இனிதாகிய திருவருளினால்; இயலும் இசையும் பரிசம் = நீ கொடுக்க இசைந்த பரிசம் ஏற்கும்; நின்று ஏங்கிடல் = நின்று உளம் வருந்தாதே; எய்தில் இவண் இயலும் இசையும் = இந்தப் படிச் செய்தால் கீர்த்தியும் உண்டாகும்; இது முடிப்பாய் = இந்த மணத்தை முடிப்பாயாக; இங்கு போல எங்கள் இயலும் இசை உம்பர் தம் பதி நீயும் இருந்திட = இவ்விடத்துக் கூடி வாழ்ந்த படி (களவுப் புணர்ச்சி போல) எமக்கு உயிராகிய தலைவியும் நீயும் உன்பதியில் உம்பர் தம் பதியாகிய தேவேந்திரன் நிகராக விருந்திட, இசை– மனம் நிர்மலமாக இந்தப்படி இசைவாயாக (எ–று).

(முடிபு) மருதூர் இறை அருளால் (தலைவனே!) நீ இசையும் பரிசம் இயலும்; ஏங்கிடல்; இவண் எய்தில் இசையும் இயலும்; இது முடிப்பாய்; இங்குப் போல எங்கள் இயலும் நீயும் உம்பர்தம் பதி நிகராக இருந்திட இசை. (95)

**இருவரும் பன்ன மலர்வாவி**
**யிற்*செலி னின்கழுநீ**

---

பி–பே. *லெய்த லிவ. *செலி னீர்ங்கழுநீ

ரிருவரும் பன்னநின் கண்கண்டு
வாடு மிருளெனக்கு
ளிருவரும் பன்ன நெருங்கிய
காவி லியான்செல்வனீ
யிருவரும் பன்னகப் பூண்மரு
தூர னெழில்வரைக்கே. (96)

(எ-து) இருவரும் பன்னக பூண் மருதூரன் எழில் வரைக்கு = (தோழியும் தலைவியுமாகிய) நாம் இரண்டு பேரும் பாம்பினை அணிந்த மருதூரினை யுடைய சுவாமி யின் அழகு பொருந்திய வரையிடத்தில்; பன்ன மலர் வாவியில் செலின் = மலர் வாவியில் மலர் பன்னச் செலின் என்று கூட்டுக. மலரை யுடைய வாவியிலே அம்மலரைக் கொய்யப் போவோமே யானல்; இன் கழு நீர் இரு அரும்பு அன்ன நின் கண் கண்டு வாடும்= இனிமை பொருந்திய செங்கழுநீரானது அதனுடைய இரு அரும்புடன் மலர் போன்ற நின் கண்ணைக் கண்டு தனது மலரும் உனது கண்ணுக்கு இணையல்ல வென்று கருதி வாடும்; செங்கழுநீரினிதழ் அழகழியும்; இருள் என குளிரும் வரும் = இருள் போல நிறைந்த குளிரும் வரும்; அவ்விடத்தில் இப்படிக் குளிர் உண்டாகில் அது பொறுக்கலரிது. பன்ன நெருங்கிய காவில் யான் செல் வன் நீ இரு வரும் = பன்னும்படி நெருங்கிய சோலைக் கண் யான் மட்டும் செல்வேன்; நீ இங்ஙன் இரு; 'பன்ன' என்று பிரிக்காமல் 'அன்ன' என்று பிரித்து இவ்வித மான நெருங்கிய காவில் அல்லது அன்னங்கள் நிறைந்த கா எனவும் கொள்க. வாவியுள்ளதாதலின் அன்னம் கூறியது. யான் செல்வன் வரும்=யான் காவின் வாவி யிடத்தேகி உனக்கான கையுறை கொண்டு வருமள வும்; நீ இரு=நீ இவ்விடத்திலே இருப்பாயாக (எ-று).

இப்பாட்டு தலைவியைப் பாங்கி இடத்துய்த்தல்.

(முடிபு) (தலைவியே!) பன்னகப் பூண் மருதூரன் எழில் வரைக்கண் வாவிக்கு இருவரும் செலின் உன் கண் கண்டு செங்கழுநீர் வாடும்; இருள் எனக் குளிரும் வரும் (அதனால்) காவில் யான் செல்வன் வரும் (அளவும்) நீ (இவ்விடத்தில்) இரு. (96)

வரைவிலங் கையன் றனதஞ்
செழுத்து மறந்திருந்த
வரைவிலங் கையன் மருதூரன்
வெற்பின் வடிவிதென்ன
வரைவிலங் கையந் தருஞ்சிற்
றிடைச்சிக்கு மன்னற்குமிவ்
வரைவிலங் கையன் றடர்த்தானுந்
தேவியு மானினவே. (97)

(எ-து) வரை வில் அம் கையன் = மலையாகிய வில்லினை அங்கையிற் றரித்தவன்; தனது அஞ்சு எழுத்து மறந்து இருந்தவரை விலங்கு ஐயன் = தன்னுடைய அஞ்செழுத்தையும் மறந்திருந்த அவர்களை விட்டு நீங்கும் கடவுளாகிய; மருதூரன் வெற்பில் = மருதூரனது மலையின்கண்; வடிவு இது என்ன = அழகெல்லாம் இது வென்னும் படிக்கு; வரை இலங்கு ஐயன் தரும் சிற்றிடைச்சிக்கும் மன்னற்கும் = இலங்கு ஐயனாகிய பிரமாவானவன்; வரை-எழுதித்தரும் அதாவது உண்டாக்கப் பட்ட சிற்றிடைச்சிக்கும் மன்னாகிய தலைவற்கும்; இவ் வரைவு = இப்போது பண்ணிய கலியாண மாவது கண்டு; இலங்கை அன்று அடர்த்தானும் தேவியும் மானின ஏ = இலங்கையை முன்னாளிலே யடர்த்த இராமரும் அவருடைய தேவியாகிய சீதையும் நம்மவராகிய இருவருடைய வனப்புக்கும் காதலுக்கும் ஒவ்வார்கள் (எ-று).

இப்பாட்டு செவிலி நற்றய்க்கு இருவர் காதல் அறிவித்தது.

(முடிபு) மருதூரன் வெற்பில் (நம்மகளாகிய) சிற்றிடைச்சிக்கும் மன்னற்கும் (நடந்த) இவ்வரைவு இலங்கை அடர்த்தானும் தேவியும் (செய்து கொண்ட வரைவை) மானின? (மானு என்பது கருத்து) (97)

மானத் தரையரை வன்புலித்
தோலரை வட்டறுத்த
மானத் தரையரைத் தென்மரு
தூரரை மாமலரோன்
மானத் தரையரை வாழ்த்தி
வணங்குமின் வானத்தரு
மானத் தரையரை வைப்பரப்
பாற்சிவ மண்டலத்தே. (98)

(எ—து) மான் அத்தரை=மானைக் கையிலே யுடையவரை; அரை வன் புலி தோலரை=வலிதாகிய புலித் தோலை அரையிலே யுடையவரை; வட்டு அறுத்த மான் அத்த அரையரை = வட்டறுத்தது இவ்வளவென்று வரையறுத்தது. மான்—பார்வதி. தனது திருமேனியிற் பாதி இவ்வளவென்று வரையறுத்து, அந்தப் பாதியிலே மான் போன்ற பார்வதியாரை அமைத்துக் கொண்டவரை; தென் மருதூரரை=அழகிய மருதூரினையுடையவரை; மா மலரோன் மான் நத்தர் ஐயரை=மாமலரோனாகிய பிரமனுக்கும் மகத்தாகிய சங்கினைத் தரித்த விட்டுணுவிற்கும் சுவாமியானவரை; வாழ்த்தி வணங்குமின்—வாழ்த்துரைத்துப் பணிமின்; வானத்தரும் மான =தேவர்களும் நாணமடையும்படி; தரையரை = பூவுலகத்திலுள்ள மாந்தர்களை; வைப்பர் அப்பால் சிவ மண்டலத்தே = தேவவுலகத்திற்கும் அப்புறமான சிவலோகத்திலே வைப்பர் (எ—று).

(முடிபு) மான் அத்தரை, புலித்தோலரை வட்டறுத்த மான் அத்த அரையரை, மலரோன் நத்தர் ஐயரை, தென் மருதூரரை வாழ்த்தி வணங்குமின்; (இவ்வாறு வணங்கின்) தரையரை வானத்தரும் மான (நாண) அப்பால் சிவ மண்டலத்தே வைப்பர்.

(குறிப்பு) தேவலோகத்திற்கு அப்புறமான சிவலோகம் என்னும் கருத்துடன் "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க், குயர்ந்த வுலகம் புகும்" என்னும் திருக்குறட் கருத்தை ஒப்பிட்டுணர்க. (98)

**மண்டல முண்டவன் கண்டறி**
**யாதவன் வண்டமிழ்க்க**
**மண்டல முண்ட முனிமுத**
**னால்வர் வணங்குமையன்**
**மண்டல முண்டகக் காடுழக்**
**கும்மரு தூரன்முக**
**மண்டல முண்டன்பு செய்நெஞ்ச**
**மேயஞ்சன் மாவினைக்கே.** (99)

(எ-து) மண் தலம் உண்டவன் கண்டு அறியாதவன் = மண் தலத்தை உண்டவனை விட்டுணுவினாலும் கண்டு அறியப்படாதவன்; வண் தமிழ் கமண்டலம் முண்டம் முனி முதல் நால்வர் வணங்கும் ஐயன் = வண்மையான தமிழினையும் கமண்டலத்தையும் சிரோ முண்டகத்தையும் உடைய முனியாகிய அகத்தியன் முதலாகிய நால்வர் இருடிகளும் வணங்கப்படாநின்ற சுவாமி; மண்டு அலம் முண்டக காடு உழக்கும் மருதூரன் = நிலத்திலே மண்டப்பட்ட கலப்பையானது வயலிலே காடு போன்று நிறைந்திருக்கும் தாமரைகளைக் குழப்பும் வளப்பம்

பொருந்திய மருதூரன்; முக மண்டலம் உண்டு=இவ் விதமான சுவாமியினுடைய திருமுக மண்டலம் நமக்கு உதவியாக உண்டு; அன்பு செய் நெஞ்சமே=அவன் திருவுளத்திற் கேற்பதொரு அன்பினை மனமே! செய் வாயாக; மா வினைக்கே அஞ்சல்=பெரியதாகிய வினைக்குப் பயப்படாதே (எ-று).

(முடிபு) மண்டளம் உண்டவன் கண்டு அறியாத வனும், முனி முதலான நால்வரும் வணங்கும் ஐயனும் ஆகிய மருதூரன் முக மண்டலம் உண்டு; நெஞ்சமே! அன்புசெய்; மா வினைக்கே அஞ்சல். (99)

**மாவி னலங்ககலச் செற்றமா**
**றங்கு வாமபங்கர்**
**மாவி னலங்கனி நீர்செந்நெற்**
**பாய்மரு தூரர்மலை**
**மாவி னலங்க வளைத்தவர்**
**பாதம் வணங்கினர்க்கு**
***மாவி னலங்கலங் கத்தோளில்**
**வாழு மலர்த்திருவே.** (100)

(எ-து) மா இனல் அங்கு அகல செற்ற மால் தங்கு வாம பங்கர் = மா-யானை; அதனுடைய துயரமானது அந்த வாவியினிடத்தேயே அகலும்படிக்கு முதலையைக் கொன்ற விட்டுணு தங்கப்பட்ட வாம பாகத்தை யுடையவர்; மாவின் நல் அம் கனி நீர் செந்நெல் பாய் மருதூரர் = மாமரத்தின்மிகுந்த அழகிய கனியின் சாறு செந்நெற்குப் பாயும் வளப்பம் பொருந்திய மருதூரர்; மலை மா வில் நலங்க வளைத்தவர் = மகா மேருவாகிய

பி-பே. *மாவி னலங்கலங் கற்றோளில்

மலையைக் கையினாலே செவ்வி கெட வில்லாக வளைத்தவர்; பாதம் வணங்கினர்க்கு=அவருடைய திருவடியை வணங்கினவர்க்கு; மா இன் அலங்கல் அங்க தோளில் வாழும் மலர் திரு ஏ = மா இன் அலங்கல் அங்கம்—அலங்கல் பொருந்தும் மகத்தான அங்கமுந்திடம் பெற; தோளில் வாழும் மலர் திருவே-தோளிலே எப்போதும் பிரியாமல் மலரினில் இருக்கும் திருவானவள் இருக்கப் பெற்று வாழ்வார் (எ-று).

(முடிபு) மால் தங்கு வாம பங்கர், மலைவில் வளைத்தவர், ஆகிய மருதூரர் பாதம் வணங்கினர்க்குத் தோளில் மலர்த்திரு வாழும்; (அவ்வகை அவர் வாழ்வர்). (100)

தலைமலை கண்ட தேவர் இயற்றிய மருதூரந்தாதியும் அதன் பழைய உரையும் முற்றும்

(குறிப்பு) கீழ்வரும் குறிப்பு சரஸ்வதி மகால் சுவடியில் உள்ளது:—

"வேலு மயிலும் துணை. இரத்தாட்சிஞு அற்பசிமீ 10வ சனிவாரநாள் செம்பரம்பாக்கம் கறுப்ப முதலியார் புத்திரன் ஆறுமுகம் மருதூரந்தாதி உரை எழுதி நிறைந்தது. முற்றும். சரவணபவர் ரெட்சிக்கக்கடவர்.

# மருதூரந்தாதி பாட்டு முதற்குறிப்பு

## அகர வரிசை

( எண் பக்க எண் )


| பாட்டு | |
|---|---|
| அகனகத் | 5 |
| அச்சங் | 30 |
| அஞ்சக் | 29 |
| அஞ்சுக | 39 |
| அணியவ | 41 |
| அந்தத் | 41 |
| அப்புக் | 27 |
| அம்பர | 42 |
| அய்யம் | 25 |
| அரியர | 8 |
| அரும்பரவைக் | 26 |
| அருளத்தனை | 24 |
| அலையம் | 7 |
| அவதரிக்கும் | 9 |
| அவனித் | 37 |
| அவனியம் | 84 |
| அறுகாலனஞ் | 6 |
| ஆலயனங்க | 10 |
| ஆவிக் | 28 |
| ஆற்றலைத் | 38 |
| இடத்தே | 78 |
| இயலு | 98 |
| இரவித | 76 |

| பாட்டு | |
|---|---|
| இரும்பல | 75 |
| இருவரும் | 99 |
| இலையை | 43 |
| இறையா | 97 |
| இனியம | 96 |
| எழுதாரணி | 45 |
| என்றலைக் | 44 |
| என்று | 77 |
| ஒருகொம் | 1 |
| கூட்டா | 54 |
| கடனந்தி | 47 |
| கடியவம் | 56 |
| கண்டங் | 19 |
| கண்டனை | 46 |
| கண்டீர | 88 |
| கந்தர | 86 |
| கருமங் | 48 |
| கரைவா | 53 |
| கல்லார | 57 |
| கலங்கா | 85 |
| கழலாத | 49 |
| களங்கந் | 50 |

| பாட்டு | | பாட்டு | |
|---|---|---|---|
| கற்பனை | 55 | மகவா | 90 |
| கனகத்தமர | 21 | மண்டல | 103 |
| காதலை | 87 | மலங்கு | 18 |
| காப்பரவப் | 20 | மலரம்பை | 16 |
| காலம் | 22 | மனமாறு | 12 |
| காவல | 51 | மாலையம் | 91 |
| குலஞ்சுகந் | 59 | மாவினலங் | 104 |
| குவலையங் | 58 | மாருமதிக்க | 13 |
| கையுடை | 52 | மானத் | 102 |
| சங்கர | 36 | முடியப்படு | 83 |
| சரக்கன் | 63 | முலையம் | 77 |
| தண்டலை | 60 | முனியாய | 81 |
| தமர | 64 | வணங்கரி | 11 |
| தரவாக | 35 | வந்திக்கு | 92 |
| தவன | 4 | வந்தியங் | 32 |
| தனக்கடங் | 65 | வரப்புடைக் | 95 |
| தாபர | 62 | வரம்பல | 33 |
| திருக்கண்ட | 3 | வரையரம் | 31 |
| திருப்பங்க | 2 | வரைவிலங் | 101 |
| நமனத் | 4 | வல்லிய | 94 |
| பங்கமுகந் | 66 | வலவம்பட | 14 |
| பங்கைய | 69 | வலையம் | 89 |
| பணியாத | 71 | வலையலை | 15 |
| பதங்கடந் | 68 | வனத்தவ | 17 |
| பயனந்த | 73 | வினையகல் | 82 |
| பரமாக | 23 | வேலைக்கயலைக் | 72 |
| பரவாதிருக்கை | 67 | வையம்பரவ | 34 |
| பாவக | 70 | வையம் புரந்தர | 93 |


★ ★ ★